5036.

# மலையகக் கல்வி சில சிந்தனைகள்

சோ. சந்திரசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.811

# நூல் விபரம்

நூலின் பெயர் : மலையகக்கல்வி - சில சிந்தனைகள்
ஆசிரியர் : சோ. சந்திரசேகரன்
© உரிமை : ஆசிரியருக்கு
ISBN: 955-96667-00-3
முதற் பதிப்பு : 01.02.1999
பொருள் : கல்வியியல் - சிறுபான்மையினரின் கல்விநிலை
பதிப்பு : வின்னேஸ் (பிரைவேட்)
30, நிஹால் சில்வா மாவத்தை,
கிருலப்பனை,கொழும்பு -06.
வெளியீட்டாளர் : கவிதா பதிப்பகம்
58, 1/3-37 ஆவது ஒழுங்கை
கொழும்பு- 06.

Name of the Book : Some thoughts on Plantation education
Author : S.Sandarasegaram
© Rights To Author
ISBN :955-96667-00-3
First Edition : 01.02.1999
Printer : WINNERS (PVT)
30, Nihal Silva Mawatha,
Kirulapone,Colombo 06.
Hot Line: 077-322684
Publisher : Kavidha Publisher
58, 1/3- 37th Lane, Colombo-06
Phone : 596036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GOVT. TEACHERS TRAINING COLLEGE
YTHANSIDE - KOTAGALA.

# மலையகக் கல்வி - சில சிந்தனைகள்

அரசினர் ஆசிரியர் கலாசாலை
நூலகம்
இல.......................
கொட்டகலை

சோ. சந்திரசேகரன்
கல்வியியல் பேராசிரியர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்

கவிதா பதிப்பகம்
58-1/3, 37ஆவது ஒழுங்கை
கொழும்பு-06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பவர் சிந்தனையில்

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமது கலை கலாசாரத்தை உலகிற்கு எடுத்துக் காட்டியவர்கள் தமிழர்கள். ஔவை, திருவள்ளுவர், கம்பன் போன்ற பல அறிஞர்கள் பிறந்து வளர்ந்து தங்களுக்கும், தங்கள் சமூகத்திற்கும் மட்டுமல்லாமல் தாய் நாட்டிற்கும் பல வேற்றுமைகளுக்கு மத்தியிலும் ஒற்றுமையை பேணிக் காத்த பெருமை பாரத பூமியில் பிறந்தவர்களுக்கு இருந்தது என்பது வெள்ளிடை மலை.

இயற்கை அன்னையின் சீற்றத்தினாலே பல்வேறு கண்டங்களாகப் பிரிந்த பாரத பூமி எங்கும் சென்று தங்கள் கலை கலாசாரத்தைப் பேணிக் காத்த பெருமை பாரத மாதா முன் பெற்ற பூர்வீகக் குடி மக்களாகிய தமிழர்களையே சாரும்.

ஆனால் குமரிக் கோட்டத்தின் தென் முனையாக அமைந்து பின் ஈழம் எனப் பெயர் கொண்ட சிங்கக் கொடி பறக்கும் சிங்காரத் திருநாட்டில் வந்து குடியமர்ந்தவர்களே இன்றும் பட்டியில் அடைக்கப்பட்ட மந்தைகள் போல் விளங்குகிறார்கள். இம் மலையக மக்கள் தெரிந்தும் தெரியாமலும், விரும்பியும் விரும்பாமலும் இரவும் பகலும் அல்லல் பட்டாலும் ஆர்வமுடன் தொழில் புரிந்து அரைக் காசு பெற்று அரை வயிற்றுக்கு கஞ்சி குடித்து தம் வாழ் நாளை போக்குகின்றனர்.

இவர்கள் குறைகளைக் கண்டறிந்து இவர்களின் துயர்களை எல்லாம் போக்க மட்டுமல்லாது, இரவும் பகலும் இதே சிந்தனையோடு பல நூல்களை எழுதி சாதனை படைத்தவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் ஆவர். இவரின் படைப்புகள் யாவும் மக்களின் எழுச்சிக்கு வித்திட வழிகோலும் என்பதில் ஐயம் ஏதுமில்லை. இவரின் பிந்திய படைப்பாகிய மலையகக் கல்வியின் - சில சிந்தனைகள் என்ற நூலை முதற் தடவையாக எம்மிடம் அச்சிட தந்தமையையிட்டு பெருமையடைகின்றோம்.

இரண்டாயிரமாம் ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கும் மக்களை நன்கு வழிநடத்த மேலும் பல நூல்களை எழுதவும், அவற்றைச் செப்பமாக அச்சுத் தேரில் ஏற்றி உலகெங்கும் பவனிவர வழி அமைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டி விடைபெறுகிறேன்.

அ.சிவராஜா,
வின்னேஸ் ஸ்தாபனம்,
30, நிகால் சில்வா மாவத்தை,
கிருலப்பனை, கொழும்பு.06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மலையக தமிழ் மக்களின் சமூக பொருளாதார நிலைமைகளைப் பின்னணியாகக் கொண்டு அம்மக்களது கல்வித் துறைச்சார்ந்த பல்வேறு பிரச்சினைகளைப் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் இந்நூலில் வெவ்வேறான கட்டுரைகளில் ஆராய்ந்துள்ளார். தனிப்பட்ட கட்டுரைகளாக உருவாக்கப்பட்ட இவ்வாக்கங்கள் மலையக தமிழ் மக்களது கல்விப் பிரச்சினைகளை பல கோணங்களில் இருந்தும் நோக்குவதாக அமைந்துள்ளன.

இலங்கையின் பெருந்தோட்டங்களுக்கு தொழிலாளர்களாக கொண்டு வரப்பட்டவர்கள் நீண்ட காலமாக கல்விப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை பெறாததன் காரணமாக அவர்களின் பல தலைமுறையினர் கல்வியறிவற்றவர்களாக வரலாற்றில் மறைந்தொழிந்து விட்டனர். பின்வந்த காலங்களில் பெருந்தோட்டப் பாடசாலைகளில் அவர்களுக்கு வழங்கப்பட்ட மிகவும் தரங்குறைந்த கல்வி காரணமாக அவர்களின் இன்றைய பரம்பரையினரிலும் ஏறத்தாழ 40 வீதமானோர் எழுத்தறிவற்றவர்களாக காணப்படுகின்றனர். இது பற்றிய விபரங்கள் இந்நூலில் காணப்படும் முதலிரண்டு கட்டுரைகளிலும் எடுத்தாராயப்பட்டுள்ளன.

மலையகக் கல்வியின் இன்றைய தரங்கள் பற்றியும் இச்சமூகத்தினர் பாடசாலைக் கல்வியை இடையில் விட்டுவிடுதல், உயர்கல்வியில் எந்தளவுக்கு பின்தங்கியவர்களாக காணப்படுகின்றனர் என்பன பற்றியும், அவர்களுடைய கல்வி பொதுத் தராதர சாதாரண, உயர்தர பரீட்சைகளில் பெற்று வரும் பெறுபேறுகள் பற்றியும் தனித்தனிக்கட்டுரைகளில் ஆராயப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் முழு இலங்கையிலும் 525,000 மாணவர்கள் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு தோற்றியிருக்க இலங்கையின் குடித்தொகையில் 6 வீதமான மலையக தமிழ் மாணவர்களில் 6500 பேரே தோற்றியுள்ளனர். விகிதாரசாரப்படி பார்த்தால் இவர்களில் 34.000 பேர் இப்பரீட்சைக்கு தோற்றியிருக்க வேண்டும். க.பொ.த(உ.த) பரீட்சைக்கு மொத்தமாக 175,000 பேர் தோற்றியிருந்தார்கள். அதில் ஆறு (6) வீதமான 10.500 பேர் மலையக தமிழ் மாணவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால் ஆயிரத்திற்கும் குறைந்த மாணவர்களே தோற்றியுள்ளனர். பல்கலைக்கழக கல்வியிலோ இன்னும் மோசமான பிரதிநிதித்துவத்தினையே நாம் காணமுடிகிறது. ஏறத்தாழ 35,000 பேர் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதில் 2,100பேர் மலையக இளைஞர்களாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆனால் அவர்களுடைய எண்ணிக்கை இருநூறிற்கும் குறைவாகவே கடந்த வருடம் காணப்பட்டது. இவை யாவும் இச்சமூகத்தினர் கல்வியில் பின் தங்கிய நிலைமைகளை எடுத்துக் கூறும் சிறந்த குறிகாட்டிகளாகும்.

இலங்கையில் காலத்திற்கு காலம் கல்வித் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களும் மாற்றங்களும் ஏற்பட்டு வந்துள்ளன. ஆனால் அத்தகைய கல்வி வளர்ச்சிக் கடலில் இம்மக்கள் ஒரு தீவாக ஒதுக்கப்பட்டே இருந்த வந்துள்ளமையினையே அவதானிக்க முடிகிறது. இவை யாவற்றையும் இந்நூலாசிரியர் தமது கட்டுரைகளில் எடுத்துக் காட்டியுள்ளார்.

பின் தங்கிய மக்களை ஏற்கனவே வளர்ந்து விட்ட பிரதான சமூக நீரோட்டத்தில் கலக்க செய்ய வேண்டுமானால் அதற்கு " நியாயமான பக்கஞ் சார்ந்த கொள்கைகள்" ( Partial Policies) பின்பற்றப்பட வேண்டும் என்ற பரந்த அபிவிருத்தி சார்ந்த திட்டமிடல் கொள்கையின் தேவைபற்றியும் ஆசிரியர் வற்புறுத்தி கூறியுள்ளார். இவ்வணுகுமுறை வரவேற்கத்தக்கதாகும்.

மலையகம் இன்று கல்வியில் பின்தங்கியிருப்பதற்கு அங்குள்ள கல்வி நிறுவனங்கள் தரமாகவும் போதியளவிலும் இல்லாமையும் ஒரு முக்கிய காரணமாகும். அவர்கள் மத்தியில் உயர் கல்வி வளர வேண்டுமானால் அதற்குத் தேவையான முன் தேவைகளில் அவர்களுக்கான ஒரு பல்கலைக்கழகமும் ஒன்றாகும். அதற்கான தர்க்க ரீதியான விளக்கங்களை நூலாசிரியர் தன் கட்டுரையில் எழுதியுள்ளார். இக்கட்டுரையில் அவருடைய தீர்க்க தரிசன பார்வை மலையக மக்களின் முன்னேற்றம் பற்றிய ஒரு வரவேற்கத்தக்க நிலைப்பாடாகும்.

பின் தங்கிய ஒரு சமூகத்தின் இன்றைய நிலைமை பற்றி சாத்திர பூர்வமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போதே அதற்கான பரிகாரங்களையும் கண்டறிய முடியும். பின்தங்கிய நிலைமைகளின் தாற்பரியங்கள் எடுத்துக் கூறப்படும் போது தான் அவற்றிற்கு எதிரான பொதுசன அபிப்பிராயம் உருவாக முடியும். அத்தகைய அபிப்பிராயங்களே பின்னர் ஆளுவோரை அவற்றிற்கான தீர்வு நடவடிக்கைகளை எடுக்க தூண்டுவிக்கும் ஆற்றல் மிக்கவையாக உருவாக்கின்றன. பின்தங்கிய மக்களும் தமது பிரச்சினைகளை இனங்காண வேண்டும். இத்தகைய தேவைகளை பூர்த்தி செய்ய முறையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. மலையக தமிழ் கல்வி நிலைப்பற்றிய கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் மேற்குறிப்பிட்ட அனைத்து சாராருக்கும் சிறந்த தகவல் மூலமாக அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சந்திரசேகரன் நீண்ட காலமாக பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் விரிவுரையாற்றிய அனுபவங்களையும், அத்துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களை வெளியிட்ட அனுபவமும் கொண்டவர். தினசரி பத்திரிகைகளிலும் இவருடைய ஆக்கங்கள் தொடர்ந்தும் வெளிவந்துள்ளன. எனவே தரமிக்க ஆக்கங்களை உருவாக்க தேவையான அனுபவமும் ஆற்றலும் சார்ந்த அவருடைய உள்ளார்ந்த வளம் பற்றி நான் விபரித்துக் கூறத் தேவையில்லை.

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்துறை வளர்ச்சிக்காக திட்டமிடுபவர்கள், தீர்மானங்களைச் செய்பவர்கள் அனைவருக்கும் இந்நூல் சிறந்த தகவல் வழங்கும் சாதனமாக அமைந்துள்ளது. இது போன்ற நூல்கள் தொடர்ந்தும் வெளிவர வேண்டும். அதற்கு கற்றவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு உண்டு என்பதனை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**பேராசிரியர். மா.செ.மூக்கையா**
புவியியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

அரசினர் ஆசிரியர் கலாசாலை
நூலகம்
இல......................
கொட்டகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் உரை

கல்வியியல் தொடர்பான பல நூல்களையும் மலையக மக்கள் பற்றிய இலங்கை இந்தியர் வரலாறு எனும் நூலையும் யான் எழுதி வெளியிட்டுள்ளேன். கல்வியியலைக் கற்பிக்கும் ஆசிரியர், அத்துறை சார்ந்த ஆய்வாளர் என்ற முறையில் மட்டுமன்றி மலையக மக்கள் சமூகத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் மலையக மக்களின் கல்வி நிலை, அதன் வரலாற்றுப் பின்னணி. கல்விப் பிரச்சினைகள், அவற்றைத் தீர்த்து வைக்கப் பயன்படக் கூடிய ஆலோசனைகள், சிந்தனைகள் என்பன பற்றித் தேசியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பல கட்டுரைகள் எழுதியுள்ளேன். மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒழுங்கு செய்யப்பட்ட பல கருத்தரங்குகளிலும் செயலமர்வுகளிலும் மலையகக் கல்வி பற்றி ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்தன. இத்தேவைகளுக்காக எழுதப்பட்ட கட்டுரைகள் ஆங்காங்கு பிரசுரிக்கப்பட்டிருந்தாலும் மலையகக் கல்வி பற்றிய எனது எழுத்துக்கள் ஒரு முழுமையான நூல் வடிவம் பெறவில்லை என்ற ஒரு குறை நீண்ட காலமாக என் மனதில் இருந்து வருகின்றது. உலக நாடுகளின் கல்வி முறை. அவற்றின் செல் நெறிகள், பிரச்சினைகள் பற்றியதாகவும் இலங்கையின் தேசிய கல்வி முறை பற்றியதாகவும் அமைந்த எனது கல்வியியல் நூல்கள் பரவலாக வாசகர்களைச் சென்றடைந்தமையால் நான் மலையகக் கல்வி பற்றிய நூல் எதனையும் வெளியிடவில்லையே என்ற எண்ணம் மலையக வாசகர்களிடம் ஏற்பட்டிருக்கலாம். எனது சொந்த மனக் குறையை அகற்றி வாசகர்களின் எதிர்பார்ப்பையும் நிறைவு செய்யும் வகையில் மலையகக் கல்வி பற்றிய இக் கட்டுரைத் தொகுப்பை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

கல்வியியல் பற்றிய நூல்கள் பெரும்பாலும் ஆசிரியர் கல்வி பெறும் கல்வித்துறை சார்ந்த ஆசிரியர்களாலேயே பெரிதும் நாடப்படுகின்றது. அவர்களுடைய தேவைகளையும் கருத்திற் கொண்டே நானும் பல நூல்களை எழுதினேன். கல்வியியல் கல்லூரிகள், தேசியக் கல்வி நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் எனது நூல்களுக்குத் தந்த ஆதரவின் காரணமாகவே தொடர்ந்து பல நூல்களை என்னால் எழுதி வெளியிட முடிந்தது. ஆனால் மலையகக்கல்வி பற்றிய இந்நூல் மலையகக் கல்வி மேம்பாட்டைப் பற்றிச் சிந்தித்து அதற்காகப் பணியாற்றி வரும் ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், மலையக அரசியல் தலைமைப் பீடத்தைச் சேர்ந்தவர்கள், உயர் மட்டக் கொள்கை வகுப்போர் எனப் பலதரப் பட்டவர்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையுடன் வெளியிடப்படுகின்றது.

1830களில் இலங்கையின் பெருந்தோட்டப் பகுதியில் பணியாற்ற இந்தியத் தமிழர்கள் வந்து சேர்ந்த பின்னர்தான், நாட்டின் கல்வி வளர்ச்சிக்கான அடித்தளங்கள் இடப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் அதன் பின்னரும் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி தொடர்பாகப் பல கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட போது, மலையகத் தமிழர்கள் நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் வெளியார்களாகவும் வெளிநாட்டுத் தொழிலாளர்களாகவும் கருதப்பட்டனர். கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் அவர்களை உள்ளடக்கவில்லை. கல்வி ஆணைக்குழுக்கள் பற்றிய அறிக்கைகள் (1943. 1961, 1981,) மலையக மக்களின் பின்தங்கிய கல்வி நிலையைக் கருத்திற் கொண்டு அவர்களுடைய கல்வி மேம்பாட்டுக்கான விசேட நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவில்லை 1940 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விப் கொள்கைகள், நாட்டின் சலுகை குறைந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரைக் கருத்திற் கொண்டமைந்தமை உண்மையே! ஆயினும் அவை பின்தங்கிய மக்கள் மத்தியில் மிகப் பின்தங்கியவர்களாக வாழ்ந்த மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களை எட்டவில்லை. இலவசக்கல்வி, தாய்மொழிக்கல்வி, பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றமை, தொகுதிகள் தோறும் மத்திய பாடசாலைகள் நிறுவப்பட்டமை போன்ற நடவடிக்கைகளின் காரணமாக இலங்கை, கல்வி வளர்ச்சியில் ஆசிய பிராந்தியத்தில் ஜப்பானுக்கு அடுத்தபடியான இடத்தைப் பெற்றது. ஆனால் உள் நாட்டில் மலையக மக்களின் கல்வி மேம்பாடு தேங்கி நிற்க நேர்ந்தது. நாட்டில் எழுத்தறிவற்றவர்கள் 15–20 சத வீதம், பாடசாலையில் கல்வியை இடை நிறுத்தியோர் 20–25 சதவீதம் என்றால், இவர்களில் கணிசமானவர்கள் மலையகத்தவரே என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. உயர்கல்வி, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பக் கல்வி, வளர்ந்தோர் கல்வி, முறைசாராக்கல்வி தொடர்பான ஏற்பாடுகளும் நிறுவனங்களும் மலையக மாணவப் பிரதிநிதிகள் இல்லாமலேயே வளர்ச்சியடைந்தன. இப்பின்னணியில் 1830களில் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகமாகக் குடிவந்தவர்களில் பெரும்பாலானவர்கள், கணிசமான சமூக நகர்வுக்கான வாய்ப்புகளின்றி 1990 களிலும் பெருந்தோட்டம் என்னும் பொருளாதார அலகுக்குள்ளேயே வாழ்ந்து வர நேரிட்டுள்ளது. கல்வி வாய்ப்புகள் இலங்கை வாழ் மக்களுக்குக் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் வழங்கிய சமூக நகர்வுக்கான சந்தர்ப்பங்கள் பெரும் சமூக மாற்றத்துக்கு உதவியவிடத்து மலையக மக்கள் தொடர்ந்து, பயிற்சி தேவையற்ற தோட்டத் தொழில்களில் முடங்க வேண்டியதாயிற்று. அவர்களுடைய பின்தங்கிய கல்வி நிலை குறித்த சிந்தனைகளையும் கல்வி மேம்பாட்டுக்கான வழிமுறைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டு இத்தொகுப்பு அமைந்துள்ளது.

இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகளைப் பிரசுரித்த பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எமது நன்றிகள். மற்றுமொரு முக்கிய குறிப்பு! வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறு தலைப்புகளில் எழுதப்பட்ட இக்கட்டுரைகளில் எடுத்துக் கொண்ட பொருளின் தன்மை காரணமாக சில தகவல்கள், புள்ளி விபரங்கள், கருத்துரைகள் என்பன மீண்டும் மீண்டும் கூறப்படுவது தவிர்க்க முடியாதிருந்தது. குறிப்பிட்ட தலைப்புகள் சரிவரக் கையாளப்பட இவை அவசியமானவை என்பதால் இந்நூல் தொகுப்பில் அக் கூறியது கூறல் என்னும் குற்றம் பல இடங்களில் இழைக்கப்பட்டிருப்பதை வாசகர்கள் பொறுத்தருள வேண்டும். அவற்றை நான் சீராக்கியிருந்தால் குறிப்பிட்ட கட்டுரைகள் முழுமையாகத் தரப்பட்டிருக்கமாட்டாது. வாசகர்கள் புரிந்துணர்வுடன் இக்குறையினைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்பது எனது வேண்டுகோள். மலையக மக்களின் அரசியல், சமூக. பொருளாதார நிலை குறித்த முதலாவது கட்டுரை நூலுக்கான ஓர் அறிமுகமாகவே சேர்க்கப்பட்டுள்ளது.

நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மூக்கையா அவர்கள் மலையக மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் ஆர்வங் கொண்டவர்; அதற்காக உழைத்தும் வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளை எழுதுவதுடன் நில்லாது மலையக மக்களுக்கான பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்துள்ளவர். அவருக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடும் முயற்சியில் எனக்கு ஊக்கந்தந்து அப்பணியை ஏற்று செயற்பட்டவர் தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னைநாள் செயற்றிட்ட அதிகாரியும் வின்னேஸ் ஸ்தாபனத்தின் அதிபருமான பெரியவர் அ.சிவராஜா அவர்கள். அவருடைய ஈடுபாடும் உழைப்புமின்றி எனது எழுத்துக்கள் நூல் வடிவம் பெற்றிராது. அவருக்கு எனது நன்றிகள் உரித்தாகுக.

**சோ. சந்திரசேகரன்**

58–1/3, 37 ஆவது ஒழுங்கை
கொழும்பு–06
20–10–98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| (1) | சுதந்திரத்தின் பின்னர் அரசியலும் மலையக மக்கள் வாழ்க்கை நிலைமைகளும் | 01 |
| (2) | மலையகக் கல்வியின் வரலாற்றுப் பின்னணி | 17 |
| (3) | மலையகக் கல்வி வளர்ச்சி பற்றிய ஆய்வுகள் | 28 |
| (4) | உலகளாவிய கல்விச் செல்நெறிகளும் மலையகக்கல்வியும் | 32 |
| (5) | மலையகத்தின் எதிர்காலக் கல்வி வாய்ப்புகள் | 40 |
| (6) | 21ஆம் நூற்றாண்டை எதிர்நோக்கும் மலையகக் கல்வி | 43 |
| (7) | மலையகக் கல்வி நிலையும் தேசியக்கல்வி முறையும் | 47 |
| (8) | தேசிய கல்வி ஆணைக்குழுக்களின் அணுகுமுறைகள் | 51 |
| (9) | மலையக மாணவர்களின் பரீட்சை செயலாற்றம் | 55 |
| (10) | மலையக சமூகமும் உயர்கல்வியும் | 68 |
| (11) | பல்கலைக்கழகக் கல்வியில் பின்தங்கியிருக்கும் மலையக சமூகம் | 78 |
| (12) | 21 ஆம் நூற்றாண்டில் மலையகப் பல்கலைக்கழகம் | 82 |
| (13) | கல்விப் பிரச்சினைகளும் 'நியாயமான பாரபட்சக்' கொள்கையும் | 89 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பின்னர் அரசியலும் மலையக மக்கள் வாழ்க்கை நிலைமைகளும்

**நா**டு சுதந்திரம் பெறும் தறுவாயில் இந்நாட்டில் மலையகத்தமிழர்கள்[1] ஒரு முக்கிய சிறுபான்மையினமாக வளர்ச்சியுற்றிருந்தனர். 1911 ஆம் ஆண்டில் அவர்கள் நாட்டின் சனத் தொகையில் 12.9 வீதத்தினராக (5,30,000) இருந்தனர். 1947 ஆம் ஆண்டளவில் இவர்களுடைய தொகை 9 இலட்சமாக (11.7%) வளர்ச்சியுற்றிருந்தது. அத்துடன் அவர்கள் இந்நாட்டில் நிரந்தரக் குடிமக்களாக[2] மாறி நாட்டின் பன்மைச் சமூக அமைப்பின் ஒரு அங்கமாயினர். டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறையிலிருந்த காலத்தில் இவர்கள் வாக்குரிமையைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோதிலும் 1947 ஆம் ஆண்டளவில் 2,25,000 மலையகத் தமிழர்கள் வாக்குரிமையைப் பெற்றிருந்தனர். 101 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஏழு பேர் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆயினும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கவில்லை. அரசாங்க சபைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இலங்கையர் மயமாக்கல் கொள்கையினால் அவர்கள் அரசாங்க வேலைகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது.[3]

அவர்களுடைய சமூக. பொருளாதார வாழ்க்கை நிலைமைகளைப் பொறுத்த அளவில், இந்திய அரசாங்கத்தின் வற்புறுத்தலின் பேரில் இலங்கை அரசாங்கம் இம்மக்களின் வீட்டு வசதி, சுகாதாரம், சம்பளம், கல்வி என்பவற்றில் குறைந்த பட்ச வசதிகளை வழங்கும் வகையில் பல சமூக நலச்சட்டங்களை இயற்றி இருந்தது. பெருந்தோட்டப் பொருளாதார முறையைப் பாதுகாக்க இத்தகைய அடிப்படை வசதிகளை மலையகத் தோட்டத் தொழிலாளர் களுக்கு வழங்க வேண்டியிருந்தது.

சுதந்திரத்துக்கு முற்பட்ட அரசாங்க சபைக் காலத்தில் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகவாழ்வில் மலையகத்தமிழர்கள் பிரச்சினைக்குரிய ஓர் இனக்குழுவினராகக் கருதப்பட்டனர். மலை நாட்டின் நிலப்பகுதிகளில் பெருந்தோட்டங்களை உருவாக்கக் குடியேற்ற அரசாங்கம் அவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றிய போதிலும் அங்கு வேலை செய்ய வந்த இந்தியத் தமிழர்களே நிலப்பறிப்புக்குக் காரணம் எனக் கருதப்பட்டனர். நகர்ப்புறங்களில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புப் பிரச்சினை ஏற்பட்ட போது அரசாங்கத் திணைக்களங்களில் சாதாரண தொழில் புரிந்த இந்தியர்களை அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால், மலையக மாவட்டங்களில் உள்ளூர் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய முடியாது போய்விடும் என்பதால், இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூக, கலாசாரரீதியாக இந்திய தோட்டத் தொழிலாளர்கள் உள்ளூர் மக்களுடன் இரண்டறக் கலக்காது தமது பண்பாடு, மொழி, சமயம் என்பவற்றைப் பேணிப்பாதுகாத்து வந்தனர். இந்தியர்கள் தமது தாய்நாட்டுடன் தொடர்ந்து தொடர்பு வைத்திருந்தமையால் அவர்களை இந்நாட்டின் நிரந்தரக் குடிமக்களாகக் கருதுவதற்கில்லை; இலங்கையில் வாழ்கின்ற இந்தியர்களை, இந்தியத் தலைவர்கள் தமது ஐந்தாம் படையாகப் பயன்படுத்தக்கூடும்,[4] உள்ளூர் மக்களைப் பொறுத்தவரையில் இந்தியர் பிரச்சினை வாழ்வா? சாவா? என்ற நிலைமையை ஏற்படுத்திவிட்டது.[5] இந்தியர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்குமிடத்து பெரும்பான்மை மக்களின் இன அடையாளம் மறைந்து விட நேரிடும், 1940 களின் இறுதியில் இந்திய மக்கள் பற்றிப் பெரும்பான்மையினத் தலைவர்கள் கொண்டிருந்த பரவலான கருத்து இதுவாகும்.

## சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியின் குடியுரிமைச் சட்டங்கள்

சுதந்திர இலங்கையில் மேற்கூறிய பின்னணிக் காரணிகளின் அடிப்படையிலும் ஏனைய புதிய அரசியற் காரணிகளின் நிர்ப்பந்தம் காரணமாகவும் இந்நாட்டில் வாழ்ந்த மலையக இந்தியத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை என்பவற்றை அகற்றும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரிந்த காலப்பகுதியில் (1947–1952) நிறை வேற்றப்பட்ட அச்சட்டங்களாவன.

1. 1948 ஆம் ஆண்டின் இலங்கைக் குடியுரிமைச் சட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 1949 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானியர் (குடியுரிமைச்)சட்டம்.
3. 1949 ஆம் ஆண்டின் பாராளுமன்றத்(தேர்தல்கள் திருத்த) சட்டம்.

சுதந்திர இலங்கைக்கான அரசியல் யாப்பை வகுத்துத் தந்த சோல்பரி ஆணைக்குழுவினர் தமது ஆலோசனைகளில் குடியுரிமை, மக்கள் குடிவரவு போன்ற வாதப்பிரதிவாதத்துக்குட்பட்ட விடயங்கள் எவையும் அடக்கவில்லை. இலங்கைக்குடியுரிமைக்கு உரித்துடையவர்களுக்குரிய தகுதிகள் பற்றி சுதந்திர இலங்கையின் அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்பது இவ்வாணைக்குழுவின் கருத்தாகவிருந்தது. இலங்கை வாழ் இந்தியர்களின் குடியுரிமைப் பிரச்சினை இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கிடையிலான இரு தரப்புப் பிரச்சினை என்ற முறையில் சோல்பரி ஆணைக்குழு இவ்வாறு பரிந்துரை செய்திருந்தது.

1948 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டப்படி இந்தியத் தமிழர்கள் பரம்பரைக் குடியுரிமை பெற அவர்களுடைய பாட்டன், முப்பாட்டன் ஆகியோர் இலங்கையில் பிறந்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டியிருந்தது. இச்சட்டப்படி சிங்கள மக்களும் இலங்கைத்தமிழ் மக்களும் முஸ்லிம்களும் உடனடியாக இலங்கைக் குடியுரிமையைப் பெற்றவிடத்து இந்நாட்டில் வாழ்ந்த சகல இந்தியத் தமிழர்களும் இந்திய முஸ்லீம்களும் தமது பாட்டனார்களின் பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க முடியாத நிலையில் குடியுரிமையை இழக்க நேரிட்டது. இலங்கையில் பிறப்பைப் பதிவு செய்யும் முறை 1897 ஆம் ஆண்டிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டதும் அத்துடன் 1920 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பிறப்பு பதிவுகள் நாட்டின் பல பகுதிகளில் காணப்படவில்லை. இச்சட்டம் விதித்த கடுமையான நிபந்தனைகளை இந்தியத் தமிழர்களால் நிறைவேற்ற முடியவில்லை.

இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தமிழர்கள் அனைவரும் நீண்டகாலமாக இலங்கையில் வாழ்ந்து அந்நாட்டையே தாயகமாக ஏற்றுக் கொண்டவர்கள் என்பதால் இலங்கைக் குடியுரிமைக்கு உரித்துடையவர்கள் என்பது இந்திய அரசின் வாதமாக இருந்தது. தற்காலிக வேலைவாய்ப்புகளை நாடியே இந்தியர்கள் இலங்கைக்குச் சென்றனர் என்பது வரலாற்று உண்மை நிகழ்வுகளுக்கு முரணானது என்பது நேருவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பாடாக இருந்தது. அவர்களை இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள இந்திய அரசாங்கம் ஆயத்தமாக இருக்கவில்லை. சுதந்திர இலங்கையில் வாழ்ந்த இந்தியர்களின் மத்தியில் நாடற்றவர் என்ற பிரச்சினை உருவாக இச்சட்டம் அடிகோலியது.

குடியுரிமையை இழந்த இந்தியத் தமிழர்களில் தகுதி உடையோருக்குக் குடியுரிமை வழங்கும் நோக்குடன் இந்தியர்-பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம்(1949) கொண்டு வரப்பட்டது. இச்சட்டப்படி குடியுரிமை பெற திருமணமானவர்களுக்கு ஏழாண்டு வாசகால தகுதியும் திருமணமாகாதவர்களுக்குப் பத்தாண்டு கால வாசகால தகுதியும் நிபந்தனைகளாக விதிக்கப்பட்டன. இந்நிபந்தனைகளை இந்தியத் தமிழர்கள், இலங்கைத்தமிழர்கள், இடதுசாரிகள், போன்றோரின் தலைவர்கள் மிகக் கடுமையானவை, மனிதாபிமானவற்றவை, குடியுரிமையை மறுக்கவே உருவாக்கப்பட்டவை எனக் கூறிப் பெரிதும் எதிர்த்தனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசின் தலைவர்களும் ஒரு சிறு தொகையான இந்தியர்களுக்கே குடியுரிமை வழங்கப்படும் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறினர்.

இலங்கை இந்தியக் காங்கிரஸ் இச்சட்டத்தை பகிஷ்கரிக்குமாறு தனது உறுப்பினர்களைக் கோரியது. எனினும் இறுதிநேரத்தில் 824,430 பேர் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தனர். 1960 ஆம் ஆண்டளவில் இவ்விண்ணப்பதாரர்களின் 1,35,000 பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமை பெற ஏனையவர்கள் நாடற்றவர்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றனர். இச்சட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் (1949) இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு என விதித்தது. இதன் உடனடியான விளைவாக வாக்காளர் பட்டியலிலிருந்த சகல இந்தியர்களின் பெயர்களும் நீக்கப்பட்டு[6] அவர்களுடைய வாக்குரிமை பறித்தெடுக்கப்பட்டது இதன் விளைவாக 1952-1977 வரை இந்தியத் தமிழர்கள் மலையகத் தேர்தல் தொகுதிகளிலிருந்து ஒரு பிரதிநிதியையும் தெரிவு செய்ய முடியாது போய் விட்டது. அவர்களுடைய நலவுரிமைகளைப் பேண அவ்வப்போது ஒரு நியமன உறுப்பினர் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சட்டங்கள் கொண்டு வரப்பட ஒரு முக்கிய அரசியல் காரணி இருந்தது. 1947ஆம் ஆண்டுத் தேர்தலின் போது மலையகத் தேர்தல் தொகுதிகளில் இந்தியத் தமிழர்கள் ஒட்டு மொத்தமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்திருந்தனர். அத்தேர்தலில் அவர்கள் ஏழு இலங்கை இந்தியர் காங்கிரஸ் (இ.இ.கா) வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்திருந்தனர். இ.இ.கா. வேட்பாளர்கள் போட்டியிடாத ஏனைய மலையக மாவட்டங்களில் போட்டியிட்ட இடதுசாரி வேட்பாளர்களுக்கு இந்திய வாக்காளர்கள் வாக்களித்தனர். இதனால் 14 இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றியடைய முடிந்தது. இவ்வாறு நாட்டின் 20 வீதமான தேர்தல் தொகுதிகளில் இந்திய வாக்காளர்கள் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் வலிமையைப் பெற்றிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பெருவாரியான இந்தியர்கள் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பெற நேர்ந்தால் தனது கட்சியின் எதிர்கால அரசியல் வாய்ப்புகளும் வெற்றிகளும் பாதிக்கப்படும் எனக்கருதியமையால், கடுமையான நிபந்தனைகளைக் கொண்ட குடியுரிமை, வாக்குரிமைச் சட்டங்களை நிறைவேற்றினார்.

இம் மூன்று சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டபோது மலையகத் தேர்தல் தொகுதிகளில் இந்தியத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைய நேரிட்டது. 1949–1953 காலப்பகுதியில் 8087 பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமையைப் பெற்றனர். இந்தியத் தமிழர்கள் வெற்றி பெற்றிருந்த மலையகத் தேர்தல் தொகுதிகளின் வாக்காளர் பதிவேடுகளிலிருந்து இந்தியர்களின் பெயர்கள் நீக்கப்பட்டமையால் அத் தொகுதிகளின் மொத்த வாக்காளர் தொகை 30,000 இலிருந்து 2500, 4000, 5000 ஆகக் குறைந்தது. எடுத்துக்காட்டாக, 28,000 வாக்காளர்கள் இருந்த நாவலப்பிட்டித் தொகுதியில், 1952 ஆம் ஆண்டளவில் இத் தொகை 2000 ஆகக் குறைந்தது. இவ்வாறு இந்தியத் தமிழர்களின் வாக்கு பலம் 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் குறைக்கப்பட்டமையால் ஐக்கிய தேசியக் கட்சி முன்னைய தேர்தலில் பெற்ற வெற்றியை விட 1952 தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற ஆசனங்கள் 42 இலிருந்து 54ஆக அதிகரித்தது. இடதுசாரிகளின் ஆசனங்கள் இந்தியர்களின் ஆதரவின்மையால் 18 இலிருந்து 13 ஆகக் குறைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சுதந்திரத்தைப் பெற்றபின் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றிய குடியுரிமைச் சட்டங்களின் தாக்கம், தொகை ரீதியாகப் பின் வருமாறு அமைந்தது:

1. 1949 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டப்படி இலங்கைக் குடியுரிமை பெற்றவர்கள் தொகை } 140,185

2. 1964ஆம் ஆண்டளவில் நாடற்றவர்கள் தொகை – 971,073

## இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் (1964,1974) ஏற்படுத்திய விளைவுகள்

1964 ஆம் ஆண்டளவில் நாடற்றவர்களின் தொகை 975,000 எனக் கொள்ளப்பட்டு இலங்கை அரசும் இந்திய அரசும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி, அவர்களில் 525,000 பேரை இந்தியாவும் 300,000 பேரை இலங்கையும் ஏற்றுக் கொள்வதென ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1974 ஆம் ஆண்டின் இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின்படி, எஞ்சிய 150,000 பேரை ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளும் சம அளவில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.[7] எனவே இந்தியா மொத்தமாக 600,000 பேருக்கும் இலங்கை 375,000 பேருக்கும் குடியுரிமை வழங்க முடிவு செய்யப்பட்டது. அவ்வொப்பந்தங்கள் சர்வதேசச் சட்டப்படி இரு நாடுகளும் தமக்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றக்கோரின.

இவ்வொப்பந்தங்கள், சம்பந்தப்பட்ட இந்தியத் தமிழர்கள், அவர்களுடைய தலைவர்கள் போன்றோருடன் கலந்தாலோசித்து செய்யப்படவில்லை என்றும் இந்தியாவின் சர்வதேச உறவுகளைப் பேணும் நோக்கிற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்றும் பல கண்டனங்கள் விடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் இந்தியத் தமிழர்களின் அரசியல் கட்சிகள் இவ்வொப்பந்தங்களை முற்றாக நிராகரிக்கவில்லை.

கடந்த மூன்று தசாப்தகால அனுபவங்களை வைத்து நோக்குமிடத்து, இவ்வொப்பந்தங்கள் பல நியாயமான கண்டனங்களுக்குள்ளான போதிலும், அவை நாடற்றவர் என்ற நிலையைப் போக்கிட நீண்ட கால நோக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவின எனலாம். இவ்வொப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, மலையகத்தில் வாழ்ந்த இந்தியத் தமிழர்கள் உண்மையில் தாயகமாகக் கொள்ள விரும்பிய நாடு எது என்பது தெளிவாயிற்று. நீண்ட கால தாமதம் ஏற்பட்ட போதிலும் அவர்கள் தெரிவித்த விருப்பம் பிற்கால குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகளுக்கு (1988) உதவின எனலாம்.

இந்திய அரசாங்கம் 6 இலட்சம் பேரை ஏற்றுக் கொள்ள சம்மதித்த போதிலும் 500,000 பேர் மட்டுமே இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர். அதே வேளையில் 625,000 பேர் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர். இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகைகள் எந்த அளவுக்கு யதார்த்தமற்றவை என்பதையே இவ்விண்ணப்பங்கள் பற்றிய விபரங்கள் காட்டுகின்றன.

1987ஆம் ஆண்டளவில் 4,21,887 பேர் இந்தியக் குடியுரிமையையும் 218,181 பேர் இலங்கைக் குடியுரிமையையும் பெற்றிருந்தனர். அதாவது முன்னைய ஒப்பந்தங்கள் (1964,1974) 975,000 பேரை உள்ளடக்கியவிடத்து 1987 ஆம் ஆண்டளவில் 6,40,068 பேரின் நாடற்றவர் நிலைமட்டுமே நீக்கப்பட்டு குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்த 34,113 பேர் நீங்கலாக ஏனைய 250,000 பேர், அவர்களுடைய பிள்ளைகள் ஆகியோருடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியிருந்தது. இவர்களுடைய நாடற்றவர் அந்தஸ்து காரணமாகப் பல நிர்ப்பந்தங்களுக்குள்ளான ஐ.தே.க அரசாங்கம் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய குடியுரிமைச் சட்டமொன்றை நிறைவேற்றியது. இச்சட்டம் இலங்கை அல்லது இந்தியக் குடியுரிமை பெறாத இந்திய மரபு வழித் தமிழர்கள் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமையை வழங்கியது. இச்சட்டம் குடியுரிமை பெறுவோரின் தொகை எதனையும் குறிப்பிடாதது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். அத்துடன் குடியுரிமை விண்ணப்பம் சமர்ப்பித்தற்கான முடிவு திகதி எதுவும் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இதனால் இந்திய வம்சாவளியினரான எவரும் எதிர்காலத்தில் குடியுரிமை பெறும் வாய்ப்பு சட்ட பூர்வமாக வழங்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.தே.கட்சித் தலைவர்களின் பொதுத் தேர்தல் நோக்கங்களும் இச்சட்டம் நிறைவேற்றப்பட முக்கிய காரணங்களாயின. குடியுரிமை பெறும் இந்தியத் தமிழர் அனைவரும் தமது கட்சிக்கே வாக்களிப்பர் என்பது ஐ.தே.கட்சியினரின் தேர்தல் கணிப்பீடாக இருந்தது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட கால குடியுரிமைச் சட்டங்களும் இலங்கை–இந்திய ஒப்பந்தங்களும் பல்வேறு நியாயமான கண்டனங்களுக்குள்ளாயின என்பது உண்மையே. அவற்றின் விளைவாக இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களில் ஒரு பகுதியினர் இந்தியா திரும்ப நேரிட்டது. 1987ஆம் ஆண்டளவில் 337,410 பேரும் அவர்களுடைய பிள்ளைகள் 1.23,952 பேரும் இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா சென்றனர், இந்தியா செல்ல வேண்டிய 84,000 பேர் தவிர்ந்த ஏனையோர் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றனர்.

சுதந்திர இலங்கையின் குடியுரிமைச் சட்டங்களின் ஏற்பாடுகளின் அடிப்படையில் குடியுரிமை பெற்றவர்கள் அடிப்படையில் பதிவுப் பிரஜைகளாகக் கருதப்பட்டபோதிலும் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு பரம்பரைப் பிரஜை, பதிவுப் பிரஜை என்ற வேறுபாட்டை அகற்றும் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது.

சுதந்திர இலங்கையின் குடியுரிமைச் சட்டங்களின்படி குடியுரிமை பெறும் இந்தியத் தமிழர்களுக்கென தனியான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும் என்ற ஆலோசனை பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டது. இதனால் மலையகத் தேர்தல் தொகுதிகளில் அவர்களுடைய வாக்குகள் முக்கியத்துவம் பெறுவதைத் தடுக்கலாம் எனக்கருதப்பட்டது. ஆயினும் இவ்வாலோசனை பிற்காலத்தில் முற்றாக கைவிடப்பட்டு இந்திய தமிழ் வாக்காளர்கள், தேசிய அரசியலில் ஒரு முக்கிய சக்தியாக உருப்பெற வழி கோலப்பட்டது. அவ்வாறே 1964, 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தவும் இந்தியா 6,00,000 பேரை ஏற்றுக் கொள்ளச் செய்யவும், இந்தியர்கள் கட்டாயமாக இந்தியவுக்கு அனுப்பப்படல் வேண்டும்; 1964 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தில் அதற்கான ஏற்பாடுகள் உண்டு என வாதிடப்பட்டது. இக்கட்டாய நிபந்தனையும் பிற்காலத்தில் கைவிடப்பட்டமையும் இந்தியர்கள் தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே இந்தியக் குடியுரிமை பெற்றுத் தாயகம் திரும்பியமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பந்தங்களின் விளைவுகள்

இலங்கை வாழ் இந்திய மக்கள் தமது ஒரு நூற்றாண்டு கால வாசகாலத்தின் பின்னர், தமிழ் நாட்டுடனான தமது தொடர்புகளை நீக்கி இலங்கையின் ஒரு முக்கிய சிறுபான்மைக் குழுவினராகப் பரிணமிக்கத் தொடங்கிய காலப்பகுதியில் செய்யப்பட்ட இவ்வொப்பந்தங்கள், இவ்வினத்தவருக்கு நீண்ட கால நோக்கில் இலங்கை அல்லது இந்தியக் குடியுரிமையை வழங்கியது உண்மையே! இச் செயற்பாடு முற்றுப்பெற இந்தியத் தமிழர்கள் நான்கு தசாப்தகாலத்துக்கு அரசியல் உரிமைகளை இழந்து நாடற்றவர்களாக வாழ நேர்ந்தது.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களைப் பொறுத்த வரையில் இந்திய அரசு முதன் முதலாக இலங்கை அரசுடன் தான் இரு ஒப்பந்தங்களைச் செய்தது. அத்துடன் அவ்வொப்பந்தங்கள் முதன்முதலாக ஏற்றுக் கொள்ளப்படவுள்ள இந்தியர்களின் தொகையையும் குறிப்பிட்டன. பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுடனான பிரச்சினையில்தான் இந்திய அரசு இருதரப்பு அரசாங்கத் தொடர்புகளுக்கு முக்கியத்துவமளித்து இந்தியர் பிரச்சினையை அணுகியது. இந்தியா ஆறு இலட்சம் இந்தியர்களை ஏற்றுக் கொண்டதன் விளைவாக, இலங்கை வாழ் இந்தியர் சமூகம் இரு கூறுகளாகப் பிரிவடைய நேர்ந்தது. சுதந்திர இலங்கையின் அரசியல் நிர்ப்பந்தங்களினால் மட்டுமன்றி இந்தியா எதிர் நோக்கிய சர்வதேச அரசியல் நெருக்கடிகள் காரணமாக பல லட்சம் இந்தியர்களை இந்தியா ஏற்கவேண்டியதாயிற்று. குடித் தொகைரீதியாக நோக்குமிடத்து 1950 களில் முதல் முக்கிய இலங்கைச் சிறுபான்மையினராக இருந்த இந்தியத்தமிழர்கள் 1981 இல் மூன்றாவது இடத்தைப் பெற இவ்வொப்பந்தங்கள் காரணமாயின.

மலையக மாவட்டங்களில் செறிந்து வாழ்ந்த இந்தியத் தமிழர்களில் 3,37410 பேர் இந்தியா திரும்பியவிடத்து (1987 இறுதிவரை)[8] 1981 ஆம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டு அறிக்கையின் படி 75,000 பேர்வரை வடமாகாணம் சென்று குடியேறியிருந்தனர். 1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் மலையக மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டமையாலும் 1972 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றபின்னர் ஏற்பட்ட வேலையின்மைப் பிரச்சினை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப்பற்றாக்குறை, என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளாலும் கணிசமானவர்கள் வடமாகாணத்தில் சென்று குடியேற நேர்ந்தது. இவ்வாறு சென்றவர்கள் இலங்கைத்தமிழர் செறிந்து வாழும் வவுனியா. கிளிநொச்சி, மாவட்டங்களில காலப்போக்கில் தமது இந்திய, மலையக அடையாளங்களைக் கைவிட்டு உள்ளூர் மக்களுடன் கலந்து விடும் போக்குகள் தென்படுகின்றன. இவ்வாறான மக்கள் வெளியேற்றம், குடித்தொகை ரீதியாக மலையக மாவட்டங்களில் இந்தியர்களின் வலிமையைக் குறைத்து விட்டது. 1956 தொடக்கம் ஏற்பட்ட இனக்கலவரங்களும் பெருந்தோட்டத் தேசியமயம் ஏற்படுத்திய பாதக விளைவுகளும் இந்தியத் தமிழர்கள் இலங்கை இந்திய ஒப்பந்தங்களின் கீழ் தமது தாயகத்தை நாடுவதை ஊக்குவித்தன.

இந்தியா திரும்பிய பெருந்தோட்ட இந்தியத் தொழிலாளர்களுக்கான முழுமையான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. நம்பிக்கையுடன் தாயகம் திரும்பியோருக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏமாற்றத்தையே தந்தன. இலங்கையில் வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தியா திரும்பியதும் அனாதைகள் என்ற நிலைக்கே இட்டுச் செல்லப்பட்டனர். இவர்களுடைய அனாதரவான நிலையைக் கடிதங்கள் மூலம் அறிந்த இலங்கை வாழ் இந்தியர்கள் பலர், இந்தியா செல்லத் தயக்கம் காட்டினர். இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா திரும்பியவர்கள் நீண்ட காலம் இலங்கையின் பன்மைக் கலாசார பாதிப்புக்குட் பட்டிருந்தபடியால் அவர்கள் தமிழ்நாட்டுக் கிராமங்களில் 'நம்மவர்களாக' உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவில்லை.[9]

## இலங்கைத் தமிழர்களின் அரசியல் போராட்டங்களின் தாக்கம்

சுதந்திரத்தின் பின்னர் தமிழ் மொழி உரிமை, வட, கிழக்கில் அரசாங்க அனுசரணையுடனான குடியேற்றத்திட்டங்கள், வேலை வாய்ப்பு, உயர்கல்வி வாய்ப்புகள், பிராந்திய சுயாட்சி என்னும் பிரச்சினைகளை முன்வைத்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் இயக்கங்கள் தொடக்கி வைத்த அரசியல் போராட்டங்களும் அவற்றின் எதிர்விளைவாகத் தென்னிலங்கையில் எழுந்த தமிழர்களுக்கு எதிரான கலவரங்களும், உரிமைப் போராட்டங்களுடன் நேரடித் தொடர்பற்ற இந்தியத்தமிழர்களைப் பெரிதும் பாதித்தன. இன, மொழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார ரீதியான ஒருமைப்பாட்டையும் வரலாற்றுரீதியான வேறுபாட்டையும் இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் கொண்டிருந்த நிலைமையில் இனக்கலவர சக்திகள் இலங்கைத் தமிழர் போராட்டங்களுக்கான பதிலடியை மலையக மாவட்டங்களில் வாழ்ந்த இந்தியத் தமிழர்களுக்கே வழங்கின. அவர்களுக்கெதிரான 1958, 1977, 1981, 1983, ஆம் ஆண்டுக் கலவரங்கள் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். இக்கலவரங்கள் ஏற்படுத்திய உயிரிழப்பு, பொருளிழப்பு, காரணமாக இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமன்றி இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்தியத் தமிழர்களும் அகதிகளாக இந்தியா செல்ல நேரிட்டது. இக்கலவரங்களின் ஒரு முக்கிய விளைவாக மலையக மாவட்டங்களில் நகர்ப்புற இந்தியர்களின் (பதுளை, பண்டாரவளை, கண்டி) தொகை கணிசமாகச் குறைய நேரிட்டது. 1977–1994 காலப்பகுதியில் பதவி வகித்த ஐ.தேகட்சிக்கு இந்தியத் தமிழ் வாக்காளர்கள் தேர்தல்களில் தமது கணிசமான ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்திருந்த போதிலும் அக்கட்சி அரசு கலவர காலங்களில் (1977, 1983) போதிய பாதுகாப்பை வழங்கத் தவறிவிட்டது; அரசாங்கக் கட்சிக் குழுக்களே கலவரங்களுக்கு முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

## அரசியல் பிரதிநிதித்துவத்தின் முன்னேற்றம்

1964 ஆம் ஆண்டின் இலங்கை–இந்திய ஒப்பந்தம், 1988 ஆம் ஆண்டின் குடியுரிமைச்சட்டம் என்பவற்றால் இந்தியத் தமிழர்கள் படிப்படியாகப் பெற்ற இலங்கை குடியுரிமையும், தொடர்ந்து பெறப்பட்ட வாக்குரிமையும் அவர்களை அலட்சியம் செய்யப்படமுடியாத ஒரு அரசியல் சக்தியாக உருவாக்கியது. இவர்கள் பெற்ற வாக்குரிமை பலத்தின் காரணமாக இன்று பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் பிரதேச சபைகளிலும் இவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். சுதந்திரம் பெற்ற 50 ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள முக்கிய முன்னேற்றம் இதுவாகும். வாக்குரிமை பறிக்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு அரசாங்க அமைப்புகளில் பிரதிநிதித்துவமும் இருக்கவில்லை. பிரதான அரசியற் கட்சிகளால் இவர்கள் தேடப்படவுமில்லை. 1980 களில் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு இந்தியத் தமிழர் சமூகம் தேசிய அரசியலின் ஒரு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமாக உருவாகியிருப்பது ஒரு முக்கிய முன்னேற்றமாகும். அரசியல் பங்கேற்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இம்மக்கள் இன்று தமது சமூக- பொருளாதார உரிமைகள், மேம்பாடு, கல்வி வளர்ச்சி, மொழி, பண்பாட்டுத் தனித்துவம் பேணல் முதலான விடயங்களில் விழிப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். இலங்கையின் பன்மைச் சமூகக் கட்டமைப்பில் தாம் ஒரு தனித்துவம் வாய்ந்த இனக்குழுவாக அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் மேலோங்கி வருகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகளில் உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இந்தியத் தமிழர்களின் பிரதிநிதிகள் கடமையாற்றி வந்த போதிலும் இந்தியத்தமிழர்களில் பெரும் பான்மையானவர்கள் வாழ்ந்து வரும் பெருந்தோட்டப் பகுதிகள், மாகாண சபைகளின் அதிகார வரம்பின் கீழ் வரவில்லை, இதனால் இந்தியத் தமிழர்களின் மாகாண சபை உறுப்பினர்கள், பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டிற்கான செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த முடியவில்லை. அதிகாரப் பரவலாக்கத்தின் முக்கிய நோக்கமான பின் தங்கிய பிரதேச மக்களின் மேம்பாடு, பெருந்தோட்டத் தமிழ் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பொருளற்றதாகி விட்டது. மாகாணசபைகள், பிரதேசசபைகள் மூலமாக இம்மக்கள் மத்தியில் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் இவ்வாறான முட்டுக் கட்டைகளை எதிர்நோக்கி வந்துள்ளன.

## சமூக நலன்கள், கல்வி, வேலைவாய்ப்புகள்

நான்கு தசாப்தங்களாகக் குடியுரிமையும் வாக்குரிமையும் அற்ற நிலையில் மலையக இந்திய மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரவசதி, வீட்டு வசதி என்பவற்றில் பிற சமூகத்தவரை விடப் பின்தங்கியவர்களாகவே உள்ளனர்.

கல்வித்துறையில் நகர்ப்புற மக்களின் எழுத்தறிவு 89.1 வீதமாகவும், கிராமப்புறமக்களின் எழுத்தறிவு 84.6 வீதமாகவும் இருந்தவிடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட இந்தியர்களின் எழுத்தறிவு வீதம் 59.4 ஆக உள்ளது. இந்தியப் பெண்களின் எழுத்தறிவு வீதம் 46 வீதம் மட்டுமே (1985).[11] அவ்வாறே, இந்தியத் தொழிலாளர் பிள்ளைகளின் பாடசாலை இடைநிறுத்த வீதம். மாணவர் சேர்வு வீதம், பல்கலைக்கழக அனுமதி வீதம் என்பன தேசிய சராசரியுடன் ஒப்பிடும் போது இன்றளவில் பின்தங்கிய நிலையில் உள்ளன. ஆயினும் அண்மைக் காலங்களில் பெரும்பாலான மலையகத் தமிழ்ப் பாடசாலைகள் வெளிநாட்டு உதவியுடன் முன்னேற்றங்கண்டுள்ளன, மலையகத்தில் ஒரு கல்வியியல் கல்லூரியும் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. 3000 மலையக இளைஞர்கள் வரை மலையகத் தமிழ்பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் கல்வித்துறையில் ஏனைய சமூகத்தினர் அடைந்துள்ள தராதரங்களை எய்த புதிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. நீண்ட காலமாகப் பெருந்தோட்டப் பாடசாலைகள் தேசிய கல்வி முறைக்கு அப்பாற்பட்ட முறையில் பெருந்தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பில் இயங்கியமையால் கல்வி முன்னேற்றம் பின்தங்க நேரிட்டது.

அவ்வாறே பெருந்தோட்ட சுகாதார சேவைகளும் தேசிய சுகாதார சேவைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை. 1972 வரை பெருந்தோட்ட நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழ் வந்த சுகாதார சேவைகள், தேசியமயமாக்கத்தின் பின்னர் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், சபை ஆகிய அமைப்புக்களின் கீழ் வந்தன. 1992 இல் பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கத்துக்கு உட்பட்ட பின்னர் வெளிநாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட அரசாங்கப் பொதுநல ட்ரஸ்ட்டினால் சுகாதார சேவைகள் பொறுப்பேற்கப்பட்டன. அரசாங்க நிதி ஒதுக்கீடின்றி வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிநிதியே இச் சேவைகளுக்கு உதவி வருகின்றது. மேற்கண்ட நடவடிக்கைகளின் காரணமாக பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் (JEDB) கீழ்வரும் தோட்டங்களில் பிள்ளை இறப்பு வீதம் 73 இலிருந்து (1982) 49ஆகக் (1989) குறைந்துள்ளது. அரச பெருந்தோட்டக்கூட்டுத்தாபனத் தோட்டங்களில் இவ்விகிதம் 75 இலிருந்து (1982) 34 ஆகக் (1989) குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் தேசிய சராசரியுடன் ஒப்பிடும் போது (1982 - 30, 1989 - 17) பெருந்தோட்டப் பிள்ளைகளின் இறப்பு விகிதம் இன்னும் அதிகமாவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்டங்களில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் பொதுவாகச் சேவையில் இல்லை (நாட்டில் 1996 இல் 5904 பயிற்சிபெற்ற மருத்துவர்கள்). மலையக மாவட்டங்களில் வாழுவோரின் சராசரி வயது (life expectancy) ஏனைய மாவட்டங்களை விடக் குறைவாகவே உள்ளது.[12]

வீட்டு வசதிகளைப் பொறுத்தவரையில் சுதந்திரத்தின் பின்னரும் பல தசாப்தங்களாக மலையக மக்கள் லைன் வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். 1969–1970 இல் 85 வீதமான மலையகத் தொழிலாளர்களின் வசிப்பிடமாக இவை விளங்கின. 1947–1975 காலப்பகுதியில் தனியார் நிர்வாகம் வீட்டு வசதிகளை முன்னேற்ற முற்படவில்லை. 1984 இல் தொடங்கப்பட்ட 10 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தில் பெருந்தோட்டங்கள் சேர்க்கப்படவில்லை. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையின் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1990–95) பெருந்தோட்டங்களில் 5000 வீடுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டது. இன்றைய பெருந்தோட்டக் கட்டமைப்பு அமைச்சிற்கு இத்துறையில் முக்கிய பொறுப்புண்டு.

மலையக இந்தியர் சமூகம் குடியுரிமையற்றிருந்தமையால் போதிய அரசாங்க வேலைவாய்ப்புகள் அவர்களுக்குக் கிட்டவில்லை, அண்மைக் காலங்களில் அரசாங்க சேவையில் இந்தியத் தமிழர்களின் வீதாசாரம் 0.1 மட்டுமே, மாகாணசேவைகளின் 0.2 வீதம், அரசாங்க சபைகள், கூட்டுத் தாபன சேவைகளில் 0.5 வீதம் எனக் குறைந்த அளவிலேயே அவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

**முடிவுரை**

சுதந்திரத்தின் பின்னர் நான்கு தசாப்தங்களாக இந்தியத் தமிழர்கள் குடியுரிமையும் வாக்குரிமையும் அற்றவர்களாய், தேசிய அரசியலில் வலிமையற்ற சமூகமாக வாழநேர்ந்தது. இந்நிலை அவர்களுடைய சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையில் எதிர்மறைப் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தது. கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, வேலைவாய்ப்பு என்பவற்றில் அவர்கள் ஏனைய சமூகத்தவரைவிடப் பின் தங்கியவர்களாய் ஒரு தொழிலாளர் சமூகமாகவே வாழ நேரிட்டது. கடந்த ஒரு தசாப்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் உரிமைகள் இச்சமூகத்தவர் மத்தியில் புதிய விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. இன்று அவர்கள் இலங்கைப் பன்மைச் சமூக அமைப்பின் ஒரு முக்கிய அங்கமென்ற அங்கீகாரத்தைப் பெற்றவர்களாய், தமது நல்லுரிமைகளையும் தனிப்பண்பையும் கலாசார அடையாளத்தையும் பேணும் அவாவுடன் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் பெற்றுள்ள வாக்கு பலமும் அரசியல் விழிப்புணர்வும் தேசிய அரசியற் கட்சிகளிடத்து ஒரு புதிய கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளது. வட பகுதியில் வளர்ச்சி பெற நேர்ந்த தீவிரவாத அரசியலினால் பெற நேர்ந்த அனுபவங்களின் அடிப்படையில், மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளையும் அபிலாசைகளையும் துரிதமாகத் தீர்க்கவேண்டும் என்ற முறையில் தேசிய அரசியற் கட்சிகள் இன்று சிந்திக்க முற்பட்டிருப்பதும் ஒரு முக்கிய முன்னேற்றமாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. மலையகத் தமிழர் என்ற சொல் இலங்கையில் வசிக்கும் சகல இந்தியமரபு வழித் தமிழர்களையும் கருதுகிறது. இச் சொற்பிரயோகம் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. இலங்கையின் குடிசன மதிப்பீட்டு அறிக்கைகள் இந்தியத்தமிழர் என்ற சொல்லையே பயன் படுத்துகின்றன.

2. டொனமூர் அறிக்கையின்படி (1928) 40–50 வீதமானவர்களும் ஜாச்சன் அறிக்கையின் படி (1938) 60 வீதமானவர்களும் சோல்பரி அறிக்கையின் படி 1946 ஆம் ஆண்டளவில் 80 வீதமானவர்களும் நாட்டில் நிரந்தரமாகக் குடியேறியிருந்தனர்.

3. 1930 களில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினால் உருவாகிய வேலை வாய்ப்புப் பிரச்சினை காரணமாக, அரசாங்கத் திணைக்களங்களில் (பொது வேலைத்திணைக்களம், துறைமுகம், புகையிரதப்பகுதி) பணிபுரிந்த இந்தியர்களின் இடத்தில் இலங்கையர்களை அமர்த்த இக்கொள்கை உருவாக்கப்பட்டது.

4. S.U. Kodikara, Indo-Ceylon Relations Since Independence, Colombo, 1965, PP 30-40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. John Kotalawela, An Asian Prime Minister's Story, London, 1956, P99. இவரது கூற்று: " மூன்று தலைமுறைகளாகியும் இன்னும் இந்தியர்கள் உள்ளூர் மக்களுடன் கலந்து விடாது இந்தியர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்."

6 L.L.T Peiris , The Citizenship Law of the Republic of Sri Lanka, Colombo, 1974

7. 1964 ஆம் ஆண்டின் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம், 1974 இன் சிறிமா-இந்திராகாந்தி ஒப்பந்தம்.

8. இத் தொகையுடன் 1,24000 பிள்ளையும் (இயற்கை அதிகரிப்பு) சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

9. மேலும் விபரங்களுக்குப் பார்க்க:

V. Suriyanarayan, ed, Rehabilitation of Sri Lankan Repatriates

A Critical Analysis, Madras, 1986

M.Vamadevan, Sri Lankan Repatriates in Tamil Nadu, Madras 1989.

10. B,Bastiam pillai, Survey of Contlicts Among Communities in Sri Lanka, University of Madras, 1995, p49

பார்க்க:

L.Piyadasa, SriLanka; The Holocaust and After, London, 1984

11. Dept. of Census and Statistics, Labour Force and Socio-Economic Survey, Colombo 1987.

12. P.Muthulingam ,Devolution and Indian-Origin Tamils ,Lanka Guardian , Vol19, No 20, 1997, pp 11-12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கல்வியின் வரலாற்று பின்னணி

மலையக சமூகத்தின் கல்வித் துறையிலான பெறுபேறுகளின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வதேஇந்த கட்டுரையின் பிரதான நோக்கமாகும். இத்தகைய இம் முயற்சி மலையக சமூகத்தின் முழுமையான வரலாற்று ரீதியான ஆய்விற்கும் ஒரு முன்னோடியாக அமையும்.

## காலனித்துவக் கோட்பாடுகள்

19ம் நூற்றாண்டின் காலகட்டங்களிலும் பிரித்தானிய ஆட்சி கால கட்டத்திலும் காலனித்துவத் தத்துவங்களை அடியொற்றிய கல்வி பாரம்பரியம் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அரசு சார்ந்த மற்றும் தனியார் துறையிலான அமைப்புகளுக்கான உத்தியோகத்தர்களை ஆங்கில மொழியின் மூலம் தயார்படுத்துவதே இக் கல்வி முறையின் நோக்கமாக இருந்தது. ஆங்கிலம் மாத்திரமே உத்தியோக பூர்வமான மொழியாக்கப்பட்டமையால் ஆங்கில மொழியில் அறிவுள்ளவர்கள் மாத்திரமே அரசாங்க தொழில் வாய்ப்புகள் பெறும் உரித்துடையவர்களானார்கள்.

ஆங்கில மூலமான, கல்வி கட்டணம் அறவிடப்படும் பாடசாலைகள் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டன் காரணமாக பொருளாதார ரீதியின் செல்வாக்குமிக்க சமூக அமைப்பினை சார்ந்தவர்களே இதன் பயன்களை பெறக் கூடியதாக இருந்தது.

ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்ததன் காரணத்தால் இயல்பாகவே அம்மொழியில் தேர்ந்தோரே அரசாங்க வேலைவாய்ப்புகளை பெறக் கூடியதாக இருந்தது. இதுவே பிரித்தானிய அமைப்பின் கீழான கல்வி நெறியாக இருந்ததன் காரணத்தினால் ஒரு வர்க்க சார்பான அமைப்பினை தமக்கு சாதகமாக பயன் படுத்திக் கொள்வது மலையக மக்களுக்கு கைகூடாத காரியமாயிருந்தது. இக் காலனித்துவ முறையின் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகவே ஆங்கில மொழி மூலமான கல்வி அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில கல்வி முறை

19 ம் நூற்றாண்டில் அப்போதிருந்த கல்வி முறை குறித்தும் அதனை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்கான பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. இவ்வாணைக் குழுக்களின் அணுகுமுறை காலனித்துவ தேவைகளை பிரதிபலிப்பதாக இருந்ததின் காரணத்தினால் சமூகத்தில் பின்தங்கிய மக்களின் கல்வி வளர்ச்சியை இவை கவனத்திற் கொள்ளவில்லை. குறிப்பாக 1832ஆம் ஆண்டில் வெளிவந்த கோல்புரூக் அறிக்கை ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சகல பாடசாலைகளிலும் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் ஆங்கில மொழியில் படிப்பிக்கும் தகைமையை பெற்றிருத்தல் வேண்டுமென்பதை ஒரு நிபந்தனையாக வலியுறுத்தியது.

மேலும் கோல்புரூக் பிரேரணைகள் சிங்களமும் தமிழும் கல்வி திட்டத்தில் சேர்க்கப்படுவதை அங்கீகரிக்கவில்லை. அப்போதைய காலகட்டத்தில் சிவில் நிர்வாக உத்தியோகத்தர்களை வெளிநாட்டிலிருந்து தருவிப்பது செலவு கூடிய காரியமாயிருந்தது. இதற்கு பிரதியீடாக உள்நாட்டு சிவில் உத்தியோகத்தர்களை கொண்ட ஒரு அதிகார வகுப்பினரை ஆங்கில கல்வியின் மூலம் தோற்றுவிப்பது காலனித்துவ நோக்கங்களுக்கு சாதகமான ஒன்றாகயிருந்தது. கோல்புரூக்கின் பிரேரணை 1832 ம் ஆண்டில் புதிய கல்வி முறையின் அத்திவாரமாயிற்று. அக்கால கட்டத்திலேயே இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் வரவும் ஆரம்பமாகியது. ஆனால் 19ம் நூற்றாண்டில் முழுக் காலப்பகுதியிலும் தோட்டப்புற மக்களின் கல்வி தேவைகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டமை காணப்படுகிறது. கல்வித் தேவைகள் குறித்து நியமிக்கப்பட்ட சகல ஆணைக் குழுக்களுமே தோட்டப் புற மக்களின் தேவைகளைக் குறித்து முற்றாக மௌனம் சாதித்தனர்.

உண்மையில் பெருந் தோட்டகலாசாரத்தின் ஒரு அம்சமாகக் கல்வி அங்கீகரிக்கப் படவேயில்லை என்பதுடன் தோட்டப்புற குழந்தைகளின் வாழ்வின் தேவைகளுக்கென ஒரு நடைமுறை அம்சமாக கல்வி அங்கீகரிக்கப்படவுமில்லை. ஒரு உண்மையான விடுதலையின் அடிப்படை அம்சமாக கணிக்கப்பட வேண்டிய கல்வி, தோட்ட துரைமாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரையில் ஒரு ஆபத்தான அம்சமாக கணிக்கப்பட்டது. சிலர் மேலும் ஒருபடி சென்று கல்வியானது தோட்ட தொழிலாளரின் தொழில் திறமைகளை முடமாக்கிவிடக் கூடும் என்றும் கருதினர்.

## 1900ம் ஆண்டுகளில் அரசு சார்ந்த கல்வியின் நிலைப்பாடு

1901 ஆண்டில் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் குடிசனக் கணக்கெடுப்பு துறையின் சிரேஷ்ட அதிகாரியாக இருந்த பொழுதே சமூகத்தில் பின் தங்கிய மக்களின் கல்வி தேவைகளைக் குறித்து வலியுறுத்தப்பட்டது. 1901ஆண்டில் வெளியிடப்பட்ட பொன்னம்பலம் இராமநாதனின் அறிக்கையில் இலங்கையில் அப்போது 8,60,000 பள்ளிக்கூடம் செல்லும் வயதுடைய பிள்ளைகளில் 6,80,000 சிறுவர்கள், அதாவது மொத்தத்தில் 3/4 பகுதியினருக்கு பாடசாலைகளுக்கு செல்லும் வசதிகள் இல்லை எனச் சுட்டிக் காட்டிக்காட்டப்பட்டது. இந்த விபரங்களை ஆதாரமாகக் கொண்டு திரு. இராமநாதன் அவர்கள் அரசாங்கத்தின் கல்வி கொள்கை பிரதானமாகக் கிராமப்புற தேவைகளை அடியொட்டியதாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியதோடு ஆங்கிலம் சார்ந்த நகர்புற உயர்மட்ட கல்வியானது தனியார் மற்றும் நகர சபை சார்ந்த நிறுவனங்களின் பொறுப்பில் விடப்பட வேண்டும் என்ற கருத்தினை வெளியிட்டார். இதன் பின்னால் ஏற்பட்ட கல்வி சீர்திருத்தங்களுக்கு இக்கருத்து ஒரு கால்கோளாக அமைந்த பொழுதிலும் அச்சட்ட ஆக்கங்களில் மலையகத்தின் கல்வி சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இந்த குடிசன மதிப்பீடு அறிக்கையானது இலங்கையின் அரசு சார்ந்த கல்வி முறை குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தில் பல கேள்விகள் எழக் காரணமாயிற்று. கல்வி வசதிகள் கிராமப்புற சிறுவர்களுக்கு மாத்திரமன்றி தோட்டப்புற சிறுவர்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டிய அவசியத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். இவர்களது இந்த பிரேரணைகள் ஏனைய பல பாராளுமன்ற அங்கத்தவர்களால் வலியுறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய பாராளுமன்றத்திலும் சில மனிதாபிமான குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பிரசாரத்தின் காரணமாகவே தோட்ட நிர்வாகங்கள் கல்வி குறித்த ஆரம்ப நடவடிக்கைகளை ஏடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோட்டப்புற கல்வி குறித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முன்னாள் பொதுசன கணிப்பீட்டு அதிகாரியாகவிருந்த S.M. பரோவ்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். அவரது அறிக்கைகள் தோட்டப்புற கல்வியில் பெரும் பகுதி லயத்துப் பள்ளிக் கூடங்கள் எனப்பட்ட அமைப்பின் மூலமே பெறப்பட்டன என்பதையும் அவ்வாறு பெறப்பட்ட கல்வி நெறியும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தது என்பதையும் சுட்டிக் காட்டின. ஆனாலும் தோட்ட தொழிலாளரைப் பொறுத்தவரையில் அந்த அமைப்பே பொருத்தமானதென்றும் மேலும் தாய் மொழிக் கல்வியே தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். 1905ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட வேஸ் ஆணைக்குழு இலங்கையின் பொதுவான கல்வி அமைப்பின் கீழ் தோட்டப்புற கல்வி அமையக்கூடாது என்ற கருத்தை கொண்டிருந்ததுடன் லயன் முறை சார்ந்த கல்வி அமைப்பின் தொடர்ச்சியை ஆதரிக்கவும் செய்தது. இக் கருத்தின்படி ஓரளவு அனுசரணையுடன் கூடிய தோட்ட நிர்வாகத்தின் கீழான கல்வி முறையே தோட்டப்புற மக்களுக்கு உகந்தது என்ற சிபாரிசு முன்வைக்கப்பட்டது. மேலும் ஒரு தோட்ட நிர்வாகி கல்வி தேவைக்காக ஒரு குறிப்பிட்ட அறையையோ அல்லது கட்டடத்தையோ வழங்கியுள்ளதை அரசாங்கத்திற்கு நிரூபிக்க வேண்டும் என்றும் அப்படி இல்லாத பட்சத்தில் அரசாங்கமே அத்தகைய வசதிகளை வழங்கி அதற்கான செலவை தோட்ட நிர்வாகத்திடமிருந்து அறவிட வேண்டுமெனவும் இவ்வறிக்கை நிர்ப்பந்தித்தது.

ஒட்டு மொத்தமாக 1907 ம் ஆண்டிலான கிராமப் புற பாடசாலைச் சட்ட அமுலாக்கத்தின் முன்னர் தோட்டப்புற பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட கல்விக்கான நிலையங்கள் பின்வருமாறு அமைந்தன:-

1. தோட்ட தொழிலாளர்களின் முனைப்பினால் உருவாக்கப்பட்ட "லயன்,காம்பரா, பள்ளிகள்"

2. கிறிஸ்தவ மிஷன்களால் உருவாக்கப்பட்டவை.

3. ஏனைய தனியார் முயற்சிகளினால் உருவாக்கப்பட்டவை.

4. தங்களுடைய மதம் சார்ந்த அக்கறைகளை முனைப்பாக கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து, பௌத்த சமய ஸ்தாபனங்களின் கல்வி நிலையங்கள் உருவாக்கப் பட்டது.

இதைத் தவிர பெரிய கங்காணிமாரும் தமது ஏனைய கடமைகளுக்கு புறம்பாக பாடசாலை பொறுப்புகளையும் கையாண்டதற்கான ஆதாரங்கள் உண்டு. பொதுவாக பெரிய கங்காணிமாரும் தோட்ட உத்தியோகஸ்தர்களும் தமது பிள்ளைகளில் கூடிய அக்கறை காட்டியதைக் காணகூடியதாக விருக்கிறது.

இப்பள்ளிக் கூடங்களில் வழங்கப்பட்ட கல்வி மிகவும் பின்தங்கியதாக இருந்த போதிலும் அக்கால கட்டத்தில் இதனை ஒரு பெறுபேறாகவே கருதப்பட வேண்டும். அரசாங்க பதிவுகளின் பிரகாரம் 1904ம் ஆண்டில் முழு மலையகத்திலும் 179 லயன் காம்பரா பள்ளிக்கூடங்கள் இருந்த அதே நேரத்தில் 120 பள்ளிகள் தோட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட கட்டடங்களில் நடத்தப்பட்டன. இவற்றில் 60 பள்ளிக்கூடங்கள் மாத்திரமே அரசாங்க உதவியைப் பெற்றன. இவற்றில் பெரிய கங்காணிமாரின் கண்காணிப்பிலிருந்த பள்ளிக்கூடங்கள் ஒருமைப்பாட்டினை காப்பதில் கூடிய அக்கறை செலுத்தின எனலாம், அதே நேரத்தில் கிறிஸ்தவ மிஷன்களால் நடத்தப்பட்ட பள்ளிக் கூடங்களும் தனியார் துறையை சார்ந்த பள்ளிக் கூடங்களும் குறிப்பிட்ட நிர்வாகத்தினரின் ஈடுபாட்டை பொறுத்தே தமது பங்களிப்பை அளித்தன.

20ம் நூற்றாண்டின் விடியலோடு ஆரம்பமாகிய இப்புதிய கல்வி சீர்திருத்தங்களின் போக்குகளின் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் 1961ம் ஆண்டளவிலேயே ஆரம்பமாகியது எனலாம்.

இதைத் தொடர்ந்து 1970ம் ஆண்டிலிருந்து தோட்ட பாடசாலைகளை படிப்படியாக அரசாங்கம் கையேற்க ஆரம்பித்தது. இந்த பணி 1988ம் ஆண்டளவில் பூர்த்தியாகியது. ஆனால் அரசாங்கத்தின் இந்த தாராள கொள்கைக்கு வெளிநாட்டு உதவிகளை பெறும் நோக்கமும் பின்னணியாக இருந்தது எனலாம்.

ஆனால் இதே கால கட்டத்தில் தோட்டங்கள் அரசாங்க மயப்படுத்தப்படல் போன்ற காரணங்களினால் பல தோட்ட பாடசாலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. உதாரணமாக நுவரெலியா பிராந்தியத்தில் 1977ம், 1978ம் ஆண்டளவில் மாத்திரம் 18 தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டன.

ஆனால் அரசாங்க மயப்படுத்தப்பட்ட காரணத்தினால் உடனடி முன்னேற்றங்கள் ஏற்பட்டன என கூற முடியாது. அரசாங்கத்தைக் காட்டி தோட்ட நிர்வாகங்கள் தமது பொறுப்புக்களை கைகழுவின. அரசாங்க கல்வித் துறையாளரோ அசட்டையாக இருந்தனர். ஆசிரியர் பற்றாக்குறை, போதிய வசதியின்மை போன்ற பிரச்சனைகள் தொடர்ந்தன. நிர்வாக சீர்குலைவால் ஆசிரியர் வரவும் கணிசமாகக் குறைந்தது. இப் பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்களால் கூலிகளைப் போல் நடத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. இக்கால கட்டத்தில் தோட்ட பாடசாலைகளில் 6% மானவையே இடைநிலைக் கல்விக்கான வசதிகளைக் கொண்டிருந்தன. இக்கால கட்டத்தில் கல்வியின் வளர்ச்சிக்குஆதாரமாக இருந்தது வசதிபடைத்த பெற்றோரின் அக்கறை மாத்திரமே எனலாம்.

## கல்வியின் தராதரம்

இலங்கையின் கிராமப் புறங்களோடு ஒப்பிடும்போது மலையக கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. 1953ல் தோட்ட சனத்தொகையினரில் 60% மானவர்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தனர். 1963ல் இந்த விகிதம் 57 சதவீதமாகவும், 1973இல் 52 சதவீதமாகவும் குறைந்திருந்தாலும் இன்னும் கல்வியறிவின்மை ஒப்பீட்டளவில் கூடுதலாகவே இருக்கின்றது.

அடி மட்டத்தில் காணப்படுகின்ற கல்வியறிவின்மையின் பாதிப்பு மலையகத்தைப் பொறுத்தவரை இடை நிலைக் கல்வி மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் பிரதிபலிக்கச் செய்கின்றது.

பல தோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 6 வரை கல்வி போதிக்கப் பட்டாலும் அதற்கு மேல் கல்வியை தொடர்பவர்களின் தொகை குறைவாகவே உள்ளது. பொருளாதாரப் பிரச்சினை இதற்கு முக்கிய ஒரு காரணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலை தரகர்களுக்கான ஏஜென்ஸி கொமிஷனின் 1974 ம் ஆண்டு அறிக்கையின்படி பாடசாலை செல்லக் கூடிய வயதெல்லையில் உள்ள சிறுவர்களில் 100,000 பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருக்கின்றனர் என தெரிய வருகின்றது. இது அடுத்த ஒரு தசாப்தத்திற்கு கல்வியில் மிகக் குறைந்த தகைமை பெற்ற தோட்டத் தொழிலாளர்களை உருவாக்குவதற்கான அடிப்படையாக அமைகிறது. நாம் சுட்டிக் காட்ட வேண்டிய பிறிதொரு அம்சம் தோட்டச் சிறுவர்கள் வீட்டு வேலைகளுக்கும் ஏனைய வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாகும். 1929 ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களில் 2.64.500 பேர் 10 வயதுக்கு குறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது மொத்த தோட்டத் தொழிலாளர்களில் 36 சதவீதமாகும்.

இத்தகைய காரணங்களின் தொடர்ச்சியாகக் கல்வியில் பின் தங்கிய நிலை மலையகத்தில் ஒரு வரலாற்று அம்சமாக தொடர்கிறது எனலாம்.

தோட்டப் புறங்களில் ஆரம்ப கல்விக்கும் இடைநிலைக் கல்விக்கும் இடையே இருக்கின்ற இடைவெளியின் காரணமாக நகர்புற பாடசாலைகளுக்குச் செல்லும் தோட்டப்புற மாணவர்கள் பல நடைமுறை பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்றது. அதே நேரத்தில் தோட்டப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொள்ளும் சகல மாணவர்களும் இடை நிலைக் கல்வியைத் தொடரும் அளவிற்கான இடை நிலைக் கல்வி பாடசாலைகள் மலையகத்தில் இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மலையகத்தில் இடை நிலைக் கல்வியின் குறைந்த தராதரத்தை நோக்கும் போது பல்கலைக்கழகப் படிப்பிற்கு ஆயத்தம் செய்யும் வகையிலான உயர்மட்ட கல்விப் பயிற்சிக்கான வாய்ப்பும் குறைவாகவே உள்ளன.

## பல்கலைக்கழகக் கல்வி

அண்மை காலம் வரை ஆரம்ப, இடைக் கல்வி இலவசமாக வழங்கப்பட்டாலும் பல்கலைக்கழகத்தில் இந்த உரிமை மலையக மாணவர்களுக்கு மறுக்கப்பட்டே வந்துள்ளது. அவர்களுக்கு பிரத்தியேகக் கட்டணம் அறவிடப்பட்டதுடன் ஏனைய மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனுமதிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950ல் மொத்த பல்கலைக்கழக மாணவர்களில் 1.4 சதவீதத்தினரே தோட்டப்புறத்தைச் சார்ந்தவர்கள். 1977ம் ஆண்டு இது 0.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இன்னும் இதே விகிதாசாரம் மிகவும் கீழ் நிலையிலேயே உள்ளது.

தரப்படுத்தும்முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது இந்தநிலை மிகவும் மோசமாகியது. உதாரணமாக 1970/71ல் 18 மலையக மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். தரப்படுத்தலின் பின்னர் இத்தொகை 11ஆக வீழ்ச்சியடைந்தது. ஆரம்ப, இடைநிலை ஆகிய இரு மட்டங்களிலும் ஏற்படுகின்ற பாதிப்புகளின் காரணமாக மலையக மாணவர்கள் ஏனைய மாணவர்களுடன் பல்கலைக்கழக அனுமதிக்காக போட்டியிடுவது சிரமமான காரியமாகும்.

**பாடத்திட்டம்**

1907 ஆண்டு தோட்டப்புறங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத் திட்டமே மாற்றங்கள் ஏதுவுமின்றி நீண்ட நாட்களாக அமுலில் இருந்தது. இத்தோடு ஆசிரியர்களின் தகைமைக் குறைவும் ஆசிரியர் பற்றாக்குறையும் நடைமுறையில் இருந்த பாடத்திட்டத்தையும் செயலளவில் பயனற்றவை யாக்கின எனலாம்.

**ஆசிரியர்கள்**

1963ல் வெளியிடப்பட்ட கல்வி அதிகாரியின் நிர்வாக அறிக்கையின் பிரகாரம் மலையகத்தில் இருந்த 875 பாடசாலைகளை சார்ந்த 1197 ஆசிரியர்களில் 766 பேர் அதாவது 64 சதவீதமானோர் சான்றிதழ் பெறாத தகுதியற்ற ஆசிரியர்களாவர். சான்றிதழ் பெற்றவர்களில் பலர் 8ஆம் வகுப்பு சித்தியை மட்டுமே பெற்று நீண்டகால சேவையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் சான்றிதழ் பெற்றவர்களாவர். இவர்களில் சிலருக்கு ஆசிரியர் கலாசாலைக்கு செல்ல அனுமதி கிடைத்தும் பலர் இந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்த விரும்பவில்லை. ஆசிரியர் கலாசாலைக்கு போனவர்களோ தோட்டப்புற பாடசாலைக்குத் திரும்பி வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டப்புறங்களிலான ஆசிரியர், மாணவர் விகிதாசாரமும் அதிகமாகும். உதாரணமாக 1970/71 அரசாங்க பாடசாலைகளில் 24 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற நிலை இருந்தது. 1975,1976ம் ஆண்டுகளில் இந்த சராசரி முறையே ஒரு ஆசிரியர்க்கு 52:53 என்ற விகிதாசாரத்துக்கு அமைய இருந்தது.

**கல்வித் துறையில் சீர்திருத்தங்களும் அவற்றின் பாதிப்புகளும்.**

1930ம் ஆண்டின் பின்னர் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தியதோடு கல்வித் துறையில் ஜனநாயக ரீதியான பரவலாக்கத்தையும் சாத்தியமாக்கின. பின்தங்கிய சமூக மட்டத்தைச் சார்ந்த சிறுவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்த ஏதுவாயிற்று. இச் சீர்திருத்தங்களாவன.

- இலவச கல்வித் திட்டம்
- இடைநிலை கல்வி மட்டத்தில் தாய்மொழி மூலத்தின் அறிமுகம்
- ஒவ்வாரு தேர்தல் தொகுதியிலும் ஒரு மத்திய கல்லூரியை நிறுவுதல்
- 1932ல் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமியமட்டத்திலான கல்வித் திட்டம்.
- அரசாங்க மானியம் பெற்ற பாடசாலைகளை 1961–ம் ஆண்டு அரசாங்க மயப்படுத்தியமை

ஆனால் துரதிஷ்டவசமாக இச்சீர்திருத்தங்களில் எவையுமே தோட்டப்புற பாடசாலைகளை சென்றடையவில்லை. தோட்டப்புற பாடசாலைகள் தேசிய கல்வி திட்டத்துக்கு அப்பால் புறம்பாக இயங்கி வந்தமையே இதற்கு காரணமாகும். இவர்களுக்கு ஏற்கனவே இலவசக் கல்வி வழங்கப்பட்டதுடன் தமிழ்மொழியிலேயே வகுப்புகள் நடத்தப்பட்டன. கிராமப்புற சிறுவர்கள் பயனடைந்த மத்திய கல்லூரிகளுக்கு இவர்களால் போக முடியாததோடு 1961 பாடசாலைகள் அரச மயப்படுத்தப்பட்ட போது தோட்டப்புற பாடசாலைகள் தொடர்ந்தும் தோட்ட நிர்வாகங்களின் கீழ் இயங்கி வர அனுமதிக்கப்பட்டன.

அத்தோடு கல்வி ஆணைக்குழு அறிக்கைகளிலும் 1930இன் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை அறிக்கைகளும் தோட்டப் பாடசாலைகளை முற்றாகப் புறக்கணித்தே வந்தன. அப்படி விதிவிலக்காக சிபாரிசுகள் ஏதேனும் செய்யப்பட்ட போதெல்லாம் அவை தோட்டப்புற கல்வியின் நலன்களுக்கு எதிரானவையாகவே இருந்தன. உதாரணமாக தேசிய கல்வி ஆணைக்குழு (1961). பிராந்திய ரீதியில் அமைந்த பாடசாலைகளில் தோட்ட சிறுவர்கள் அனுமதிக்கப்படலாம் என சிபார்சு செய்த போதிலும் போதனா மொழி சிங்களமாகவே இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தது. 1964ல் வெளியிடப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கை தோட்டப்பாடசாலை அரச மயப்படுத்தப்படும் பட்சத்தில் போதனா மொழி உத்தியோக மொழியாகவே (அதாவது அன்றைய காலகட்டத்தில் சிங்களமாக) இருக்க வேண்டும் என சிபார்சு செய்தது.

1966 ஆண்டு வெள்ளை அறிக்கை உத்தியோக மொழி குறித்து ஒன்றும் கூறாத பொழுதும் தமிழ் மாணவரின் சமூக ரீதியான ஒருங்கிணைப்பு சிங்கள மொழி மூலமான கல்வியின் மூலமே பெறப்பட முடியும் எனக் குறிப்பிட்டது. போதனா மொழியைப் பொறுத்தவரை இலங்கை தமிழருக்கு தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டுமென தேசிய கல்விச் சபை சிபார்சு செய்தது. ஆனால் போதனா மொழி குறித்து மலையக மாணவர்கள் சம்பந்தப்பட்ட இந்த சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

முடிவாக பிரித்தானிய ஆட்சியாளர்களின் அணுகுமுறை தோட்டப்புற கல்வி வளர்ச்சிக்கு அனுகூலமாக அமையவில்லை. தோட்டப் பாடசாலைகள் காலனித்துவ ஆட்சியின் நன்மையையே கருதின. தோட்டப்புற மக்களின் அபிலாஷைகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டதுடன் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளும் மிகவும் குழப்பமானவையாகவே இருந்தன.

ஒரு சாரார் கல்வி தோட்டப்புற மக்களுக்குத் தீங்கையே விளைவிக்கும் எனக் கருதினர். மற்றொரு சாரார் மாறாக கல்வி காலனித்துவத் தேவைகளுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்தனர். சமய ஸ்தாபனங்கள் சமய ரீதியான பொது பெறுபேறுகளுக்கு முதன்மை அளித்தன. கூட்டு மொத்தத்தில் அனைவரும் தங்கள் சுய நோக்கில் இருந்து மலையக கல்வியை நோக்கினார்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிய தோட்டப்புற மக்களின் நன்மையை கருத்திற் கொள்ளவில்லை.

சுதந்திரம் அடைந்த மூன்று தசாப்தங்களுக்கு தோட்டப்புறக் கல்வியைப் பொறுத்த வரை அரசு காலனித்துவ முறையையே பின்பற்றியது. தோட்டப்புறக் கல்வி தொடர்ந்தும் தேசிய கல்வி திட்டத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டது. தோட்டப்புறக் கல்வி தொடர்ந்தும் தோட்ட நிர்வாகத்தின் கையில் விடப்பட்டதால் சிறிய அளவிலேயே மாற்றங்கள் ஏற்பட்டன, மிக அண்மைக் காலத்தில் அந்நிய நிறுவனங்களின் நிதி உதவியுடன் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களைத் தவிர தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் எவையுமே தோட்டப்புற மட்டத்தை எட்டவில்லை என்பது கவலைக்குரிய உண்மையாகும். தோட்டப்புறக் கல்வி மிக நீண்ட காலமாக ஆரம்பக் கல்விக் கட்டத்திற்குள்ளேயே மட்டுப் படுத்தப்பட்டு இருந்தது.

*(தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகம் 16.8.1992ல் நடத்திய கல்வி கருத்தரங்கில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய ஆய்வுரை)*

**தமிழில் : எல்.சாந்திகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வளர்ச்சி பற்றிய ஆய்வுகள்

மலையகக் கல்வி வரலாற்றின் ஆய்வு முன்னோடியாகத் திரு. ஜி.ஏ. ஞானமுத்து திகழ்கின்றார். மலையகக் கல்வி பற்றிய ஆய்வில் ஈடுபடுபவர்கள் அவரை விலக்கிவிட்டு ஆய்வில் ஈடுபடமுடியாது.

கடந்த அரை நூற்றாண்டு கால உலகளாவிய சமூகவியல் ஆய்வுகள் சமூக வளர்ச்சிக்குக் கல்வி வழங்கிய பங்களிப்பைப் பெரிதும் வலியுறுத்துகின்றன. தனியாள், குடும்பம், சமூகம் என்பவற்றின் முன்னேற்றம் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. தேசிய பொருளாதார, பண்பாட்டு, அரசியல் வளர்ச்சிக்கும் கல்வித்துறை முன்னேற்றம் தேவை. பல்வேறு சமூகப் பிரிவினரின் பின்தங்கிய நிலையை அவர்களுடைய கல்வி நிலையைக் கொண்டே விளக்க முடிகின்றது.

மலையகத்தில் கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற இந்திய வம்சாவளித் தமிழர்கள் இலங்கையில் கல்வித் துறையில் பிற சமூகத்தவர்களைவிடப் பின்தங்கியவர்கள் என்பதை இந்நாட்டுக் கல்வியாளர்கள் மட்டுமன்றி ஜனாதிபதிக்கு ஆலோசனை கூற அமைக்கப் பட்டுள்ள தேசிய கல்வி ஆணைக்குழுவினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்களுடைய பாடசாலைகளில் பெரும்பாலானவை ஒரு காலத்தில் தோட்ட முகாமையாளரால் ஏற்படுத்தப்பட்டவை, தோட்டப்பாடசாலைகள் என்றே பெயர் பெற்றவை. 1960களில் 800 பாடசாலைகள் வரை இருந்தன. இவை மலையக மக்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் நிலையில் இருக்க வில்லை. இப்பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியன்றி அடிப்படைக்கல்வி, அதாவது எழுத்தறிவுக்கல்வி கூட முறையாக வழங்கப்படவில்லை. இம்மக்களின் பின்தங்கிய கல்வி நிலைமை காரணமாக கடந்த தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், மதிப்பீடுகள் யாவும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் எழுத்தறிவு. கல்வி மட்டம், க.பொ.த. சா/தி, க.பொ.த உ/தி மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளில் அடைவு. இடைவிலகல் வீதம், பல்கலைக்கழக அனுமதி என்பவற்றில் பின்தங்கிய நிலையில், குறிப்பாக நாட்டின் பிற இனத்தவருடன் ஒப்பிடும் போது கல்வி ரீதியாகப் பாதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினராகக் காணப்பட்டனர் என்பதையே எடுத்துக்காட்டின.

இலங்கையின் கல்விநிலைமை, கல்விப் பிரச்சினைகள் பற்றிப் பொதுவாக ஆராய்ந்தவர்கள், கல்வித்துறையில் பின்தங்கிய பிரிவினர் பற்றிக் குறிப்பிட வேண்டி வந்தவிடத்து முஸ்லிம்கள், பெருந்தோட்டத் தொழிலாளரின் பின்தங்கிய கல்வி நிலை பற்றிக் குறிப்பிட்டனர். ஆயினும் இப்பிரிவினரின் இந்நிலைமை பற்றி வரலாற்று ரீதியாக ஆராய்ந்து சமகால நிலைமை பற்றிய மதிப்பீட்டினைச் செய்து எதிர்கால கல்வி வளர்ச்சிக்கான முறையில் நூல் வடிவில் முன்வைத்தவர் திரு. ஞானமுத்து. இன்று மலையக மக்களின் கல்வி நிலை பற்றி அறிய ஞானமுத்துவின் ஆங்கில நூலைப் படித்தே ஆக வேண்டும். இவ்வகையில் ஞானமுத்து மலையக மக்களின் கல்வி நிலைமை பற்றிய ஆய்வு முன்னோடி என்பதில் ஐயமில்லை.

மலையகத்தில் ஆசிரியராகவும் தொழில் அதிகாரியாகவும் பணிபுரிந்த காலத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர். அவர் தம் பிள்ளைகள் ஆகியோரின் பின்தங்கிய வாழ்க்கை நிலைமை, பின்தங்கிய கல்வி நிலைமை என்பவற்றைப் பற்றி அனுபவரீதியாக அறிந்தவர் திரு. ஞானமுத்து. தமது அலுவலகப்பணியை வெறுமனே கடமையாக மட்டும் கருதாது தாம் சேவையாற்ற வந்த மக்களின் நிலைமைகளில் ஆழ்ந்த அக்கறை கொண்டவராய், மலையக மக்களின் கல்வி நிலைமை பற்றிய வரலாற்று ஆய்வொன்றை மேற்கொள்ள அவர் முற்பட்டார்.

1850 ஆம் ஆண்டின் பின்னர். இம்மக்களின் கல்வி நிலைமைகள், கல்வி ஏற்பாடுகள் தொடர்பான அரசாங்க ஆவணங்கள், சட்டமூலங்கள் கல்வி நிலைமை பற்றி ஆராய்ந்த குழுக்களின் அறிக்கைகள், பருவப் பத்திரங்கள், சட்டசபை ஆவணங்கள், கட்டுரைகள் என்பவற்றையெல்லாம் தேடிப்பிடித்து அட்டவணைப்படுத்தி ஆராய்ந்து நூலாசிரியர் தகவல்களை சேகரித்துள்ளார். ஒரு பல்கலைக்கழகக் கல்வியல் ஆய்வாளர் போன்று ஆய்வுப் பணிபுரிந்து பிற்காலத்தில் இத்துறையில் ஆய்வுகளைச் செய்ய முற்பட்ட ஏனைய பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்கும் ஞானமுத்து முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார்.

மலையக மக்களின் கல்வி மேம்பாட்டில் அக்கறை செலுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு நிறுவனங்களும் ஆய்வாளர்களும் கூட ஞானமுத்துவின் ஆய்வு நூலினைத் தமது அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்குப் பெரிதும் பயன்படுத்தினர். இவரது ஆய்வு நூல் வெளியிடப்பட்டு இரு தசாப்தங்கள் ஆகிவிட்ட போதிலும், இடைக்காலத்தில் கல்வித்துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள் பற்றிய விரிவான புதிய நூல் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆயினும் இவ்விடயம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் பல வெளியிடப்பட்டன. இவற்றுக்கு ஞானமுத்து தயாரித்துள்ள நூற்பட்டியல் பெரிதும் உதவியது எனலாம்.

இன்றைய கல்வியியல் ஆய்வாளர்கள் ஞானமுத்துவின் ஆய்வுப்பணியை அடியொற்றிச் செய்யக்கூடிய சில ஆய்வுப்பரப்புகளைச் சுட்டிக்காட்டுவது பயனுடையதாகும். இன்றைய பாடசாலைக் கல்வி பாடசாலை விடுகைச் சான்றிதழைப் பெறுவதற்கு உதவுவதாக அமைந்துள்ளது. இப்பள்ளி இறுதிச் சான்றிதழ்கள் (க.பொ.த.சா/நி, உ/நி) உயர் கல்வி நிலையங்களுக்கான அனுமதிக்கும் வேலைவாய்ப்புகளுக்கும் முக்கியமானவை. பாடசாலைக் கல்வியின் முழுப்பயனையடைய மாணவர்கள் இறுதி ஆண்டு வரை பயில வேண்டும். 6ஆம் 7ஆம் ஆண்டில் இடையில் விலகுவோர். கல்விச் சான்றிதழ் இல்லாத நிலையில் கண்ணியமான தொழில்களையோ உயர்கல்வியையோ பெற முடியாது. காலங்காலமாக பெருந்தோட்ட மாணவர்களின் இடைவிலகல் வீதம் அதிகமாக இருந்து வந்துள்ளது. ஆயினும் அண்மைக்காலங்களில் பெருந்தோட்ட மக்களின் கல்வி நிலை வளர்ச்சிக்கென அந்நிய நாட்டு உதவி பெறப்பட்டு பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பாடசாலை அடிப்படை வசதிகள், ஆசிரியர் பயிற்சி, தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றை மேம்படுத்தும் வகையில் இவ்வுதவிகள் அமைந்தன.

இந்நிலையில் இன்று மலையகப் பாடசாலைகளில் உள்ள க.பொ.த.சா.நி உயர்நிலைப் பிரிவுகளில் பயிலும் மாணவர்களில் எத்தனை வீதமானவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள்? பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் எந்த அளவுக்குத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளைச் சென்றடைந்துள்ளன? ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் சித்தி பெறுவோர், அண்மைக்காலங்களில் மலையகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பதவிகளைப் பெற்றோர் ஆகியோரில் பெருந்தோட்டப் பிள்ளைகளின் வீகிதாசாரம் என்ன? பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் பிள்ளைகளின் இடை விலகலை எந்த அளவுக்குக் குறைக்க உதவியுள்ளன? இவை போன்ற ஆய்வுப்பிரச்சினைகளுக்கு விடை காணமுயல்வது ஞானமுத்து அவர்களின் மலையகக் கல்வி நிலை பற்றிய ஆய்வு நெறியை முன்னெடுத்துச் செல்லப் பெரிதும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய கல்விச் செல்நெறிகளும் மலையகக் கல்வியும்.

இன்று சர்வதேச ரீதியாகவும் தேசியரீதியாகவும் கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், புத்தாக்கங்கள், அவை காரணமாக மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் என்ற பின்னணியில் மலையக மக்கள் கல்வித்துறையில் அடைந்துள்ள அண்மைக் கால முன்னேற்றங்களை நோக்க வேண்டும்.

சர்வதேச ரீதியாக நோக்குமிடத்து, இன்று வளர்ச்சியடைந்த நாடுகளிலும் புதிதாக கைத்தொழிலாக்கம் பெற்ற நாடுகளிலும் கல்வித்துறையில் ஏற்பட்ட சில முன்னேற்றங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- பாடசாலைக் கல்வி நிலையில் 100 வீதமாணவர் சேர்வு,
- உயர் கல்வி நிலையில் உயர்ந்தபட்சம் 50 சதவீதமான இளைஞர்களின் பங்கு பற்றல் வீதம் (ஐக்கிய அமெரிக்கா 50%, ஜப்பான் 40%)
- பாடசாலைக் கல்வி பன்முகப்படுத்தப்பட்டு தொழில்சார், தொழில் நுட்ப, தகவல் தொழில் நுட்பக் கல்வித்துறைகள் வளர்ச்சியுற்றமை.
- பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான மனித வளத்தைக் கல்வியின் மூலம் பயிற்றுதல்,
- பொருளாதார விருத்திக்கும் கல்விச் செயற்பாட்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தல், வளர்ச்சியடைந்த நாடுகளுக்கிடையிலான பொருளாதார போட்டிகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் மக்களின் கல்வித் தேர்ச்சியையும் தகுதிகளையும் உயர்த்துதல்
- முக்கியமாக சேவைத்துறையுடன் (service sector) நான்காவது துறையான தகவல் தொழில் நுட்பத்துறை (Informartion Technology) விரிவடைந்து வருவதால் இத்துறைசார்ந்த திறன்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியினூடாக வழங்க வேண்டும் என்ற கருத்து கைத்தொழில் நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (அதாவது விவசாயத்துறை (முதலாம் துறை), கைத்தொழில்துறை (இரண்டாம் துறை) சார்ந்த திறன்கள் இன்று கல்வித் துறையில் பின் தள்ளப்படும் நிலை அந்நாடுகளில் காணப்படுகின்றது)

❖ உலகளாவிய ரீதியில், வளர்முக நாடுகளிலும் கூட இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்ற கல்வித்துறைச் செல்நெறிகளாவன, யாவருக்கும் கல்வி, யாவருக்கும் விஞ்ஞானக்கல்வி, கம்ப்யூட்டர் எழுத்தறிவு, பாடசாலைக் கல்விக்கு அப்பால் முறைசாராக் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி, போன்றன.

❖ வளர்முக நாடுகளில் வளர்ந்து வரும் மற்றொரு சிந்தனை மாணவர்களை தேசிய தொழில்சந்தைக்கன்றி சர்வதேசிய தொழிற் சந்தையின் தேவைகளைக் கருதிப் பயிற்ற வேண்டும் என்பதாகும்.

❖ மற்றொரு முக்கிய சர்வதேசிய சிந்தனை இன்றைய இளந்தலைமுறையினரை 21ஆம் நூற்றாண்டின் சவால்கள், பிரச்சினைகள், தேவைகள், என்பவற்றைக் கருத்திற் கொண்ட முறையில் கல்வி முறையினூடாக அவர்களை ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதாகும்.

வளர்முக நாடுகளும் இலங்கை உட்பட்ட தென்னாசிய நாடுகளும் மேற்குறிப்பிட்ட கல்விச் சிந்தனைகளின் தாக்கம் காரணமாகத் தமது இளந்தலைமுறையினரின் கல்வியில் பல புதிய சீர்திருத்தங்களை மேற் கொண்டு வருகின்றன.

இலங்கையின் தேசிய கல்வி முறையும் இத்தகைய புதிய சிந்தனைகளின் தாக்கத்தினைப் பெற்று வருகின்றது. எழுத்தறிவு வீதத்தை மேம்படுத்தல், யாவருக்கும் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானக் கல்வியின் விரிவு, கம்ப்யூட்டர் கல்வியின் அறிமுகம், பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்தியோருக்குத் திறந்த பாடசாலைகள், உயர்கல்வியை இடையில் நிறுத்தியோருக்கு திறந்த பல்கலைக்கழகக் கல்வி, ஆசிரியர்களுக்குத் தொலைக்கல்வி முறையினூடாக பயிற்சி, பல்கலைக்கழக மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பியூட்டர்கல்வி, புள்ளியியல் கல்வி, அதிகாரப்பரவலாக்கம், தொழில், கல்வி, வர்த்தக முகாமைத்துவம். ஆலோசனை கூறல். சமுதாய அபிவிருத்தி, மாணவர் பற்றிய மதிப்பீடு, ஜப்பானியவியல் போன்ற இன்னோரன்ன துறைகளில் இன்று உயர்மட்ட கற்கைநெறிகளைப் பல பல்கலைக்கழகங்கள் நடாத்துகின்றன. இவை போன்ற நவீன கற்கைத் துறைகள் பலவற்றை இனங்காண முடியும். கல்வியியல் ஆய்வுகள், கல்வி மேம்பாடு, இலங்கை மக்களின் கல்வித் தராதரங்களை உயர்த்தல் முதலான பணிகளில் இன்று பல அரச நிறுவனங்கள் செயற்படுகின்றன. இவையாவும் பாராளுமன்றச் சட்டங்களால் உருவாக்கப்பட்ட உயர் மட்ட நிறுவனங்களாகும். இவற்றின் நோக்கங்கள், அதிகாரங்கள், கடமைகள், பொறுப்புகள் என்பன சட்ட ரீதியாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய நிறுவனங்களாவன:

- தேசிய கல்வி ஆணைக்குழு
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
- மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக்குழு
- தேசிய கல்வி நிறுவகம் (மஹரகம)

மேலும் இன்று இலங்கையில் 21 ஆம் நூற்றாண்டில் புதிதாக எழவிருக்கின்ற தேவைகளையொட்டிய கல்வி முறையை உருவாக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடிப்படைக் கல்வியின் தராதரம், பொருத்தப்பாடு என்பவற்றை மேம்படுத்துவது புதிய கல்விக் கொள்கையின் முக்கிய நோக்கமாக அமையும்.

வளர்முக நாடுகள், குறிப்பாகத் தென்னாசியநாடுகளைக் கருத்திற் கொள்ளும் போது. 1950களின் பின் எப்போதுமே இலங்கையின் எழுத்தறிவு, மாணவர் சேர்வு வீதம், இடைநிறுத்தல் வீதம் என்பன சார்பளவில் உயர்ந்தே காணப்பட்டு வந்துள்ளன. அண்மைக் காலங்களில் கிழக்கு நாடுகளான கொரியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா என்பன இலங்கையைக் கல்வித்துறையில் முந்திச் சென்றாலும் இலங்கையின் சாதனை இன்றளவும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பின்னணியில் நோக்குமிடத்து மலையக சமூகம் சர்வதேசிய, தேசிய மட்டத்தில் கல்விதுறையில் பின்தங்கிய சமூகமாகவே ஆய்வாளர்களால் இனங்காணப்பட்டுள்ளது.

மிக அண்மைக்கால ஆய்வுகளின்படி (1994) பாடசாலைக் கல்வி பயிலாதவர்கள் (Non School going) இந்தியத்தமிழர்களின் 21.3 வீதமானவர். சிங்களவர் 4.2 வீதமானவர்; இலங்கைத் தமிழர் 7.5வீதமானவர்; முஸ்லீம்கள் 3.6; இலங்கை மக்களின் கல்வி மட்டம் தொடர்பான சகல குறிகாட்டிகளும் இந்தியத் தமிழரின் பின் தங்கிய நிலைமையையே எடுத்துக் காட்டுகின்றன.

**1993-எழுத்தறிவு, இடைநிறுத்தல் விபரம்**

| | | நகர்ப்புறம் | கிராமப்புறம் | தோட்டப்பகுதி |
|---|---|---|---|---|
| 1 | எழுத்தறிவு | 93.0 | 89.5 | 68.5 |
| 2 | கல்வி இடை நிறுத்தல் | 7.4 | 10.9 | 32.3 |
| 3. | இடைநிலைக் கல்வி பெற்றோர்% (1986/87) | 32.0 | 32.0 | 12.0 |
| 4. | க.பொ.த.சித்தி % (1986/87) | 11.9 | 11.9 | 2.7 |
| 5. | க.பொ.த.உ/நியும் பட்டதாரி மாணவரும்% (1986/87) | 2.3 | 2.3 | 0.2 |
| 6. | கல்வி அடைவுச்சுட்டெண் | 6.4 | 5.1 | 2.5 |

ஆதாரம் :- கல்வி அமைச்சுப் புள்ளி விபரங்கள்,
நுகர்வோர் நிதி மதிப்பீடுகள் 1986/87

மேலும் ஆறு மலையக மாவட்டங்களில் விஞ்ஞான உ/நி வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் 9 மட்டுமே உண்டு(சிங்களப் பாடசாலைகள் 125, முஸ்லீம் பாடசாலைகள் 15).

இந்த 6 மலையக மாவட்டங்களிலும் க.பொ.த உ/நி கல்விபயிலும் தமிழ் மாணவர்கள் 1256 பேர் மட்டுமே (சிங்கள மாணவர்கள் 51,800).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உ/நி பயிற்சி நெறியைப் பொறுத்தவரையில் தேசிய ரீதியிலான விஞ்ஞான பாட அடைவு உயர் சுட்டெண் 56–66 வரையாகும். கலை, வர்த்தக பாட அடைவு உயர் சுட்டெண் 60–72 (1992). நாட்டின் 36 பாடசாலைகள் இவ்வாறான உயர் சித்தியைப் பெற்றவிடத்து மலையக பாடசாலைகளில் ஒன்றாவது இவ்வுயர் சித்தியைப் பெறவில்லை.

மலையகப் பாடசாலைகளின் சுட்டெண்களாவன.

| | மாவட்டம் | பாடசாலைகளின் தொகை | சுட்டெண் |
|---|---|---|---|
| 1. | பண்டாரவளை மாவட்டம் | 2 | 47,30 |
| 2. | கண்டி மாவட்டம் | 1 | 38 |
| 3. | நுவரெலியா மாவட்டம் | 3 | 40, 33, 40 |
| 4. | ஏனைய மலையகத்தமிழ் பாடசாலைகள் | 6 | 47,47,40,33,30 |

கலை, வர்த்தகத்துறையில் நாட்டின் உயர் சுட்டெண் 60–72 வரையாகும்.

மலையகப் பாடசாலைகளில் ஒரு பாடசாலை மட்டுமே 65 சுட்டெண்களைப் பெற்றது. ஏனைய 18 தமிழ்ப்பாடசாலை பெற்ற சுட்டெண் 30–57 வரையாகும்.

க.பொ.த உ/நிலைக் கலைக்கல்வியிலும் அடைவுகள் பின்தங்கியே உள்ளன.

மொத்தத்தில் க.பொ.த.உ/நி கல்வியைப் பொறுத்தவரையில் மலையகத்தில்

- பாடசாலைகளின் தொகை மிக குறைவு.
- க.பொ.த உ/நி மாணவர் தொகையும் மிகக்குறைவு (6 தமிழ் பாடசாலைகள் பரீட்சைக்கு அனுப்பிய மாணவர்கள் 64)
- நாட்டில் 3 பாடசாலைகள் 400 மேற்பட்ட மாணவர்களையும் 19 பாடசாலைகள் 100க்கும் மேற்பட்ட மாணவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்கு அனுப்பியுள்ளன.

- அவ்வாறே, மாணவர்களின் உ/நி பரீட்சைச் சித்தியும் மிகக் குறைவு.

- க.பொ.த உ/நி கல்வியின் இப்பின்தங்கிய நிலையின் ஒட்டுமொத்த விளைவாக மலையக மாணவர்கள் மிகச் சிறிய அளவிலேயே பல்கலைக்கழகக் கல்வியில் பங்கு கொள்கின்றனர். இன்று பல்கலைக்கழகக் கல்வி பயிலும் 33,000 மாணவர்களில் மலையகத்தைச் சேர்ந்த ஒரு சில நூறு (200) மாணவர்களாவது இருப்பர் என்பது சந்தேகமே.

## மலையக மக்களின் கல்வி மட்டம்-ஒரு குறிப்பு

இலங்கை மக்களின் கல்வி மட்டம் பற்றிய ஆய்வுகளின்படி(உ–ம்: நுகர்வோர் நிதி பற்றிய மதிப்பீடுகள் போன்றன) அண்மைக் காலம் வரை மலையக மக்களில் 84 சதவீதமானவர்கள் வரை பாடசாலை செல்லாதோராயும் 32 சதவீத மாணவர்கள் ஆரம்பக்கல்வி பயின்றோராயுமே காணப்படுகின்றனர். நாடு சுதந்திரமடைந்து 50 ஆண்டு காலமாகியும் ஆரம்பக்கல்வித் தகுதிகளைக் கூட அவர்கள் இன்னும் முழுமையாகப் பெறவில்லை (நகர்ப்புறத்தில் இத்தகையோர் 48%, கிராமப் புறத்தில் 52%.)

இந்நிலையில் மலையக மக்கள், இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்ட சர்வதேசிய, தேசிய கல்வி இலக்குகளையும் இலட்சியங்களையும் நெருங்கிச் செல்லும் வாய்ப்பு அற்றவர்கள் எனலாம், முழு உலகத்திலும் தேசிய மட்டத்திலும் யாவருக்கும் விஞ்ஞானம், கம்ப்யூட்டர் கல்வி, புதிய நூற்றாண்டின் தகவல்மைய சமுதாயத்தில் வாழ்வதற்கான கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி என்ற அடிப்படையில் கல்விச் செயற்பாடுகள் திட்டமிடப்படும் நிலையில், மலையக மக்கள் இவற்றுடன் எதுவித தொடர்புமின்றி, புதிய கல்வித்தகுதிகளைப் பெறும் மக்களுக்கு சாதாரண உடல் உழைப்புச் சேவை புரிவோராய் வாழ வேண்டிய நிலையை ஏற்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

- மலையக மக்களின் கல்வி மேம்பாடு தொடர்பான புதிய திட்டமொன்றை உருவாக்குமாறு அரசு வலியுறுத்தப்படல் வேண்டும். அரசியல், தொழிற்சங்க தலைமைத்துவம் இதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.
- இக்கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கு மலையக மக்களின் கல்வி மட்டம் துரிதகாலத்தில் ஏனைய இனப்பிரிவினரின் கல்வி மட்டங்களை அடையச்செய்வதாய் இருத்தல் வேண்டும்.
- மலையக மாகாணக்கல்வி அமைச்சுகள் இணைந்து இத்தகைய கல்வித்திட்டமொன்றை வகுக்கும் வாய்ப்பு பரிசீலனை செய்யப்படல் வேண்டும். மாகாண சபைகளின் தமிழமைச்சர்கள் இதில் ஒன்றுபட்டு செயற்படலாம்.
- சிரேஷ்ட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கல்வித் திட்டம் வரையப்படலாம்.
- முக்கியமாக, பாடசாலை மட்டத்தில் அதிபர், ஆசிரியர், பெற்றோர் உட்பட்ட குழுவினர், தமது பாடசாலையின் கல்வி மேம்பாடு தொடர்பாகத் திட்டமிடுவது பற்றி ஆராயப்படல் வேண்டும்.
- மலையக மாவட்டங்களில் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பல்வேறு மட்டங்களில் கல்வி வளர்ச்சிச் சிந்தனை பற்றிய கலந்துரையாடல்களை மாகாண அமைச்சர்கள் ஊக்குவிக்கலாம்.
- மாணவர்களின் கல்விச்சித்தியினடிப்படையில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான விசேட ஊக்குவிப்புத் திட்டங்களை மாகாண சபைகள் வகுக்கலாம். மாணவர்களுக்கான வெகுமதித் திட்டங்களும் பயன்தரும்.
- மலையக ஆசிரியர்களுக்கான கல்வியியல் பயிற்சியில், மலையக மாணவர்களின் விசேட நிலைமைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்து ஆண்டு தோறும் 500 இடங்களையும் பொருத்தமான, குறைந்தபட்சத் தகுதிகளையுடைய மலையக மாணவருக்கும் ஒதுக்கும் வாய்ப்புக்கள் பற்றி உயர்மட்ட தலைமைத்துவத்துடன் மலையகத் தலைவர்கள் கலந்துரையாட வேண்டும்.

இன்று நாட்டில் வளர்ச்சியடைந்து செல்லும் பாடசாலைக்கல்வி, புதிதாகத் தோன்றிவரும் கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் (தென்கிழக்கு, ரஜரட்டை), தனியார் உயர்கல்வி நிலையங்கள், நன்கு வேரூன்றி வரும் கணக்கியல், கம்யூட்டர் கற்கை நெறிகள், திறந்த பல்கலைக்கழகக் கல்வி (15000 மாணவர்), தேசிய கல்வி நிறுவனப் பயிற்சி நெறிகள் (B.Ed, M.Ed, முகாமைத்துவ திப்ளோமா), பட்ட மேற்படிப்புப் பயிற்சி நெறிகள் (விவசாயம், மருத்துவம், கம்ப்யூட்டர், வர்த்தக நிர்வாகம்) போன்றன, மேலும் இந்தியா, இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இன்று கல்வி பெறும் இலங்கை மாணவர்கள், இலங்கையின் பொருளாதார, வர்த்தக, கைத்தொழில், நிதி நிறுவனங்களின் நவீனமயப் போக்கு, இவையாவும் ஒன்றிணைந்து நாட்டின் பிறபிரிவினரை எட்டிப் பிடிக்க முடியாத தொலை தூரத்துக்கு இட்டுச் செல்ல உள்ளன. இன்றைய மலையக மக்களின் பின்தங்கிய நிலை மேலும் நீண்டு தொடருமாயின் அவர்கள் சொந்த நாட்டில் அகதி போன்று பின்தங்கி பூர்வகுடிகள் போன்று பொருளாதார, சமூக, கல்வி, கலாசாரத்தில் மேம்பாடின்றி பயிற்சியும் திறனும் தேவைப்படாத உடல் உழைப்புத் தொழில்களையே (Unskilled manual work) நாட வேண்டியிருக்கும். அவர்கள் அரசியல், பொருளாதார, கலாசார வலுவுடையோராக மாறக் கல்வியே வலுவான கருவி என்ற உணர்வுடன் அவர்களுடைய கல்விமேம்பாடு பற்றிய புதிய சிந்தனைகள், செயற்பாடுகள், திட்டங்கள் தேவை என்ற நோக்குடன் மலையகத் தலைமைப் பீடங்கள் செயற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தின் எதிர்கால கல்வி வாய்ப்புகள்

பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட மலையகத் தமிழ் சமூகம் தனக்கென ஒரு உயர்கல்வி அமைப்பொன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவ்வாறான ஒரு கோரிக்கையையாவது முன்வைக்கும் நிலையில் அச்சமூகம் இல்லை. கணிசமான மலையக மாணவர்கள் ஆண்டு தோறும் பல்கலைக்கழக அனுமதி பெற்றால் மட்டுமே அவ்வாறான கோரிக்கை எழுவது சாத்தியமாகும். இன்றைய வருடாந்த அனுமதி 9000 பேர் என்றால் அதில் 400–500 பேராவது மலையகத்திலிருந்து அனுமதி பெறும் நிலை இன்றில்லை.

புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் 2000 மாம் ஆண்டளவில் வருடாந்தம் 15000 மாணவர்களை அனுமதிக்கும் திட்டமொன்று உண்டு. இந்நிலையில் 2005 ஆம் ஆண்டளவில பல்கலைக்கழகங்களில் 50000 பேர் பயிலுவர். இவர்களில் 2000–2500 பேராவது மலையக மாணவராக இருப்பதும் அவர்கள் பல்வேறு போதனாபீடங்களில் பரந்த முறையில் பயிலவேண்டும் என்பதும் மலையகமக்களின் பல்வகைப்பட்ட வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். ஆனால் இவ்வெதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் தற்போது நிலைமைகள் சாதகமாக இல்லை.

மலையக அரசியல் தலைமைத்துவம் பின்வரும் நிலைமைகளைக் கருத்திற்கொண்ட முறையில் மலையகமக்களின் எதிர்காலக் கல்வி வாய்ப்புகள், அவை தொடர்பான கோரிக்கைகள் என்பவற்றைத் திட்டமிடல் வேண்டும்.

- க.பொ.த. உ/த பரீட்சைக்கு அமரும் 150,000 மாணவர்களில் 9,000 பேர் மட்டுமே இறுதியில் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். 35,000 பேர் வரை அனுமதிக்கான தகுதிகளைப் பெற்றும் கூட 26,000 பேருக்கு இடவசதியில்லை. இவ்வாறான கடுமையான போட்டி நிலவும் போது மலையக மாணவர்கள் பெரிய அளவில் 200–300 பேர் கூட அனுமதி பெறுவது கடினம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இன்றைய திறமை சித்தி, மாவட்டரீதியான அனுமதி முறை என்பன மலையக மாணவர்களுக்கு சாதமானதாக இல்லை.
- மாகாணங்கள் தோறும் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் அமைக்கப்பட்டு (தற்போது மூடப்பட்டு) வந்த போதிலும் மலையக மாணவர்கள் அவை வழங்கிய கல்விப்பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ளவில்லை.
- இன்று மலையகத்தில் உள்ள மாகாணக்கல்லூரிகள் இணைக்கப்பட்டு சப்ரகமுவா பல்கலைககழகம் அமைக்கப்பட்டுள்ளது. அக்கல்லூரிகளின் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மாணவர்களே இப்பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட உள்ளனர். இந்நிலையில் இந்நிறுவனம் வழங்கும் உயர்கல்வி வாய்ப்புகளை மலையக மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது.
- வடக்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் நடைமுறையில் தமிழர்களுக்குரிய நிறுவனங்களே! ஆனால் இன்று யாழ். பல்கலைக்கழகம் சரிவர இயங்கவில்லை. கிழக்குப் பல்கலைக்கழகம் பெரிய அளவில் வளர்ச்சி பெறவுமில்லை. மேலும் இன்றைய போர்ச் சூழ்நிலையில் மலையக மாணவர்கள் அனுமதி கிடைத்தாலும் அவ்வளவு தூரம் சென்று பயிலும் நிலையில் இல்லை.
- களனி, ஸ்ரீஜயவர்தனபுர, ருகுணு போன்ற பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி மூலப்பாடநெறிகளோ தமிழ் மாணவர்களோ இல்லை. இவற்றின் கல்வி வளங்களில் தமிழ் மாணவர்களுக்குப் பங்கில்லை.
- ஏற்கனவே கூறியதுபோல பேராதனை, கொழும்புப் பல்கலைக் கழகங்களில் கலை, வர்த்தகவியல், சட்டம் போன்ற துறைகளில் தமிழ் மொழிப்பயிற்சி நெறிகள் உண்டு. ஆயினும் அனுமதி பெறும் தமிழ் மாணவர்கள் குறைவு.
- பாடசாலை மட்டத்தில் இன்று எவ்வாறு பாடசாலைகள் இன, மொழிவாரி அடிப்படையில் பிரிந்து இயங்குகின்றனவோ அவ்வாறே பல்கலைக்கழகக் கல்வியும் வளர்ச்சிபெறும் போக்குத்தென்படுகின்றது. இந்நிலையில் மலையக மாணவர்களுக்கு தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள் உயர் கல்வியில் விசேட வாய்ப்புகளை வழங்கும் என்று நம்ப முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அவ்வாறே மலையக மாணவர்கள் இன்றைய நிலையில் வட, கிழக்குப் பல்கலைக்கழகங்களுக்குத் துணிந்து செல்லும் நிலையில் இல்லை.

❖ மலையக மாணவர் கல்வியில் ஆர்வம் கொண்டுள்ள தலைமைப்பீடங்கள் ஆராய்ந்தறிய வேண்டிய விடயங்கள்:-
  - க.பொ.த.உ/த பரீட்சைக்கு அமரும் மலையக மாணவர் தொகை
  - பல்க்லைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறுவோர் தொகை
  - இவர்களில் அனுமதி பெறுவோர் தொகை
  - அனுமதி பெற்றும் பல்கலைக்கழகம் சேராதோர் தொகை
  - அவ்வாறு சேராமல் விடுவதன் காரணங்கள்
  - அனுமதி பெற்றுப் பல்கலைக்கழகம் சேர்ந்து பின்னர் இடையில் விலகியோர்.

❖ ஆண்டுக்கு 400-500 மலையக மாணவர்களாவது பல்கலைக்கழக அனுமதி பெறும் வகையில் க.பொ.த.உ/த வகுப்புகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்படல் வேண்டும்.

❖ மலையக மக்கள் வாழும் மாவட்டங்கள் இன்று பின்தங்கிய மாவட்டங்கள் பட்டியலில் இல்லை. முன்னேறிய மாவட்டங்களுக்குள்ளே மலையகத்தவர் போன்ற பின்தங்கிய பிரிவினரும் வாழ்கின்றனர். பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை அவர்களுக்கு அனுகூலமானவை அல்ல என்பது உணர்த்தப்பட வேண்டும்.

❖ இன்றைய இலங்கைச் சிறுபான்மையினர் தமது உயர்கல்வி வளர்ச்சிக்குப் பெரும்பான்மையினரின் நிர்வாகத்தில் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, UGC) வருகின்ற தேசிய பல்கலைக்கழகங்களை நிறுவி தாமே நடாத்தி வருகின்றனர். மலையகத்தவர்கள் இம்முன்னுதாரணத்தை இன்றோ நாளையோ பின்பற்ற வேண்டிய நிலையே உருவாகி வருகிறது. சிறுபான்மையினர் நிலைமைகளையும் கோரிக்கைகளையும் நாட்டின் உயர் நிருவாகம் கருத்திற் கொண்டமையினாலேயே வடக்கிலும், கிழக்கிலும், தென்கிழக்கிலும் பல்கலைக் கழகங்களும் இணைப்புக்கல்லூரிகளும் ஆசிரியர் கல்லூரிகளும் தொழில் நுட்பக்கல்வி நிறுவனங்களும் தோன்ற முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 ஆம் நூற்றாண்டை நோக்கி மலையகக் கல்வி

உலகில் உள்ள 20 ஏழை நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. உலகில் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நாடுகளுள் ஒன்று இலங்கையென்றால் இலங்கைக்குள்ளே பிற இனத்தவருடன் ஒப்பிடும்போது, அவர்களை விட மிகவும் பின் தங்கியவர்களாகப் பெருந்தோட்ட மக்கள் காணப்படுகின்றனர். இலங்கை ஏழை நாடென்றாலும் கல்வித் தேர்ச்சி, சுகாதாரம் என்பவற்றில் பல சாதனைகளை எடுத்துச் சொல்லமுடியும். ஆசிய பிராந்தியத்தில் தென் கொரியா, மலேசியா, தாய்லாந்து, தைவான் முதலிய நாடுகள் தலையெடுக்கு முன்னர் 1960 களில் இலங்கை கல்வித்துறையில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இன்று தென்கொரியா முதலிய நாடுகள் கல்வித்துறையில் இலங்கையை மிஞ்சி எங்கோ சென்று விட்டன.

இலங்கை கல்வித்துறையில் இவ்வாறு பின் தங்க ஒரு முக்கிய காரணம் உண்டு. இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கான கொள்கைகளும் திட்டங்களும் ஒரு பின்தங்கிய நாடென்ற முறையில் எவ்வளவுதான் முற்போக்கானவையாக இருந்தபோதிலும் அவை நாட்டின் அனைத்து மக்களையும், குறிப்பாகப் பெருந்தோட்ட மக்களை அணைத்துச் செல்லவில்லை. சில மக்கட் பிரிவினர் கல்வியில் பின்தங்கி நிற்க, கல்வி வளர்ச்சித்திட்டங்கள் வேறு சில மக்கட் பிரிவினரை அடைவதால் தேசிய ரீதியாக கல்வி வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதற்கு இலங்கை ஒரு உதாரணமாகும். இலங்கையின் எழுத்தறிவு வீதம் 86 என்றால் ஏனைய 14 வீதமானோர் யார்? என்ற வினா எழுகின்றது. எழுத்தறிவற்ற இப்பதினான்கு வீதத்தினரில் கணிசமானவர்கள் பெருந்தோட்ட மக்களாகவே இருப்பர்.

இன்று 44 இலட்சம் பிள்ளைகள் பாடசாலை செல்கின்றனர். பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகளில் 20 வீதமானவர்கள் பாடசாலைகளிலிருந்த இடையில் விலகுகின்றனர். 1991 ஆம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி 5–19 வயதெல்லையினரில் 15 இலட்சம் பேர் பாடசாலையில் இல்லை. இப்பதினைந்து இலட்சம் பேரில் கணிசமானவர்கள் பெருந்தோட்டப் பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் ஆசிய பிராந்தியத்தில் ஆரம்பக்கல்வியில் இலங்கை பெருமுன்னேற்றங் கண்டுள்ளது. ஆரம்பக்கல்வி பயிலப் பாடசாலையில் சேருவோரில் 90 சதவீதமான பிள்ளைகள் ஆரம்பக்கல்வியை முடிக்கின்றனர். (இந்தியாவில் 25%, பாகிஸ்தானில் 42%, வங்காள தேசத்தில் 38%–1992). இலங்கையில் ஆரம்பக்கல்வியை முடிக்காமல் இடையில் விலகும் 10 சத வீதமான மாணவர்களுள் கணிசமானவர்கள் பெருந்தோட்டப் பிள்ளைகளாவர். 1987 ஆம் ஆண்டின் மதிப்பீடு ஒன்றின்படி நாட்டில் 10 இலட்சம் பிள்ளைகள் தொழிலாளர்களாகப் பணி புரிந்தனர். இவர்களிலும் கணிசமானவர்கள் பெருந்தோட்டப் பிள்ளைகளேயாவர். ஏனைய கிழக்காசிய நாடுகளை விட இலங்கை இன்று கல்வியில் பின்தங்கி நிற்க முக்கிய காரணம், பெருந்தோட்ட மக்களைக் கருத்திற் கொள்ளாத கல்விச் செயற்றிட்டங்களாகும்.

ஒப்பீட்டு ரீதியில் காலங்காலமாகக் கல்வித் தேர்ச்சியில் இனங்களுக் கிடையே இருந்து வரும் இடைவெளியை நிரப்ப உடனடியான நடவடிக்கைகள் இல்லாத நிலையில், எதிர்காலத்தில் இவ்விடைவெளி மேலும் விரிந்து செல்லும் அபாயம் ஒன்று உண்டு. இலங்கை பின்தங்கிய வளர்முக நாடென்றாலும் கூட கல்வித்தேர்ச்சியில் பெருந்தோட்ட மக்களைத் தவிர்த்து பல சாதனைகள் புரிந்துள்ளது. ஏனையமக்களைப் பொறுத்த வரையில் அடிப்படை ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி என்பன பெருவளர்ச்சி பெற்றுள்ளன. பல்கலைக்கழகக் கல்வி உட்பட ஏனைய பல்துறை சார்ந்த மூன்றாம் நிலைக்கல்வித் தேர்ச்சிகளைப் பெற உயர்தரமான இடைநிலைக்கல்வித் தேர்ச்சியும் தகுதிகளும் தேவை. இவற்றைப் பெற்றுள்ள பல்வேறு பிரிவினர் குறிப்பாக நகரப்புற மாணவர்கள் இன்று 21 ஆம் நூற்றாண்டின் புதிய சவால்களையும் நிலைமைகளையும் எதிர் கொள்ள தயாராகி வருகின்றார்கள்.

21 ஆம் நூற்றாண்டு அறிவுமைய நூற்றாண்டு அல்லது தகவல் மைய நூற்றாண்டாக அமையும் என்பது எதிர்காலவியல் நிபுணர் கருத்து. சகல அறிவுத்துறைகள், தொழிற்துறைகள் சார்ந்த தகவல் பெருக்கமும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சியும் 21ஆம் நூற்றாண்டில் மனிதனுக்கு அவசியமாகும். இவற்றில் தேர்ச்சி பெறுவோரே 21ஆம் நூற்றாண்டின் நிலைமைகளுடன் இசைந்து வாழத் தகுதியுள்ளவர்களாவர் என்பதே அறிஞர் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்து மேலை நாடுகளுக்குப் பொருத்தமானது என இலகுவாக ஒதுக்கி விடுவதில் பயனில்லை. இக்கருத்தின் பாதிப்பு எமது நாட்டில் முற்றாக இல்லை என்று வாதிட முடியாது. இன்றைய உயர் கல்வி நிலையங்களும், மாநகர்ப்புறங்களில் பல்கிப்பெருகிவரும் தகவல், தகவல் தொழில்நுட்பவியல் கல்வி நிலையங்களும் வழங்குகின்ற தகவலியல் கல்வியையும் பயிற்சியையும் விஷயம் தெரிந்த சில பிரிவினராவது பெற்று வருவதை மறுக்க முடியாது. பிரகடனம் எதுவும் செய்யாது இளைஞர்களைப் புதிய அறிவுமைய நூற்றாண்டுக்கு ஆயத்தம் செய்யும் போக்கு எமது நாட்டிலும் ஆரம்பித்து விட்டது என்று துணிந்து கூறலாம்.

இத்தகவலியல் கல்வியும் பயிற்சியும் ஒரு புறமிருக்க 21 ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ள எமது நாட்டு மாணவர்கள் பெறும் பாடசாலைக்கல்வித் தரம், பிற வளர்ச்சியடைந்த கீழைநாடுகளின் தராதரங்களையாவது எட்ட வேண்டும் என்ற உணர்வுடன் செயற்படும் காலம் நெருங்கியுள்ளது. கொழும்பு மாவட்ட மாணவர்களின் கல்வித்தேர்ச்சியை மொனராகலை மாவட்ட மாணவருடன் ஒப்பிட்டு நோக்குவதுடன் திருப்தியடையாது மலேசியா, தென்கொரியா நாட்டு மாணவருடன் ஒப்பிட்டு நோக்க வேண்டிய காலப்பகுதியில் நாம் வாழ்ந்து வருகிறோம். எமது மாணவர்களை தேசிய உள்நாட்டுத் தொழில் சந்தையின் வேலை வாய்ப்புகளையும் தேவைகளையும் நோக்கி கற்பித்த காலம் போய் சர்வதேச தொழிற் சந்தையின் தேவைகளைக் கருத்திற் கொள்ள வேண்டிய காலம் உருவாகி வருகின்றது. மேலும் கல்வித்துறையில் கடந்த காலங்களில் இனங்கண்ட குறைபாடுகளின் அடிப்படையில் சீர்திருத்தங்கள் செய்யாது எதிர்காலவியல் நிலைமைகளை உய்த்தறிந்து சீர்திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும் என்பது எதிர்காலவியல் அறிஞர்கள் கருத்து.

21ஆம் நூற்றாண்டையும் எதிர்க்காலவியல் சிந்தனைகளையும் கருத்திற்கொண்டு இன்றைய கல்வி முறையின் போக்குகள் அமையாவிடினும் அவற்றின் செல்வாக்கினை எமது கல்விச் செயற்பாடுகளிலும் புதிய கல்வி நிறுவனங்களிலும் அவற்றின் பயிற்சி நெறிகளிலும் காணமுடிகிறது. இப்போக்குகளுடன் பெருந்தோட்ட மக்கள் சமூகம் இணைந்து கொள்ள கல்வித்துறையில் அடிப்படை மாற்றங்களும் கொள்கைத் தீர்மானங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை. வழமையான எழுத்தறிவு நிலை, பாடசாலை இடைவிலகல் பிரச்சினை, ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினை என்பவற்றுடன் பெருந்தோட்ட மக்கள் 21 ஆம் நூற்றாண்டில் கௌரவத்துடன் நுழைய முடியாது. நாட்டில் ஒரு சாரார் புதிய அறிவுமைய நூற்றாண்டின் கௌரவமிக்க, கல்வித் தேர்ச்சியுள்ள அதிகார பலமுள்ள பிரசைகளாகவும் உருவாக, மற்றொரு சாரார் அறிவுமைய நூற்றாண்டுக்குரிய தகுதிகளின்றி மற்றவர்களுக்கு சிற்றூழியம் செய்பவராய் இருக்கும் நிலை, சமூக அமைப்பில் புதிய பதட்டங்களையும் நெருக்கடிகளையும் தோற்றுவிக்கும் என்பது எதிர்காலவியல் ஆய்வாளர் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கல்வி நிலையும் தேசியக் கல்வி முறையும்

மலையகப் பெருந்தோட்ட மாவட்டங்களில் இயங்கி வருகின்ற தமிழ் பாடசாலைகளில் முதன்மை நிலையில் வைத்து மதிப்பிடக்கூடிய பாடசாலைகளுள் ஒன்றாக ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி விளங்குகிறது.

ஹட்டனில் மட்டுமன்றி அந்நகரைச் சூழவுள்ள பெருந்தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை வாரி வழங்கிய பாடசாலை என்ற முறையில் இக்கல்லூரி பெருமை பெறுகிறது.

கற்றோரையும் உயர் அரசாங்க ஊழியர்கள் சிலரை மட்டுமன்றி பல இலக்கியவாதிகளை உருவாக்குவதிலும் இக்கல்லூரி முன் நிற்கிறது.

மலையக மக்களின் கல்வி நிலையை 1960களுடன் ஒப்பிடும்போது பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் குறிப்பிடவேண்டும். சீடா, ஜிடி.இசட் போன்ற வெளிநாட்டு நிறுவன உதவிகள் மக்கள் மத்தியில் கல்வி பற்றி ஏற்பட்ட விழிப்புணர்வு போன்ற காரணிகள் இம்முன்னேற்றத்தை ஊக்குவித்து வந்துள்ளன.

எவ்வாறாயினும் மலையக மக்களின் கல்வி வளர்ச்சி மிகப்பிந்தி 1980 களிலேயே தொடங்கியமையின் விளைவாக அம்மக்கள் இன்னும் கல்வித்துறையில் இலங்கையின் பிறபிரிவினர்களை விட பின்தங்கியே நிற்கின்றனர்.

கடந்த இரு தசாப்த காலங்களில் ஏற்கனவே முன்னேறியிருந்த இப்பிற பிரிவினர் இன்று கல்வி மேம்பாட்டில் பல படிகள் மேலே சென்று விட்டனர். அவர்கள் க.பொ.த.உ/நிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி என்பவற்றில் இன்று எய்தியுள்ள முன்னேற்றத்தில் 25 சதவீத முன்னேற்றம் கூட நாம் அடையவில்லை. எனவே இது பற்றிய ஆழமான சிந்தனையும் எதிர்காலத்துக்கான கல்வி ஆலோசனைகளும் எமக்குத் தேவை.

அண்மைக்காலம் வரை வளர்முக நாடுகள் எழுத்தறிவுக்கும் ஆரம்பக்கல்விக்கும் முக்கியத்துவம் தரல் வேண்டும், யாவரும் ஆரம்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பெறல் வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

இன்றைய காலகட்டத்தில் இலங்கையில் பெருந்தோட்ட மக்கள் தவிர்ந்த ஏனைய நகர்ப்புற, கிராமப்புற மக்கள் அனைவரும் இவ்விலக்குகளை எய்தி, அடுத்த கட்ட இலக்குகளுக்குத்தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டு விட்டனர்.

பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில் 12 பல்கலைக்கழகங்களும் அவற்றில் உள்ள 45 போதனாபீடங்களும் (Faculties) 280 பாடத்துறைகளும் (Departments of study) அப்பிரிவினர்களைச் சேர்ந்த 32,000 மாணவர்களுக்கு உயர்கல்வியை வழங்கி வருகின்றன.

இப்பல்கலைக்கழகங்களில் 3600 ஆசிரியர்களும் (தற்காலிக ஆசிரியர் உட்பட) 7000 கல்வி சாரா ஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். பாடத்துறை வகைப்படி பார்த்தால் சமூக விஞ்ஞானத்தில் 5900 மாணவர், வர்த்தகவியலில் 5500 மாணவர், விஞ்ஞான மாணவர் 5500, மருத்துவம் 4900 மாணவர், பொறியியல் 3030 மாணவர், விவசாயம் 1320 மாணவர்கள் வரை பயிலுகின்றனர்.

இவர்கள் அனைவருமே நகர்ப்புற, கிராமப்புற மாணவர்களாவர். இவ்வாறான மாணவர்கள் உயர்கல்வியில் சேர்ந்து பயிலுமளவுக்கு அவர் தம் கல்வி நிலை வளர்ச்சியடைந்துள்ளது.

மலையக நகர்ப்புற தமிழ் பாடசாலைகள், இந்த 32,000 பல்கலைக்கழக மாணவர் தொகுதியில் தமக்குரிய பங்கினைப் பெறவில்லை. பிற நகர்ப்புற கிராமப்புற பாடசாலைகளின் தராதரங்களை க.பொ.த உ/நி மட்டத்தில் எமது பாடசாலைகள் எய்தவில்லை. இதன் காரணமாக, 32.000 பல்கலைக்கழக மாணவரில் 200 பேராவது மலையக மாணவர்களாக இருப்பார்களோ என்பது சந்தேகம்.

பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மாற்றங்கள், தரப்படுத்தல், மாவட்டரீதியான அனுமதி போன்றன நாட்டின் பின்தங்கிய பிரிவினர்களுக்கு உதவுவன என்று கூறப்பட்ட போதிலும் மலையக மாணவர்கள் இவற்றால் நன்மை பெற முடியவில்லை.

நகர்ப்புற மக்கள் உயர்கல்வி, உயர் தொழில்நுட்பக்கல்வி, வெளிநாடுகளில் பல்கலைக்கழகக்கல்வி என்ற முறையில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர். ஆனால் மலையகத்தில் நாம் எழுத்தறிவு, ஆரம்பக்கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைநிலைக் கல்வி (க.பொ.த சா/நி, உ/நி) என்பவற்றையே சரியாக வலுப்படுத்த முடியாதநிலையில் இருக்கின்றோம். உதாரணமாக இன்று க.பொ.த உ/நி பரீட்சைக்கு அமரும் மாணவர்களில் (160,000 பேர்) மலையக மாணவர்கள் 1000 பேராவது தேறுவார்களா என்பது சந்தேகமே! ஏறத்தாழ 600 பேர் வரையே பரீட்சைக்கு அமர்வதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

எமது மதிப்பீட்டில் 8000 பேராவது உ/நி பரீட்சைக்கு அமர்ந்திருக்க வேண்டும். 1980களில் 80,000 மாணவர்களே மலையகத் தமிழ் பாடசாலைகளில் கல்வி கற்றனர். தற்போது இத்தொகை இரண்டு இலட்சமாக உயர்ந்துள்ளது. இது ஒரு முக்கிய முன்னேற்றம் ஆயினும் க.பொ.த உ/நி மட்டக்கல்வி பலவீனமாக உள்ளது. (மாணவர் தொகை 600–700). ஆரம்ப, கீழ் இடைநிலையில் (வகுப்புகள்1–11) ஏற்பட்ட முன்னேற்றம் உ/நி வகுப்புக்களில் ஏற்படவில்லை.

மேலும் தேசியரீதியாக கலை, வர்த்தகவியல் பட்டப்படிப்புகள் போதும் போதும் என்ற தெவிட்டல் நிலையை அடைந்து விட்ட நிலையில்தான் மலையகப் பாடசாலைகளில் உ/நி வகுப்புகளில் இவை கற்கப்படுகின்றது. உ/நி விஞ்ஞான பாடப்பயிற்சி நெறிகளில் பயிலும் ஒரு சில மலையக மாணவர்களும் தேசியரீதியாக பிற பிரிவினரின் மாணவர்களுடன் போட்டியிட்டு சித்தி எய்த முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இந்நிலையில் உ/நி வகுப்புகளில் புதிதாக கலை, வர்த்தகவியல், விஞ்ஞான பயிற்சி நெறிகளுக்கு மேலதிகமாகத் தொழில் நுட்பப் பாடநெறியொன்றும் தொடங்கப்படவுள்ளது. இதனைப் பயிலுவதற்குத் தகுதியான மாணவர்களின் தேவையொன்றும் உள்ளது. இவையாவும் மலையகக் கல்வி நிலையின் பலவீனமான அம்சங்களாகவுள்ளன.

தேசிய கல்வி முறையின் போக்கு மலையக மக்களின் நிலைமைகளைச் சட்டை செய்யாது நவீனமான பரிமாணங்களையும் பெற்று வருகின்றது.

கொள்கை வகுப்போர் 21 ஆம் நூற்றாண்டின் புதிய நவீன நிலைமைகளுக்கு இலங்கை மாணவர்களை ஆயத்தம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சிந்தித்து வருகின்றனர். அதற்கான அத்திவாரம் இதுவரை காலமும் ஏற்பட்டு வந்த கல்வி வளர்ச்சியினால் ஏற்கனவே இடப்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் 600 க்கும் அதிகமான 1ஏபி (1AB) பாடசாலைகள் உ/நி விஞ்ஞான பயிற்சி நெறியை நடத்தி வருகின்றன.

இவற்றுக்குச் சமமான பாடசாலைகள் மலையகத்தில் பத்துக்கூட இல்லை.

நாட்டின் பிறபிரிவு மாணவர்கள் 21 ஆம் நூற்றாண்டை நோக்கி வீறுநடை போட மலையக மாணவர்களும் சமுதாயமும் தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டிலேயே வாழ வேண்டிய நிலையில் உள்ளது.

ஹைலண்ட்ஸ் கல்லூரி போன்ற கல்வி நிலையங்கள் மலையக மக்களுக்கு முக்கிய பணியாற்ற முடியும்.

எனினும் தேசிய தராதரங்களை எட்டிப் பிடிக்க இக்கல்வி நிறுவனங்கள் விரிவான செயல்திட்டங்களை வகுக்க வேண்டியிருக்கும்.

மலையக மக்களின் பின் தங்கிய கல்வி நிலையைப் பொறுத்தவரையில் கல்வியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அக்கறையின்மை பற்றிப் பேசுவதில் பயனில்லை. காலம் காலமாக கல்வி வாய்ப்புகளை வழங்குவதில் தயக்கமும் பாரபட்சமும் காட்டப்பட்டதற்கு அப்பால், அவர்களுக்குக் கல்வித்துறையில் முன்னோடியாக விளங்கக்கூடியதாக நகர்ப்புற மத்திய வகுப்பினரும் வளர்ச்சி பெறவில்லை.

மலையகத்தின் கிழக்கில் பசறை முதல் மத்தியில் பதுளை முதல் கண்டி, மாத்தளை வரையிருந்த நகர்ப்புறப் பாடசாலைகளின் வசதிகளை இவ்வகுப்பினர் சரிவரப்பயன்படுத்திக் கொள்ளவில்லை.

1963 ஆம் ஆண்டளவில்தான் அங்கு உ/நி வகுப்புகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டன. க.பொ.த.சா/நி மட்டுமே பாடசாலைக் கல்வி என்ற அக்காலப் பாரம்பரியம் இன்று வரை நீடித்து வருகிறது.

எவ்வாறாயினும் வசதி படைத்த நகர்ப்புற வகுப்பினர் நகர்ப்புறப் பாடசாலை வசதிகளைப் பயன்படுத்தி முன்னேற்றங் காணவில்லை என்பதும் அவ்வசதிகளைப் பெருக்கவில்லை என்பதும் மலையக் கல்வி மேம்பாட்டுக்கான ஒரு கல்விப்பாரம்பரியத்தையும் பரம்பரையையும் உருவாக்க உதவ முன்வரவில்லை என்பதுமே எமது முறைப்பாடு.

*(29-6-98 ஞாயிறு அன்று ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஆற்றிய உரை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி ஆணைக்குழுக்களின் அணுகுமுறைகள்

இலங்கையின் கல்வி பற்றிய பொதுமக்கள் அபிப்பிராயத்தில் பல்வேறு காலப்பகுதிகளில் கண்டனங்கள் நிறைந்து காணப்பட்டன. ஆசிரியர், பெற்றோர், அரசியல் கட்சியினர், கைத்தொழில், வர்த்தகத்துறையினர். கல்வியாளர்கள் போன்றோர் கல்வி முறை பற்றி அதிருப்தி தெரிவித்தவிடத்து, அரசாங்கம் கல்விமான்களைக் கொண்ட ஆணைக் குழுக்களை நியமித்து கல்வி முறைகளின் குறைபாடுகளைக் கண்டறிந்து கல்வி முறையினை சீர்திருத்தி அமைப்பதற்கான ஆலோசனைகளைக் கூறுமாறு பணிப்பது வழமையாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திர இலங்கையிலும் இவ்வாறான கல்வி ஆணைக்குழுக்கள் பல நியமிக்கப்பட்டன. இவை வெளியிட்ட அறிக்கைகள் இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வறிக்கைகளில் காணப்பட்ட விதந்துரைகள் அனைத்தும் அப்படியே நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆயினும் காலத்துக்கு காலம் கல்வித்துறையில் சமகால நிலைமைகளுக்கேற்ற மாற்றங்கள் அறிமுகம் செய்யப்பட இவ்வாணைக்குழுக்கள் காரணமாயின. இவற்றைவிட அரசாங்கம் தான் நடைமுறைப்படுத்த விரும்பிய கல்விச்சீர்திருத்த ஆலோசனைகளை வெள்ளை அறிக்கையாக வெளியிட்டு பொதுமக்கள் கருத்தை அறியமுற்படுவதுமுண்டு. இவையும் கல்விமான்களால் தயாரிக்கப் படுவதுண்டு.

இவ்வாறு வெளிவந்த பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகள், அரசாங்கத்தின் கல்வி பற்றிய வெள்ளை அறிக்கைகள் சகலவற்றையும் ஆராய்ந்து நோக்குமிடத்து, பெருந்தோட்ட மக்களின் பின்தங்கிய கல்விநிலை, அதனை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்னும் விடயங்களில் எதுவித கவனமும் செலுத்தப்படவில்லை என்பது விளங்கும். எடுத்துக்காட்டாக 1943 இன் விசேட குழுவினரின் கல்வி அறிக்கை, 1961 இன் தேசிய கல்வி ஆணைக்குழுவினரின் அறிக்கை, 1964 இன் தேசிய கல்விமுறைக்கான பிரேரணைகள் என்பவற்றைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அறிக்கைகள் பெருந்தோட்டப்பிள்ளைகளின் கல்வி தொடர்பான எதிர்மறைக் கருத்துக்களையே கூறின. எடுத்துக்காட்டாக, அவர்களுடைய போதனாமொழியாக (1961–தேசிய கல்வி ஆணைக்குழு) சிங்களமொழி அமைதல் வேண்டும் என்றும் பலவாறு விதந்துரைக்கப்பட்டது. கடும் எதிர்ப்பின் காரணமாக இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இவர்களுடைய போதனாமொழியை மாற்றுவதில் செலுத்தப்பட்ட அக்கறை கல்வி வசதிகளை விரிவு செய்வதில் செலுத்தப்படவில்லை.

நாட்டின் கல்விச் சட்டங்களைப் பொறுத்த வரையில் 1900–1961 ஆம் ஆண்டுவரை கொண்டு வரப்பட்ட பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் அடிப்படை மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. தோட்டப் பாடசாலைகளை அமைக்கும் பொறுப்பு தொடர்ச்சியாகத் தோட்ட முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டமையே இந்த ஏற்பாடாகும். அதாவது. தேசிய கல்வி முறைக்கு அப்பால் பெருந்தோட்டப் பிள்ளைகளுக்கென்று இவ்வாறான தனிப்பட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்வி நிலைகளில் கணிசமான அளவில் மலையக மாணவர்கள் சேர்ந்து கொள்ளவில்லை. இதனால் இலவசக் கல்வி, தாய்மொழிக்கல்வி என்பனவற்றால் விளைந்த நன்மைகள் இம்மாணவர்களைச் சென்றடையவில்லை. இக்கல்விச் சீர்திருத்தங்கள் பல கல்விக் குழுக்களின் விதந்துரைகளின் விளைவாக நடைமுறைப்படுத்தப்பட்டவையாகும்.

1992இல் கல்வித்துறையில் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்கென நியமிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை பெருந்தோட்டப்பிள்ளைகள் கல்வி பயின்ற பாடசாலைகள் பற்றி விரிவான முறையில் ஆராயவில்லை. இப்பாடசாலைகளின் பின்தங்கிய நிலையை அறிக்கை ஏற்றுக் கொண்டபோதிலும், தனிப்பட்ட ஒரு இனக்குழுவினருக்கான முழுக்கல்வி ஏற்பாடுகளுமே பின்தங்கிய நிலையில் உள்ளது என்னும் நிலைமை முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பின்தங்கிய நிலைமை பற்றிய விபரமான தரவுகளை அறிக்கையில் தந்திருக்கலாம். இப்பாடசாலைகளில் ஏறத்தாழ 65 வீதமானவை வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் செயற்றிட்டங்களுக்குட்பட்டிருந்த போதிலும் அவற்றின் பின்தங்கிய அந்தஸ்தில் பெரிய அளவிலான மாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படவில்லை. இப்பாடசாலைகள் பற்றிய அறிக்கைக்குறிப்புகள் கூட பிரதான அறிக்கையுடன் ஒட்டாத நிலையில் (பக்கம் 59) பின் தங்கியனவாகவே காணப்படுகின்றன. இப்பக்கத்தில் பின்வரும் தகவல்கள் மட்டுமே உள்ளன.

- மொத்த பாடசாலைகள் 800
- ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை
- பௌதிக வசதிகள் குறைவு
- வெளிநாட்டு உதவி செயற்றிட்ட பாடசாலைகளின் பயிலும் மாணவர்களின் 5 ஆம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பிறபாடசாலைகளின் பெறுபேறுகளை விடச் சிறந்தவை.

இப்பாடசாலைகளின் பிரச்சினைகள், மலையக மக்களின் கல்விப் பிரச்சினைகள் என்பன சமாந்தரமானவை. நாட்டில் இவை போன்ற பிற பாடசாலைகளும் காணப்படுகின்றன. நாட்டிலுள்ள 10,000 பாடசாலைகளில் 20 வீதமானவை அல்லது 2000 பாடசாலைகள் இவ்வாறான சிறிய பின்தங்கிய பாடசாலைகள். இவை சிங்கள, முஸ்லிம், மலையக மக்களுக்குரியதாயினும், மலையகத்தில் காணப்படும் பெரும்பாலான பாடசாலைகள் (800) பின்தங்கியவை. ஏனையோருக்கு வசதி மிக்க பிறபாடசாலைகள் உண்டு. இப்பின்னணியிலேயே மலையக மக்களைப் பொறுத்தவரையில் எழுத்தறிவு, மாணவர் சேர்வுவீதம், இடைவிலகல் வீதம், பல்கலைக்கழக அனுமதி, பொதுப்பரீட்சைகளில் மாணவர் சித்தி போன்ற அம்சங்களும் அவை தொடர்பான குறிகாட்டிகளும் தேசிய சராசரியுடன் ஒப்பிடும் போது, பாதகமாக உள்ளதை விளங்கிக் கொள்ளலாம். இதன் காரணமாகவே தேசிய கல்வி ஆணைக்குழு, மலையக மக்களின் கல்வி நிலை, கல்வி வசதிகள் என்பவற்றில் மேலும் அக்கறை செலுத்தியிருக்கலாம் என வலியுறுத்திக் கூறவேண்டியுள்ளது.

அறிக்கையின் ஏழாவது அத்தியாயத்தில் கல்வித் துறையின் எத்தகைய அம்சங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய பலவற்றுள் இறுதியாக பெருந்தோட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளுக்கான விசேட ஏற்பாடுகள் என்ற துணைத் தலைப்பில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (பக்கம் 111).

ஆணைக்குழு நாட்டில் உள்ள சகல பின்தங்கிய பாடசாலைகளுக்கும் உதவி புரியும் வகையில் பொதுவான கொள்கைகள் வகுக்கப்படல் வேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்தியுள்ளது. சுருங்கக் கூறின் பெருந்தோட்டத்துறை சார்ந்த பாடசாலைகளின் ஒட்டுமொத்தமான பின்தங்கிய நிலையை, நாட்டில் முக்கிய பிரிவினரான இந்திய மரபுவழித் தமிழரின் கல்விநிலை பிற தேசிய இனங்களின் கல்வி நிலையைவிட பின்தங்கி இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ற முறையில் இனங்கண்டு அவர்களுக்கான விசேட கல்வி ஏற்பாடுகள் ஏதேனும் பற்றி ஆணைக்குழு பரிந்துரைகளை செய்யத் தவறிவிட்டது.

இப்பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்க்க ஆணைக்குழு கூறியுள்ள ஆலோசனை க.பொ.த (சா/த) தகுதியை உடைய ஆசிரியர் உதவியாளர்களை நியமிப்பதாகும். அத்துடன் பின்தங்கிய பாடசாலைகள் என்று வகைப்படுத்தப்பட வேண்டிய பாடசாலைகளின் அதிபர்கள் அதற்கான விண்ணப்பங்களையனுப்ப ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவ்விண்ணப்பங்கள் அரசாங்க வர்த்தமான அறிவித்தலுக்கமைய இருத்தல் வேண்டும். பாடசாலை மாணவர் தொகை, ஆசிரியர் விபரங்கள், பௌதிக வசதிகள், ஆசிரியர்–மாணவர் விகிதம் என்பவற்றைப் பரிசீலனை செய்து அப்பாடசாலைகள் பின்தங்கிய பாடசாலைகள் என வகைப்படுத்தப்படும். பெரிய பாடசாலைகளுக்குத் தேசிய பாடசாலை அந்தஸ்தைப் பெற அரும்பாடுபடும் இந்நாளில் வசதிகளற்ற பாடசாலைகள் பின் தங்கிய பாடசாலைகள் என்ற அந்தஸ்தைப் பெற்றபின் அப்பாடசாலைகளில் முன்னேற்றம் எவ்வழிகளில் ஏற்படலாம் என்பது பற்றிய ஆலோசனைகள் அறிக்கையில் கூறப்படவில்லை. இப்பாடசாலைகள் இந்த அந்தஸ்து சான்றிதழுடன் திருப்தியடைய வேண்டுமோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மாணவர்களின் பரீட்சை செயலாற்றம்

## பின்புலம்

1830ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் பெருந்தோட்டத் தொழிலாளர் இலங்கையில் குடியேறிய போதிலும், அவர்களின் கல்வி வளர்ச்சி தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே செய்யப்பட்டன. 1905ஆம் ஆண்டில் அவர்களின் கல்விப் பொறுப்பு பெருந்தோட்ட நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலை அண்மைக்காலம் வரை நீடித்தது. இதனால் பெருந்தோட்டப் பிள்ளைகளுக்கான பாடசாலை முறை தேசியக் கல்வி முறைமையுடன் இணைப்பற்ற முறையில் அதற்கு வெளியே செயற்பட நேர்ந்தது.

19ஆம் நூற்றாண்டில் பிற்கால தேசிய கல்வி முறையின் வளர்ச்சிக்கான அடித்தளம் இடப்பட்டது. எடுத்துக்காட்டாக:

- ❖ அரசாங்கமும் கிறித்தவ சமயக்குழுவினரும் கல்விக்குப் பொறுப்பேற்றிருந்த நிலைமை (Dual Control)
- ❖ உதவி பெறும் சமயக்குழுப் பாடசாலைகளுக்கு அரசாங்க உதவி நன்கொடை (Grant in aid) வழங்கும் முறை
- ❖ சுயமொழிக்கல்வி விரிவு பெற்றிருந்த நிலைமை
- ❖ 1868இல் பொதுப் போதனைத் திணைக்களம் ( பின்னர் "கல்வித் திணைக்களம்")அமைக்கப்பட்டு பாடசாலைமுறை அரசாங்க மேற்பார்வையில் கொண்டுவரப்பட்டமை.
- ❖ இந்துசமய எழுச்சியின் விளைவாக இந்துப் பாடசாலை ஒன்று உருவாகி விரிவு பெற்ற நிலைமை

இத்தகைய முக்கிய வளர்ச்சிகள் எவையும் மலையகப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் முக்கிய தாக்கம் எதனையும் ஏற்படுத்தவில்லை. நாட்டின் கல்வி முறையைத் திருத்தியமைக்கும் நோக்குடன் விதந்துரைகளை வழங்கவென நியமிக்கப்பட்ட பல குழுக்களும் ஆணைக்குழுக்களும் கூட, மலையக மக்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக 19ஆம் நூற்றாண்டில்

- 1830 இன் கோல்புறூக் குழுவின் விதந்துரைகள்
- 1867ஆம் ஆண்டின் மோர்கன் குழு விதந்துரைகள்

20ஆம் நூற்றாண்டில்

- 1943ஆம் ஆண்டின் விஷேட கல்வி ஆணைக்குழு
- 1960ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழு
- 1964ஆம் ஆண்டின் தேசிய கல்வி வெள்ளை அறிக்கை

இலவசக் கல்வியையும் ஆரம்ப நிலையில் தாய்மொழிக் கல்வியையும் ஆணைக்குழு விதந்துரைத்தது. இதனால் பெருந்தோட்டப் பிள்ளைகள் புதிய நன்மைகளைப் பெறவில்லை. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே மிக எளிமையான ஆரம்ப கல்வியைத் தாய்மொழியில் பெற்றுவந்தனர். பிற இரு அறிக்கைகளும் (1960, 1964) வலிந்து கூறிய ஒருவித விதந்துரை மலையகத்தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழி சிங்களமாக இருத்தல் வேண்டும் என்பதாகும். இவ்விதந்துரை புதிய நன்மை எதனையும் வழங்காததுடன், பாதகமானதாயும் மலையக மக்களின் மொழி, பண்பாட்டு தனித்துவத்தைப் பேணுவதற்கு எதிராகவும் காணப்பட்டது.

சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட தேசியரீதியாக கல்வி வளர்ச்சி, மலையக மக்களை உள்ளடக்கியதாய் இருக்கவில்லை. 1960 களில் ஆசிய பிராந்தியத்தில் கல்வி வளர்ச்சியில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தை இலங்கை பெற்றது. எழுத்தறிவு வளர்ச்சி, பாடசாலை மாணவர் சேர்வு வீதம், இடைவிலகல் வீதம், தேசிய ரீதியான கல்விமுறை, பல்வேறு வகைப்பட்ட சமூகவகுப்பினர் கல்விவாய்ப்புகளைப் பெற்றமை, உயர் இடைநிலைக்கல்வி (க.பொ.த. உ/நிலை) மற்றும் உயர்கல்வி நிலையில் தாய்மொழிக்கல்வி, ஆரம்ப, இடைநிலை, உயர்கல்வி வாய்ப்பு, கல்வி விரிவு, கல்வி முறைக்குக் கூடிய நிர்வாகம் பன்முகப்படுத்தப்படல், உயர்கல்வி நிலையில் மஹாப்பொல புலமைப்பரிசில், பாடசாலைகளில் இலவசநூல் விநியோகம் என்னும் அம்சங்களை உள்ளடக்கிய கல்விவளர்ச்சி, மலையக பிள்ளைகளுக்கு நன்மை தருவதாய் இருக்கவில்லை. இதன் காரணமாக கல்வி வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய புள்ளிவிபரங்கள் யாவும் மலையகப் பிள்ளைகள் பிற சமூகங்களைச் சேர்ந்தவர்களை விட கல்வியில் பின்தங்கியவர்களாக இருப்பதையே எடுத்துக்காட்டும்.

சுதந்திர காலப்பகுதியில் வழங்கப்பட்ட விரிவான கல்வி வாய்ப்புக்களைப் பயன்படுத்திப் பிற சமூகத்தவர் மத்தியில் ஏற்பட்ட சமூகநகர்வு (Social Mobility) மலையக மக்கள் மத்தியில் ஏற்படாமைக்கு அவர்களின் பின்தங்கிய கல்விநிலையே காரணமாகும். உயர்சமூக அந்தஸ்து, உயர் நிலை வேலைவாய்ப்பு என்பன நவீன சமுதாயத்தில் கல்வித்தகுதிகளைக் கொண்டு வழங்கப்படுவன. மருத்துவர், பொறியியலாளர், அரசாங்க உயர்நிர்வாகி, கல்வித்துறை உயர் அதிகாரி, வங்கி உயர்நிலை அதிகாரி, பல்கலைக்கழக விரிவுரையாளர் எனும் உயர்கல்வித் தகுதிகளைக் கோரும் பதவிகளில் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு சிலரே உள்ளனர்.

மலையக மக்களின் வரலாறு, சமூகவியல், இலக்கிய வளர்ச்சி, பொருளாதார நிலை, புவியியல் பரம்பல், அரசியல் எனும் பல்வேறு சமூக அறிவியல், மனிதப்பண்பியல் (Social Science and humanities) துறைகளில் முறையான ஆய்வுகளை நடத்தி, அவர்களின் மேம்பாட்டுக்கான கொள்கைகளைத் திட்டமிட உதவக்கூடிய ஆய்வறிஞர்கள் அவர்கள் மத்தியில் போதியளவு தோன்றவில்லை. காலங்காலமாகப் பின்தங்கிய நிலையில் இருந்துவரும் அவர்களுடைய கல்விநிலையின் நேரடி விளைவு இதுவேயாகும்.

## க.பொ.த. சா/நி பரீட்சையில் செயலாற்றம்

அண்மைக்கால க.பொ.த. சா/நி, கபொதஉ/நி சித்திகளையும் பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்வு எனும் குறிக்காட்டிகளையும் வைத்து நோக்குமிடத்து மலையக மாணவர்களின் பின்தங்கிய நிலை நன்கு விளங்கும்.

க.பொ.த சா/நி சித்திகளைப் பொறுத்தவரையில் 1990ம்ஆண்டின் பரீட்சைத் திணைக்கள தரவுகளின்படி இலங்கையில் உயர்தர சித்திபெற்ற 43 பாடசாலைகளில் மலையக தமிழ்ப் பாடசாலை எதுவும் அடங்கவில்லை. உயர்சித்தி பெற்ற பாடசாலைகளின் க.பொ.த. பாடசாலைச் சுட்டெண் 85–67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை அமைந்தன, பண்டாரவளை மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் பாடசாலைச்சுட்டெண் 23–43 வரை மட்டுமே அமைந்துள்ளது. இதில் வெலிமடை, அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயங்கள் முன்னணியில் வருகின்றன. கண்டி மாவட்டத்தில் இச்சுட்டெண் 31–47 வரையே அமைந்துள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 22 பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இச்சுட்டெண் 27–47 வரை அமைந்தன. இப்புள்ளிவிபரம் தேசிய ரீதியாக முன்னணியில் நிற்கும் பாடசாலைகளிலிருந்து மலையகத் தமிழ் பாடசாலைகள் எந்தளவிற்கு பின்தங்கி உள்ளன என்பதைக்காட்டும். இம்மூன்று மாவட்டங்களில் முன்னணியில் உள்ள பாடசாலைகளின் சுட்டெண்:

| | | |
|---|---|---|
| பண்டாரவளை | – | 65 |
| கண்டி | – | 66 |
| நுவரெலியா | – | 56 |

1992ம் ஆண்டின் க.பொ.த சா/நி சித்தி புள்ளிவிபரங்களின்படி இலங்கையில் 47 பாடசாலைகள் 86–70 வரையிலான உயர்தரமான பாடசாலைச் சுட்டெண்ணைப் பெற்று முன்னணி வகித்தன. இவற்றில் ஒரு மலையகத் தமிழ்ப்பாடசாலையும் அடங்கவில்லை. மலையக மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது மிகக்குறைந்த தொகையான மாணவர்களே க.பொ.த. உயர்நிலைப் பரீட்சைக்கு அமர்வதையும் குறிப்பிட வேண்டும்.

க.பொ.த. சா/நி தேர்வுகளில் தனிப்பட்ட பாடங்களில் மாணவர் சித்தி பற்றி சில நிலைமைகளை அவதானிக்க முடியும். குறிப்பாக சா/நிலையில் (1990) ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடச் சித்தி சுட்டெண்களை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாட்டின் உயர் சித்தி பாடசாலைகளின் சுட்டெண் | பண்டாரவளை மாவட்ட உயர்சுட்டெண் | பண்டாரவளை மாவட்ட தமிழ் பாடசாலைகளின் சுட்டெண் |
|---|---|---|
| ஆங்கிலம் 79–45 வரை | 65 | 34. 37, 30, 36,. 29, 34, 28 |
| கணிதம் 86–67வரை | 65 | 41, .44, 52, 44, 46, 38, |
| விஞ்ஞானம் 86–66 வரை | 72 | 37, 35, 42, 31, 36, 32, 30 |

பண்டாரவளை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளின் நிலை நாட்டின் சித்திபெற்ற பாடசாலைகளுடனும் பண்டாரவளை மாவட்டத்தில் உயர்சித்தி பெற்ற பாடசாலையுடனும் சற்றேனும் ஒப்பிடக்கூடியதாக இல்லை. ஏழு தமிழ் பாடசாலைகளும் ஆங்கிலம், விஞ்ஞா்னம் ஆகிய பாடங்களை விட கணிதத்தில் சிறப்புற பணியாற்றியுள்ளதை இவ்விபரங்கள் காட்டுகின்றன.

தமிழ்மொழி, சமூகக்கல்வி போன்ற பாடங்களிலும் மலையகத் தமிழ் பாடசாலைகளின் சித்தி குறைவாகவே உள்ளன. நாட்டின் உயர்சித்தி பாடசாலைகளின் தாய்மொழிப் பரீட்சைப் பெறுபேறு சுட்டெண் 61–84 வரை இருந்தவிடத்து பண்டாரவளை மாவட்ட தமிழ்ப்பாடசாலைகளின் சுட்டெண் இப்பாடத்தில் 43, 56, 41, 42, 48, 41, 40 (7 பாடசாலைகளில்) என்ற முறையில் அமைந்தன, உயர்சித்தி பெற்ற மாவட்டப் பாடசாலையின் சுட்டெண் 61 ஆகும். நுவரெலியா மாவட்டத்தின் முதல் 7 தமிழ் பாடசாலைகளுக்கான சுட்ணெ் 39, 44, 48, 39, 42, 33, 39 என்ற முறையிலேயே அமைந்துள்ளது. எனவே தமிழ்மொழிக் கல்வியிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

சமூகக் கல்வி பாடத்தில் நாட்டில் உயர் சித்தி பெற்ற பாடசாலைகளின் சுட்டெண் 67–87 வரையிலுமாகும். இப்பாடசாலைகள் பிற எல்லா மாவட்டங்களையும் விட சமூகக் கல்வியிலேயே உயர்தரமான சித்தியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பண்டாரவளை மாவட்டத்தில் உயர் சித்தியடைந்த பாடசாலையின் சமூகக்கல்விப் பெறுபேற்றுச் சுட்டெண் 68 ஆகும். ஆயினும் இம் மாவட்டத்தின்முக்கிய 7 தமிழ் பாடசாலைகளின் சுட்டெண் முறையே 47,39,38,27,39,28 மட்டுமேயாகும். நுவரெலியா மாவட்டத்தில் முதல் 10 சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகளின் சமூகக்கல்விப் பாடபெறுபேற்றுச் சுட்டெண் முறையே 39,57,43,51,40,38,35,38,38 40 ஆகும். எனவே சமூகக்கல்வி கற்பித்தலிலும் விஷேட கவனம் செலுத்தப்படவேண்டிய அவசியம் ஒன்று உள்ளது.

**இவ்வாண்டிற்குரிய பிற புள்ளிவிபரங்கள்**

**மலையக தமிழ் பாடசாலைகளின் க.பொ.த (சாத.)சுட்டெண் 1992**

| **மாவட்டம்** | **சுட்டெண்** |
|---|---|
| பண்டாரவளை | 55–32 வரை |
| கண்டி | 65–36 வரை |
| நுவரெலியா | 45–33 வரை |

கண்டி மாவட்டத்தில் நகர்புறம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் க.பொ.த. சா/நி வகுப்புகளை கொண்ட பாடசாலைகள் மிகக்குறைவாக உள்ளன.

## க.பொ.த உ/நி பரீட்சையில் செயலாற்றம்

க.பொ.த உ. நிலைப் பரீட்சை பெறுபேறுகளைப் பொறுத்தவரையில் 1992ஆம் ஆண்டிற்குரிய விபரங்களாவன. விஞ்ஞானத் துறையில் சிறந்த சித்திபெற்ற முதல் 36 பாடசாலைகளில் மலையகப் பாடசாலைகள் ஒன்றுகூட இல்லை. இது கலை, வர்த்தகவியல் துறைகளுக்கும் பொருந்தும்.

விஞ்ஞானத்துறையில் உயர்சுட்டெண் 66–56, கலை, வர்த்தகத் துறையில் உயர்சுட்டெண் 72–60.

பண்டாரவளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் ஒரு தமிழ்ப் பாடசாலை மட்டுமே விஞ்ஞானத்துறையில் 43 சுட்டெண்களைப் பெற்றுள்ளது. தமிழில் க.பொ.த. உ/நி விஞ்ஞானப் பாடநெறியைக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மலையகப் பாடசாலைகள் இரு மொழிப்பாடசாலைகளாகும். எனவே தனித்து தமிழ் மாணவர் தேர்ச்சியைப் பிரித்தறிய முடியாதுள்ளது.

க.பொ.த. உ/நி விஞ்ஞான பாடப் பரீட்சைக்கு மலையகத் தமிழ் பாடசாலைகள் பெரும்பாலும் 20க்குக் குறைவான மாணவர்களையே அனுப்பி வைத்துள்ளன. மாவட்ட ரீதியாக அப்பாடசாலைகள் பெற்ற சுட்டெண் பின்வருமாறு:

| மாவட்டம் | பாடசாலைகளின் தொகை | விஞ்ஞானப்பாடப் பிரிவுச் சுட்டெண். |
|---|---|---|
| பண்டாரவளை | 2 | 47,30 |
| கண்டி | | 38 |
| மாத்தளை | | 42 |
| நுவரெலியா | 2(−1) | 40,33,41 |

குறிப்பு: (−) எனும் பாடசாலை பரீட்சைக்கு அனுப்பிய மாணவர் தொகை 51.

கலை, வர்த்தகவியல் துறையில் நாட்டின் உயர் சித்திச் சுட்டெண் 72−60 வரை இருந்தவிடத்து அச்சுட்டெண் மலையக மாவட்டங்களை பொறுத்தவரையில் பின்வருமாறு அமைந்தது.

| மாவட்டம் | பாடசாலைகளின் தொகை | கலை, வர்த்தவியல் பாடப்பிரிவுச் சுட்டெண் |
|---|---|---|
| பண்டாரவளை | 5 | 54, 41, 52, 40, 30 |
| கண்டி | 4 | 41, 56, 50, 40 |
| மாத்தளை | 3 | 52, 48, 56 |
| நுவரெலியா | 5 | 52, 44, 54, 48 |

தேசிய சராசரியை எட்டிப்பிடிக்க மலையகப் பாடசாலைகள் மேலும் முயற்சி செய்ய வேண்டிய அவசியத்தை இவ்விபரங்கள் காட்டும்.

க.பொ.த. உயர்நிலைப் பாடங்களில் மலையக மாணவர்கள் பெற்ற தேர்ச்சி பற்றி சுருக்கமாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஞ்ஞான பாடங்கள்**

நாட்டில் உயர்சித்தி பெற்ற பாடசாலைகளின் உயர் சுட்டெண்

| பாடம் | சுட்டெண் |
|---|---|
| தூயகணிதம் | 67 |
| பிரயோககணிதம் | 66 |
| பௌதீகவியல் | 70 |
| இரசாயனவியல் | 68 |
| தாவரவியல் | 69 |
| விலங்கியல் | 70 |

**மலையகப் பாடசாலைகளின் சுட்டெண்**

| மாவட்டம் | பாடசாலைகளின் தொகை | சுட்டெண் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தூய | பிர | பௌதீ | இரசா | தாவர | விலங் |
| பண்டாரவளை | 1 | 70 | 75 | 41 | 48 | 40 | 46 |
| | 2 | 26 | 23 | 25 | 35 | 31 | 23 |
| கண்டி | 1 | 47 | 40 | 38 | 45 | 32 | 26 |
| நுவரெலியா | 1 | 37 | 41 | 31 | 28 | 28 | 30 |
| | 2 | – | – | 32 | 43 | 45 | 33 |
| | 3 | 43 | 42 | 42 | 45 | 37 | 30 |

ஏழு தமிழ் பாடசாலைகளின் பாடவகைப்படியான சுட்டெண் இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ளது. பண்டாரவளை மாவட்டப் பாடசாலை ஒன்று இரு கணிதப் பாடங்களிலும் நாட்டில் உயர்சித்தி பாடசாலைகளை விட அதிகமான (70–75) சுட்டெண்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டுக்குரியவர்கள். பிற எல்லாப் பாடசாலைகளும் சகல விஞ்ஞான பாடங்களிலும் பின்தங்கியுள்ள நிலமை அட்டவணையில் தெளிவாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலை, வணிகவியல் பாடங்கள்.**

நாட்டில் உயர் சித்தி பெற்ற பாடசாலைகளின் உயர் சுட்டெண்

| பாடம் | சுட்டெண் |
|---|---|
| புவியியல் | 90 |
| பொருளியல் | 74 |
| வர்த்தகவியல் | 73 |
| கணக்கியல் | 75 |

இந்நான்கு பாடங்களில் எட்டு மலையகத் தமிழ் பாடசாலைகள் பெற்ற சுட்டெண்ணை நோக்குவோம்.

| மாவட்டம் | பாடசாலை | உயர்நிலைப் பாடங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | புவி. | பொரு. | வர்த். | கண. |
| பண்டாரவளை | 1 | 57 | 58 | 60 | 56 |
| | 2 | 46 | 42 | 34 | 43 |
| கண்டி | 1 | 67 | 51 | 43 | 39 |
| மாத்தளை | 2 | 58 | 46 | 41 | 31 |
| நுவரெலியா | 1 | – | – | 48 | 45 |
| | 2 | 60 | 58 | 46 | 46 |
| | 3 | 52 | 48 | 37 | 38 |

உயர் சித்தி பெற்ற பாடசாலைகளின் தராதரங்களை எட்ட மலையகப் பாடசாலைகள் மேலும் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளதை இவ்வட்டவணை காட்டும். சுட்டெண் 60ஐ ஒரு எல்லையாகக் கொண்டால் கூட ஓரிரு சந்தர்ப்பங்களில் மட்டுமே உயர் சுட்டெண்ணைக் காண முடிகின்றது. மேற்கண்ட அட்டவணையில் பல பாடசாலைகள் பல பாடங்களில் பெற்ற சுட்டெண் 50க்கும் குறைவாக உள்ளது.

கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் மலையகத்தில் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்காகச் செய்யப்பட்ட பல்வேறு முயற்சிகள்– ஆசிரியர் நியமனம், ஆசிரியர் பயிற்சி, ஆரம்பப் பாடசாலைகளுக்கு வெளிநாட்டு உதவி போன்றன காரணமாகவே இந்த அளவு முன்னேற்றமாவது ஏற்பட்டது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக கல்வியைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 30,000 பல்கலைக்கழக மாணவர்களில் குறைந்தபட்சம் 1500 பேராவது மலையகத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். இவர்களுடைய தொகை ஒரு சில நூறாகவே (200?) இருக்கக் கூடும். பல்கலைக்கழக மானியங்களில் அறிக்கை இன வகைப்படியான தகவல்களைத் தந்தாலும் மலையக மாணவர் பற்றிய விபரங்களை இந்தியத் தமிழர் என்று பிரித்துத் தருவதில்லை. மலையகத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவோர் அங்கு செல்லவிரும்பாது உயர் கல்வியைக் கைவிடுகின்றனர். பெரும்பாலும் பெண்கள் இதில் அடங்குவர்.

க.பொ.த. சா/நி, உயர்நிலை தகுதிகளை உடையோர் ஆசிரியர் பதவிகளையும் பெறக்கூடியதாக இருப்பதும் உயர்கல்வி பெறுவதற்கான ஒரு ஊக்கத்தடை எனலாம்.

இந்நிலை நீடிக்கும் போது அடுத்த 5 ஆண்டு காலப்பகுதியில் மலையகத்தில் ஒரு சில நூறு பட்டதாரிகள் தோன்றுவதும் ஐயத்திற்குரியதாகும்.

இந்நாட்டில் உயர்நிலைப் பாடசாலைக் கல்வி விரிவடையாத நிலையில் ஒரு பல்கலைக்கழகமே போதுமானதாக இருந்தது. ஆனால் பாடசாலைக் கல்வி விரிவடையத் தொடங்கியதும் பல்கலைக்கழக கல்விக்கான தேவை அதிகரித்ததுடன், அவ்வப் பிராந்திய உயர்கல்வி வளர்ச்சியைக் கருதி யாழ்ப்பாணம், ருகுணை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன. இன்று தென் கிழக்கில் ஒன்றும் பிராந்திய ரீதியாக மேலும் இரு பல்கலைக்கழகங்களும் உருவாக்கப் படவுள்ளன. அவ்வப்பகுதிகளில் பாடசாலைக் கல்வி வளர்ச்சியடைந்து க.பொ.த. சா/நி, உ/நி, தகுதிகளை உடையோர் தொகை அதிகரிக்கும் போது அரசாங்கம் அதனை உடனடியாகவோ தாமதித்தோ ஏற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியுள்ளது. இலங்கையின் பிராந்தியங்களில் பல பல்கலைக்கழகங்கள் உருவாவதற்கு இந்நிலைமையே பின்னணியாக அமைந்தது. மலையகத் தமிழ் பாடசாலைகளில் க.பொ.த. சா/நி., உ/நி, மாணவர்தொகை, அவர்களுடைய பாடப்புள்ளிகள் அல்லது சித்தி நிலை என்பனவற்றை நோக்குமிடத்து இலங்கையின் பிற பிராந்திய மக்கள் முன்வைத்தது போன்று ஒரு பல்கலைக்கழக கோரிக்கையை மலைய மக்கள் முன்வைக்கப் போதுமான அளவுக்கு பாடசாலைக் கல்வி வளர்ச்சியுறாமை வருந்தத்தக்கதாகும். இன்று பிராந்திய ரீதியாகப் பல்கலைக்கழகங்கள் பெருகி வருகின்றன. அவற்றின் மாணவர் தொகையும் அதிகரித்து வருகிறது. திறந்த பல்கலைக்கழகமும் பல உயர் நிலை பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் உயர்தர தொழில் நுட்பக் கல்லூரிகளும் உள்ளன. இவற்றில் மலையக மாணவர்கள் சேர்வு வீதம் என்ற ஒன்றில்லை. மேற்கண்ட முறையில் உயர்கல்வி வளர்ச்சியுறும் போக்கினை நோக்குமிடத்து கி.பி. 2000ம் ஆண்டளவில் இலங்கையில் பல்வேறு பிராந்தியங்களும் சமூகத்தவர்களும் அடையும் உயர் கல்விச் சித்தி, சமூக, பொருளாதார அந்தஸ்திலிருந்து மிகவும் பிற்பட்ட நிலையிலிலேயே மலையக மக்கள் இருக்க வேண்டிவரும். மலையக மக்களுக்கும் பிற சமூகத்தவருக்கும் கல்வித் துறையில் இன்றுள்ள சமத்துவமின்மை எதிர்காலத்தில் பாரதூரமாக விரிவடையக்கூடும் என்பதையே இன்றைய கல்விமுறையின் போக்குகள் காட்டுகின்றன.

மேலும் சில அண்மைக்கால குறிக்காட்டிகள் மலையக பிள்ளைகளின் பின்தங்கிய நிலையைக் காட்டுகின்றன. 1990ஆம் ஆண்டில் பெருந் தோட்டப் பாடசாலைகளில் திரும்பக்கற்றல் வீதம் 15.5 ஆக இருந்தவிடத்து ஏனைய அரசாங்கப் பாடசாலைகளில் இவ்வீதம் 10.4 ஆக இருந்தது. குறிப்பாக பெரும் தோட்ட ஆரம்பப் பாடசாலை நிலையில் இது 16 வீதம்; அரசாங்கப் பாடசாலைகளில் 8 வீதம்.

அவ்வாறே பெரும் தோட்டப் பகுதியில் பாடசாலைக் கல்வியைத் தவிர்ப்போர் வீதம் கிராமப்புறத்தையும் (11வீதம்) நகர்புறத்தையும் (7வீதம்) விட மிக அதிகமானதாக, 35 வீதமாக உள்ளது.

அண்மைக்கால மதிப்பீடுகளின்படி (1992) பெரும் தோட்ட மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தறிவு வீதம் பிற துறைகளுடன் – கிராமப்புறம் 87 வீதம், நகர்புறம் 92 வீதம்– ஒப்பிடும் போது மிகக்குறைவாக, 66வீதமாக உள்ளது.

ஏற்கனவே பொதுத்தேர்வுகளில் மலையக மாணவர்களின் சித்தி பிற பிரிவினரைவிட மிகவும் பின்தங்கியிருப்பது எடுத்துக்காட்டப்பட்டது. மேற்கண்ட மூன்று குறிகாட்டிகளும் இதனோடு இணைந்து மலையக மக்களின் கல்வி நிலைக்கும் இடையில் உள்ள இடைவெளியினை நன்கு எடுத்துக் காட்டும்.

மலையக மக்களின் கல்வி மேம்பாட்டைப் பொறுத்தவரையில் குறைந்த பட்சம் பிற பிரிவு மக்கள் ஏற்கனவே அடைந்துள்ள தராதரங்களை எட்டிப் பிடிப்பதை நோக்கமாகக் கொண்ட கல்வித் திட்ட செயற்பாடொன்று அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

மலையக மக்களின் கல்வி நிலை பற்றிய தரவுகள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. இவற்றை தனியாட்கள் தொகுப்பது கடினமான பணி. இவர்களின் தற்போதைய கல்வி நிலை, அதன் குறைபாடுகள், குறைபாடுகளின் பின்னணி, காரணங்கள், எதிர்காலத்துக்கான நடவடிக்கைகள் என்பன பற்றி முறையாக ஆராய்வதற்கான ஒரு பணிக்குழு (Task Force) ஒன்றின் நியமனம் வலியுறுத்தப்படுகின்றது. கி.பி. 2000, 2010 ஆம் ஆண்டளவில் இலங்கையின் தேசியக் கல்வித் தராதரங்கள் எந்நிலைமையில் இருக்கும்? நாட்டின் பிற பிரிவினர் அடையவிருக்கும் கல்விமட்டங்கள் என்ன என்பதைப் பற்றி எதிர்வுகூறி, மலையக மக்கள் அத்தராதரங்களை அடையும் வகையில் இப்பணிக்குழு விதந்துரைகளைச் செய்ய வேண்டும். இந்நோக்குடன் இப்பணிக்குழு செயல்படல் வேண்டும்.

கல்வியில் பின்தங்கிய பிரிவினர் எனும் அங்கீகாரத்தை பெற்று அவர்களுக்கு வழமையாகச் செய்யப்படும் ஒதுக்கீடுகளை விட மேலதிகமான வள ஒதுக்கீட்டைப் பெறும் முயற்சி இவ்விடத்து முக்கியமானது. உள்நாட்டு நிதி ஒதுக்கீட்டுடன் வெளிநாட்டு உதவித் திட்டங்களை ஒன்றிணைத்து எதிர்கால முன்னேற்றத்திற்கான ஒரு வள அத்திவாரத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

மலையகக் கல்வி தொடர்பான முறையாக ஆவணப்படுத்தற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டினூடாக அரசாங்க உயர் மட்டத்தின் கவனத்தை மலையக மக்களின் கல்வி நிலையின் மீது ஈர்க்க வேண்டும்.

மாவட்ட ரீதியாக அல்லது பெரும் தோட்டங்களுக்கு அண்மையிலுள்ள க.பொ.த. சா/நி, உ/நி, வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளை இனங்கண்டு அவற்றின் ஆசிரிய வளம், பௌதீக வளம் என்பவற்றை வலுப்படுத்தும் முயற்சி தேவை.

இவ்வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக ஊக்குவிப்புகளை ஏற்பாடு செய்தல் முக்கியமானது. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்.

சிறந்த ஆசிரியர்களை இனங்கண்டு அவர்கள் பிற பாடசாலைகளில் மேலதிக ஊக்குவிப்புக்களுடன் பகுதி நேர ஆசிரியர்களாகச் சேவையாற்ற வழிவகை செய்தல் வேண்டும்.

சிறந்த ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புகள், வருவாய் மட்டுமன்றி விருதுகளாகவும் பாராட்டுக்களாகவும் அமையலாம்.

வகுப்பாசிரியர்களின் கற்பித்தல் தகுதிகளை மேம்படுத்துவதுடன் மேற்பார்வை மற்றும் ஆலோசனை சேவைகள் நடைபெறல் வேண்டும்.

ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு உதவும் மேலதிகத் துணைச் சாதனைங்களை வழங்குதல் பயனுடையது..

பெற்றோர் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய பயனுள்ள மனப்பாங்கு வளர்ச்சிக்கு ஆவன செய்தல் வேண்டும். இது மாணவர்கள் இடைவிலகலைத் தவிர்க்க உதவும்.

திரும்பக் கற்றல் வீதத்தை குறைக்க விஷேட கற்பித்தல் ஒழுங்குகளைச் செய்யும் போது தனியாள் முறை கற்பித்தலுக்குக் கூடிய முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும். பிள்ளைகளின் கல்வித்தேர்ச்சி தொடர்ச்சியாக மதிப்பிடப்பட்டு அவ்வப்போது குறைகளை இனங்கண்டு களைந்தால் திரும்பக் கற்றலைத் தவிர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சமூகமும் உயர்கல்வியும்

உலகளாவிய ரீதியல் பல்வேறு சமுதாயங்களும் தமது சமுக பொருளாதார அரசியல் மேம்பாட்டை அடைவதற்கு குறிப்பாக உயர்கல்வி ஒரு சக்தி மிக்க கருவியாக இருந்து வந்துள்ளது. சமூகவியலாளர் இவ்வாறான மேம்பாட்டினை, முன்னேற்றத்தினை சமூக நகர்வு என்றும் அவ்வாறான சமூக நகர்வுக்கு நவீன உலகில் கல்வியே முக்கிய காரணியாக விளங்கி வந்துள்ளது என்பதை தமது ஆய்வுகளில் இருந்து கண்டறிந்துள்ளனர். அத்துடன் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா 1950 களில் அடைந்த பொருளாதார அபிவிருத்திக்கு அந்தநாட்டின் கல்விவளர்ச்சி ஒரு முக்கிய காரணி என்று ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வளர்முக நாடுகளின் சமூகங்கள் கல்வித்துறையில் அதிக அக்கறை செலுத்தத் தொடங்கின.

## சுதந்திர இலங்கையில் சுரண்டப்பட்ட மக்கள்

பல இன சமுதாயங்கள் வாழுகின்ற நாடுகளில் பொதுவாக கல்வியில் பின்தங்கிய பல்வேறு பிரிவினர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ளார்கள். சேரிவாழ் மக்கள், கிராமப்புறமக்கள், குறைந்த வருமானப் பிரிவினர், பெண்கள், உளக்குறைபாடு உடையோர் ஆகியோருடன் இனச் சிறுபான்மையினரும் அப்பிரிவினருள் அடங்குவர். யுனெஸ்கோவின் அண்மைக்கால ஆய்வுகளின் படி ஆசிய பிராந்தியத்தில் கல்வியில் பின்தங்கிய பிரிவினருள் இனச்சிறுபான்மையினரும் முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆய்வுகளின் படி இலங்கையில் வாழுகின்ற தோட்டத் தொழிலாளர்கள் அல்லது இந்திய மரபுவழித் தமிழர் இலங்கையில் காலங்காலமாக கல்வித்துறையில் பின்தங்கியவர்களாக இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாய்வின்படி பெருந்தோட்டப் பகுதியில் ஆசிரியர் மாணவர் வீதம் 64:1 தேசிய விகிதம் 21:1; பிள்ளைகளில், 9 வீதமானவர்களே ஆரம்பக்கல்வியில் இருந்து இடை நிலைக்கல்விக்கு சென்றனர். பெருந்தோட்டப் பெண்களில் 52 சதவீதமானோரே எழுத்தறிவுடையோர். வாழ்க்கை நிலைமைகள் நிச்சயமற்றதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டதன் காரணமாக சுதந்திர இலங்கையில் பெருந்தோட்ட மக்களே மிகக் கூடியளவிற்கு சுரண்டப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினராக இருந்தனர் என்று இந்த ஆய்வுகள் எடுத்து கூறுகின்றன.

இன்றைய உயர்கல்வி, குறிப்பாக பல்கலைக்கழகக் கல்வி பாடசாலைக் கல்வியின் ஒரு தொடர்ச்சியாகும். பாடசாலைக் கல்வியின் பாட ஏற்பாடு, பயிற்சி முறைகள், பரீட்சை முறைகள் என்பன யாவும் மாணவர்களை ஒரு நிலையில் இருந்து அடுத்த நிலைக்கு வகுப்பேற்றம் செய்வதாகவே அமைகின்றது. எனது நோக்கில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுகின்ற 6500 (இனிமேல் 9000) பேரின் உயர்கல்விக்காக இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு தவறான கல்விப்பயிற்சி வழங்கப்படுகிறது. உயர்கல்வியில் அனுமதி பெறுவதற்கென்று மாணவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டாலும் அவர்கள் அனைவரும் அனுமதி பெறுவதில்லை. க.பொ.த.உயர்நிலை பரீட்சைக்கு அமரும் 150,000 பேரில் 6500 பேருக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. 25,000பேர் அனுமதி பெறத்தகுதியுள்ளவர்கள் என்று கூறப்பட்டு அவர்களுக்கு இடவசதி இல்லையென்று அனுமதி மறுக்கப்படுகிறது (1990). இன்று நிலவும் இவ்வாறான நிலை உயர்கல்வி அனுமதியில் நிலவும் கடுமையான போட்டியை சுட்டிக்காட்டுகின்றது.

## தோட்டப்பாடசாலை பிள்ளைகளுக்கு வாய்ப்பு இல்லை

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி ஐம்பது ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. பல்கலைக்கழகக் கல்வி தொடங்கப்பட்ட காலத்தில் மலையகத்தில் சிறந்த இடைநிலக்கல்வி நிலையங்கள் உருவாகவில்லை. வசதி குறைந்த தோட்டப்பாடசாலைகளில் பயின்ற பிள்ளைகளுக்கு இடைநிலைக் கல்வியில் அனுமதி பெற போதுமான அளவு வாய்ப்புகள் இல்லை. ஏறக்குறைய நான்கு தசாப்தங்களாக இந்நிலையிலேயே இப்பாடசாலைகள் இயங்கி வந்தன. இதே காலப்பகுதியில் இலங்கையில் பல இதர மாவட்டங்கள் பாடசாலைக் கல்வியில் நன்கு முன்னேறிக் கொண்டன. இப்பாடசாலைகள் உயர்கல்விக்கு ஆயத்தம் செய்யும் ஒரு பாரம்பரியத்தை வளர்த்துக் கொண்டு விட்டன. ஆனால் மலையகப் பாடசாலைகள் தொடர்ந்து பின்தங்கிய நிலையிலேயே இருந்தன. 1970ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுவரை நாட்டில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே பல்கலைக்கழகங்களில் பெரும்பான்மையினராக அனுமதி பெற்றனர். மலையக மாவட்டங்கள் பொதுவாக உயர் கல்வியில் பின்தங்கியே இருந்துவிட்டன. அங்கு சிறுபான்மையினராக வாழ்ந்த மலையக தமிழ்மக்கள் மிகக் கூடியளவிற்கு பாடசாலைக் கல்வியில் பின்தங்க நேர்ந்தமைக்கான காரணங்களில் உயர்கல்வியைத் தொடரக் கூடிய பாடசாலைகளின் எண்ணிக்கையும் ஒரு காரணமாக அமைந்திருந்தன. மத்திய மாகாணத்தில் மொத்தமாக 302 பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புகள் உள்ளன. இவற்றில் 85.8 வீதமானவை (258) சிங்களமொழிப் பாடசாலைகளாகவும், 14.2 வீதமானவை (44) தமிழ்மொழி மூலமான பாடசாலைகளாகவும் உள்ளன. ஏறக்குறைய 6 சதவீதமானவையே இம்மாகாணத்தில் இரண்டாவது பெரும்பான்மை மக்களாகவாழும் (15.3 வீதம்– 1.503,020 பேர்) தமிழர்களுக்கென உள்ளன. இவற்றிலிருந்து மத்திய மாகாணத்தில் வாழும் இந்திய மரபுவழித் தமிழர்களுக்கான உயர்கல்விக்கான வாய்ப்புகள் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலே உள்ளது என்பது தெளிவாகிறது. இத்தகைய சூழ்நிலையில் அவர்களால் பொதுவாக கல்வி வளர்ச்சிக்கு அவசியமான ஒரு கல்விப் பாரம்பரியத்தை வளர்த்துக் கொள்ள முடியாது போய்விட்டது. பல்கலைக்கழக அனுமதியில் கடுமையான போட்டி தோன்றியவிடத்து மலையக மாணவர்கள் இயல்பாகவே பின்தங்கி விட நேரிட்டது. இப்போட்டி நிலைமை நாடளாவிய ரீதியில் சகல இனத்தவரையும் பாதித்தபோதிலும் மலையக மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். சுருக்கமாகக் கூறின் காலங்காலமாக பாடசாலைக் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருந்தமையும் பல்கலைக்கழக வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படாமல் கூடியளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டமையும் மலையக மக்களின்– இளைஞர்களின் உயர்கல்வி வாய்ப்புகளை பெரிதும் பாதித்தது. இன்று மலையக மக்கள் உயர்கல்வியில் பின்தங்கி இருப்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

மேலும் இந்நாட்டில் உயர்கல்வி தொடர்பாக உருவாக்கப்பட்ட கொள்கைகள் மலையக மக்கள் போன்ற சிறுபான்மை பிரிவினருக்கு பாதகமாகவே அமைந்தன. உயர்கல்வியின் மீதான கட்டுப்பாடுகள் இதற்கு ஒரு உதாரணமாகும். அத்துடன் 1970 ஆம் ஆண்டின் பின்னர் அறிமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட அனுமதிக் கொள்கைகள் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக இடங்களை விரிவுபடுத்தாது அவற்றை மறுபங்கீடு செய்யும் ஒரு முயற்சியாகவே அமைந்தது. இவ்வனுமதிக் கொள்கை மாற்றங்கள் பல்வேறு உருவங்களில் இன்றும் தொடர்ந்து இருந்துவருகின்றன. பின்தங்கிய மாவட்டங்களுக்கு சில அனுமதி சலுகைகள் வழங்கப்பட்டன. மலையக மக்கள் கல்வியில் மாவட்டங்களின் முழுமையான கல்விநிலை கருத்தில் கொள்ளப்பட்டதேயன்றி மாவட்டங்களுக்குள்ளே காணப்படுகின்ற சமமின்மை, கல்வியில் பின்தங்கிய மக்களின் நிலைமை என்பன கருத்தில் கொள்ளப்படவில்லை. இந்நிலையில் மலையக மக்கள், அனுமதி கொள்கை மாற்றங்களால் நன்மை பெற முடியவில்லை.

## போட்டியிட்டு வெற்றி பெற முடியாத நிலை

மலையக மக்கள் மிக தாமதித்தே உயர் இடை நிலைக்கல்வியில் (ஆண்டு 12.13) பங்கு கொண்டனர். மலையகப் பகுதிகளில் 1960 களிலேயே உயர்நிலை வகுப்புகள் தொடங்கப்பட்டன. ஆரம்பத்தில் கலை வகுப்புகளும், அதன் பின்னர் தாமதித்து விஞ்ஞான வகுப்புகளும் தொடங்கப்பட்டன. உயர் இடைநிலை கல்வியில் பங்கு கொள்வோர் கல்வியில் முன்னேறிய பிரிவினருடன் போட்டியிட்டு வெற்றி பெற முடியாத நிலையை இலகுவில் விளங்கி கொள்ளலாம். குறிப்பாக விஞ்ஞான பயிற்சி நெறிகளில் (மருத்துவம், பொறியியல்) மலையகப் பாடசாலைகளில் வினைத்திறன் குறைந்து காணப்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

தென்னாசிய பிராந்தியத்தில் கடந்த 6 தசாப்தங்களாக இலங்கையில் பாடசாலைக் கல்வியை சனநாயகப் படுத்தும் பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக் காட்டாக, டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் மத்திய பாடசாலைகளும் இலவசக் கல்விமுறையும் அறிமுகம் செய்யப்பட்டன.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மத்திய மகா வித்தியாலயங்கள் அமைக்கப்பட்டன. பாடசாலைப் புலமைப்பரிசில்கள் ஏற்படுத்தப்பட்டன. உதவிபெறும்பாடசாலைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சீர்திருத்தங்கள் யாவும் இலங்கைவாழ் ஏணைய பிரிவினரின் கல்வி முன்னேற்றத்திற்கு பெரும் தொண்டாற்றின. ஆங்கில கல்விக்கு பதிலாக தாய்மொழிக்கல்வி உயர்கல்வி வரை அறிமுகம் செய்யப்பட்டமையும் ஒரு முக்கிய கல்வி சீர்திருத்தமாகும். ஆயினும் இவை யாவும் மலையக தமிழரின் கல்விவளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யவில்லை. எடுத்துக்காட்டாக மலையக பிள்ளைகள் தோட்டப் பாடசாலைகளில் ஏற்கனவே இலவசமாகவே கல்வி பெற்றுவந்துள்ளனர். அத்துடன் அவர்கள் தமது தாய்மொழியிலேயே ஆரம்பக்கல்வியையும் பெற்று வந்தனர். இதனால் இவ்விருதுறை சார்ந்த கல்விச் சீர்திருத்தங்கள் பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியோடு தொடர்பற்று இருந்தன. தேர்தல் தொகுதிகள் தோறும் அமைக்கப்பட்ட (டொனமூர் காலத்தில் 50 தேர்தல் தொகுதிகள்) மத்திய பாடசாலைகள் மலையக பிள்ளைகளுக்கு இடை நிலைக்கல்வியை வழங்கவில்லை.

### சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் ஒரே நிலை

19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கிறிஸ்தவ, ஆங்கில பாடசாலைகளுக்கு எதிரான உள்ளூர் சமய இயக்கங்கள் ஆங்கில பாடசாலைகளை நிறுவின. இவை, வடபகுதியிலும் தென்பகுதியிலும், பௌத்த இந்து பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியிலான இடைநிலைக் கல்வி வாய்ப்புகளை வழங்கின. வடபகுதியில் ஆறுமுகநாவலரும் தென்னிலங்கைகயில் பௌத்த பிரமஞான இயக்கமும் குறிப்பாக, அநாகரீக தர்மபாலாவும் இக்கல்விப்பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். ஆயினும், மலையகத்தில் ஆங்கில இடைநிலைப் பாடசாலைகள் அமைக்கும் அளவுக்கு இயக்கங்கள் தோன்றவில்லை.

டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறையில் இருந்த காலத்திலும் சுதந்திரத்தின் பின்னரும் இலங்கை கல்விமுறையின் குறைபாடுகளை ஆராய பல அரசாங்க குழுக்களும் ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட்டன. இவையாவும் பல்வேறு நுணுக்கமான ஆய்வுகளையும் விதந்துரைகளையும் தெரிவித்தன. ஆயினும் மலையக தமிழ் மக்களின் பின்தங்கிய கல்விநிலையை பொறுத்தவரையில் இந்த ஆணைக்குழுக்கள் திட்டவட்டமாக எதுவித கருத்துரையையோ, அல்லது விதந்துரைகளையோ செய்யவில்லை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகும். எனது நோக்கில் 1901ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டறிக்கையில் தோட்டத் தொழிலாளர்களின் பினதங்கிய கல்வி நிலை பற்றி திட்டவட்டமாக எடுத்துக் கூறப்பட்டது. அதன் பின்னர் அண்மைக்கால இளைஞர் அமைதியின்மை பற்றிய சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் சில உடன்பாடான கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. ஆயினும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையின் கல்வி முறை பற்றி வெளியிடப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகள், அரசாங்க வெள்ளை அறிக்கைகள், என்பன வெளியிட்ட பெருந்தோட்ட மக்களின் கல்வி பற்றிய கருத்துகள் பெருமளவிற்கு எதிர் மறையாகவே அமைந்தன. எடுத்துக்காட்டாக, மலையக தமிழ் பிள்ளைகளின் கல்வி மொழி சிங்களமாக அமைதல் வேண்டுமென்றும் அல்லது அரசகரும மொழியாக அமைதல் வேண்டுமென்றும் (தேசிய கல்வி முறைக்கான அரசாங்க ஆலோசனைகள் 1964) விதந்துரைகள் வெளியிடப்பட்டன. இவ்வறிக்கைகள் மலையக தமிழ் மாணவர்களின் போதனா மொழியை மாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனவேயன்றி அவர்களுடைய கல்வி வசதிகளை பொறுத்தவரையில் மலையக மக்கள் சுதந்திரத்தின் முன்னரும் பின்னரும் ஒரேவகையான முறையிலேயே கருத்தில் கொள்ளப்பட்டனர். பிரித்தானிய குடியேற்ற ஆட்சியாளர் எவ்வாறான கொள்கையை கடைபிடித்தனரோ அவ்வாறான கொள்கையே தொடர்ந்து பின்பற்றப்பட்டது. சுதந்திரம் அடைந்தமையால் நாட்டின் பிறமக்கட் பிரிவினர் அடைந்த உடனடியான நன்மைகளும் வாய்ப்புகளும் மலையக மக்களுக்கு கிடைக்கவில்லை.

### பெரும்பான்மையினருக்கே பெருமளவிற்கு உயர் கல்வி வாய்ப்பு

பல்கலைக்கழக கல்வியைப் பொறுத்தவரையில் இன்று அனைத்து பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்களாக கருதப்படுகின்றன. ஆயினும் நடைமுறையில் தென்னிலங்கை, வட இலங்கை, கிழக்கிலங்கை ஆகிய பகுதிகளில் இயங்குகின்ற பல்கலைக்கழகங்களில் ஒரு பிராந்திய தன்மையை காணமுடிகின்றது. அத்துடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களனி ஆகிய பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி மூலம் பயிற்சி நெறிகள் இல்லை. இவ்வகையில் நோக்குமிடத்து இந்திய மரபு வழித்தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியர் போன்ற முக்கிய சிறுபான்மை பிரிவினருக்கு என்று பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்படவில்லை. வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய சகல பல்கலைக்கழகங்களும் பெரும்பான்மையினருக்கே பெருமளவுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன. மத்திய மலைநாட்டிலே மலையக தமிழர்கள் மத்தியில் பேராதனை பல்கலைக்கழகம் அமைந்திருந்த போதிலும் அவர்களுக்கு அங்கு விசேடமான உயர்கல்வி வாய்ப்புகள் இல்லை. இன்றுள்ள பல்வேறு நிலைமைகளின் காரணமாக மலையக மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகம், கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் என்பவற்றிற்கு அனுமதி பெற்றாலும் சென்று பயிலும் நிலை இல்லை. அனுமதி பெறும் ஒரு சிலரும் தமது உயர்கல்வியை கைவிடும் நிலையே காணப்படுகிறது. அத்துடன் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவோரும் கூட பொருளாதார நிலைமை காரணமாக உயர்கல்வியை இடை நிறுத்துகின்றனர். மேலும் இன்று க.பொ.த சாதாரண நிலை, உயர்நிலைத் தகுதிகள் பெற்றோருக்கு ஆசிரியர் பதவி வாய்ப்புகள் வழங்கப்படுவதன் காரணமாக அவர்கள் உயர்கல்வியில் ஊக்கமிழக்க நேரிடுகிறது.

விஞ்ஞானத்துறை சார்ந்த பயிற்சி நெறிகளில் சேர்ந்து பயில (மருத்துவம், பொறியியல்) மாணவர்கள் போதிய தகுதிகளை பெறுவதில்லை. சேர்ந்து பயிலுமிடத்து அப்பயிற்சி நெறிகளில் ஆசிரியர் பற்றாக்குறை உண்டு, அத்துடன் அப்பயிற்சி நெறிகளைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக அனுமதியை பெறுவதில் போட்டி மிகத் தீவிரமாக காணப்படுகின்றது. இந்நிலையில் மலையக மாணவர்கள் பெருமளவிற்கு வர்த்தகவியல் துறையில் நாட்டம் கொள்வதாக தெரிகின்றது. ஆயினும் இறுதியில் போட்டி காரணமாக அத்துறையிலும் அனுமதி பெற முடியாது போகின்றது.

இன்று வேலை வாய்ப்பு, கல்வி வாய்ப்பு போன்ற துறைகளில் இனவிகிதாசாரம் வலியுறுத்தப்படுகின்றது. இன்று பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களின் மொத்த தொகை 30.000 ஆகும் (இதில் தாமதமாக அனுமதிக்கப்பட்டோரும் அடங்குவர்). இன விகிதாசாரப்படி மொத்த மாணவருக்கு 1500 பேராவது இந்திய மரபுவழித்தமிழராக இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆயினும் எமது கணிப்பில் 200 மலையக மாணவர்களாவது பயிலுகின்றார்களோ என்பது ஐயத்திற்குரியது. தகவல்களின்படி தொகை இதைவிடக் குறைவாக இருக்கக் கூடும். நுணுகிநோக்குமிடத்து, போதனாபீட வகைப்படியான புள்ளிவிபரங்களின்படி மருத்துவம், பொறியியல் விஞ்ஞானத் துறைகளில் ஓரிரு மாணவர்களே சேர்ந்து பயிலுவதாக கொள்ளலாம்.

**பல்கலைக்கழகம் தகவல் வெளியிடுவதில்லை.**

மேலும், இந்திய மரபுவழித் தமிழர்கள் ஒரு தேசிய இனமாக கருதப்பட்டு அவர்களுக்கென்று வேலைவாய்ப்புகளில் ஒரு வீதாசாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இன்றைய பல்கலைக்கழகங்களில் மொத்தமாகவும் பயிற்சிநெறி வகைப்படியும் எத்தனை இந்திய மரபுவழித்தமிழ் மாணவர்கள் பயிலுகின்றனர் என்பதை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிடுவதில்லை. மொத்தமாக எத்தனை தமிழ்மாணவர்கள் உள்ளனர் என்ற விபரங்களே தரப்படுகின்றன. இனவிகிதாசாரத்தில் இந்திய மரபுத்தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை மிக,மிக குறைவாக இருக்கும் என்பதால் அவ்வாறு தனியாக விபரங்கள் தரப்படுவதில்லைப் போலும்.

இன்று இயங்குகின்ற பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கு பலநூறு கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்தொகை முதலீட்டிற்கு கடந்த ஐம்பது ஆண்டுகாலப் பகுதியில் மலையக தமிழ்மக்களின் உழைப்பால் முன்னேறிய பெருந்தோட்டத் தொழில்துறை பெரும் பங்காற்றியுள்ளது. ஆயினும் மலையக தமிழர்கள் உயர்க்கல்விக்கான இம்மாபெரும் முதலீட்டிலிருந்து குறிப்பான நன்மைகளை பெற்றதாக கூறுவதற்கில்லை.

இன்னுமொரு நோக்கில் பார்க்குமிடத்து, இன்று மலையகத்து நகரங்களில் வளர்ச்சிபெற்றுள்ள முக்கியபாடசாலைகளில் காணப்படுகின்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் மலையகப் பிள்ளைகள் எந்தளவிற்கு பயன்படுத்துகின்றனர் என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.. 1977 ஆம் ஆண்டின் பின்னர் சில குறிப்பிட்ட வளர்ச்சிகள் ஏற்பட்டன. சுவீடன், ஜேர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளின் உதவிகள் கிடைத்துள்ளன. தோட்டப் பாடசாலைகளை படிப்படியாக அரசாங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றுள்ளது. ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் வகையில் மலையக இளைஞர்களுக்கு ஆசிரியர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மலையக பாடசாலைகளின் மேற்பார்வைக்கென மலையகத்தைச் சார்ந்தவர்கள் மேலதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் மலையக இளைஞர்கள் இவ்வாய்ப்புகளை பயன்படுத்தி புதியதொரு உந்துசக்தியுடன் உயர்க்கல்வியில் பிற மக்கட்பிரிவினர் வளர்த்துக் கொண்ட கல்வி பாரம்பரியத்திற்கு இணையான ஒரு பாரம்பரியத்தை வளர்க்க வேண்டிய ஒரு அவசியமும் உள்ளது.

இன்று மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட ஆசிரியர்கள் மலையக மெங்கும் பரந்தளவில் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பாடசாலை அதிபர்களாகவும் மேலதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் ஒரு முக்கிய கல்விப்பணி ஒன்று உண்டு. இவர்கள் அனைவரும் தமது கல்வித் தகைமைகளை மேம்படுத்துவதற்கான பல வாய்ப்புகள் இன்று இருக்கின்றன. பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம் போன்ற பல உயர்கல்வி நிலையங்கள் நடாத்தும் வெளிவாரி பயிற்சி நெறிகளும் தொலைக்கல்வி பயிற்சி நெறிகளும் மலையக ஆசிரியர்களுக்கு பல கல்வி வாய்ப்புகளுக்கு பேருதவி வழங்கும் வகையில் ஆர்வம் கொண்ட இளம் அறிஞர்கள் மலையக நகர்ப்புறங்களில் பல போதனாபீடங்களை ஏற்படுத்தி கல்விப் பணியாற்றுகின்றனர். வெளிவாரி மாணவர்கள், மலையக ஆசிரியர்கள் இவ்வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி தமது சுயமுயற்சியில் பல்கலைக்கழகப் பட்டங்களை பெற்று தமது கல்வி வாழ்க்கையில் வெற்றிபெரும் நிலைமைகளை இன்று நாம் காண்கின்றோம்.

மலையக தமிழர்களுக்கென்று ஒரு வரலாறு உண்டு. அவர்களுக்கென்று ஒரு புவியியல், பிரதேசமும், அதனை சார்ந்த மூலவளங்களும் உண்டு. அத்துடன் அவர்களுக்கென்று சமூகவியல். பண்பாட்டு, பொருளியல், கல்விசார் நிலைமைகளும் உண்டு. இவைபற்றிய ஆய்வுகள், சிந்தனைகள் என்பன மலையகத் தமிழரின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது. மேலும் மலையக தமிழருக்கென்று கல்வி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், தொழிற்சங்கங்கள் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு அமைப்புகள் உண்டு. ஆயினும் மேற்கூறிய ஆய்வுகளை கொண்டு நடத்தவும் சிந்தனைகளை வெளியிடவும் இவ்வமைப்புகளுக்கு தலைமை தாங்கவும் தேவையான அறிஞர் பற்றாக்குறை ஒன்று உண்டு. இதற்கு மலையக மக்கள் உயர்கல்வித்துறையில் பின்தங்கி நிற்பது முக்கிய காரணமாகும். மேற்கூறிய பல்வேறு துறைகளிலும் கற்றுத்தேறிய மலையக அறிஞர்கள் பலர் உருவாகியிருந்தால் இன்று அவர்களுடைய பல்வேறு நிலைமைகளில் பல முன்னேற்றங்களைக் கண்டிருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக கல்வியில் பின்தங்கியிருக்கும் மலையக சமூகம்

குடியேற்ற ஆட்சிக்காலத்தில், குறிப்பாக 1900–1948 வரையுள்ள காலப்பகுதியை எடுத்துக்கொண்டால், ஆங்கில மொழி மூலமான இடைநிலைக் கல்வியினூடாக அரசாங்கத் துறையில் தொழில்பெற முடிந்தது. இக்காலப்பகுதியில் மலையக மாணவர்கள் தாய்மொழியில் சரியான ஆரம்பக் கல்வியைக் கூடப் பெறும் நிலை இருக்கவில்லை. தோட்ட முகாமையாளர்கள் அரைமனதுடன் அமைத்த தோட்டப் பாடசாலைகள் பெயரளவிலான ஆரம்பப் பாடசாலைகளாக விளங்கின. இந்நிலையில் மலையகத்தவர்கள் அரசாங்கத் தொழில்களான இலிகிதர் சேவை போன்றவற்றில் சேர்ந்து ஒரு அரசாங்கத்தொழில் பாரம்பரியத்தை அவர்கள் உருவாக்க முடியவில்லை.

1960களில் ஓரளவுக்கு நகர்ப்புறபாடசாலைககளில் தமிழ்மொழியில் இடைநிலைக் கல்வித்தராதரங்களைப் பெறக்கூடியதாக இருந்த போதிலும் இக்காலப்பகுதியில் அரசாங்க சேவைப் பதவிகளைப் பெற முடியவில்லை. 1960களில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஒரு சில மலையகப் பட்டதாரிகள் கூட வேலைவாய்ப்பினைப் பெற முடியவில்லை.

இன்று பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புப் பிரச்சினை இருப்பது உண்மையாயினும் கடந்த ஐம்பது ஆண்டுகாலப் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சியினாலும் அதற்குச் செலவிடப்பட்ட பெருமளவு மூலதனத்தினாலும் ஏனைய சமூகத்தவர் அடைந்த நன்மைகளை மலையக சமூகத்தவர் பெறவில்லை. முஸ்லிம்கள் உயர்கல்வியில் காலங்காலமாக மலையகத்தவர் போன்று பின்தங்கியிருந்து அண்மைக்காலங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர்.

கடந்த மூன்றாண்டு காலங்களில் (19991, 1992, 1993) உயர் கல்விக்கென செலவிடப்பட்ட பணம் முறையே 147 கோடி, 235 கோடி, 258 கோடி ஆகும். 1981 தொடக்கம் 1991 வரையுள்ள பத்து ஆண்டுகாலப்பகுதியில் உயர்கல்விக்கு 985 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதனால் மலையக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் எத்தனை மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் பட்டதாரிகளையும் உருவாக்கிக்கொள்ள முடிந்தது? உயர்கல்விக்கான தேசிய செலவினத்தில் மலையக மக்களுக்குக் கிடைத்த பங்கு என்ன? பல்கலைக்கழக அனுமதியில் இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்ட பல்வேறு அனுமதிக் கொள்ளைகள் (உதாரணமாக தரப்படுத்தல், மாவட்ட அனுமதி, பின்தங்கிய மாவட்ட அனுமதி போன்றன) மலையக மக்களுக்கு உயர்கல்வியில் வழங்கிய வாய்ப்புகள் என்ன? இப்பிரிவு மக்களின் பின்தங்கிய உயர்கல்வி நிலை பற்றி சிந்திக்கும் போது இவ்வினாக்கள் எழுகின்றன.

ஒரு பரந்த கருத்தில் உயர்கல்வி அமைப்பில் இன்று இரு வகையான அம்சங்களைக் காண முடியும். ஒரு புறம் தேசிய ரீதியிலான உயர் கல்வி நிறுவனங்கள் பல்வேறு பிராந்திய மாணவர்களைக் கொண்டு விளங்குகின்றன. பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில் சகல பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்கள் என்பதே தேசிய கொள்கையாயினும் பேராதனை, கொழும்புப் பல்கலைக்கழகங்கள் மட்டுமே இத்தேசிய தன்மையைக் கொண்டு விளங்குகின்றன. இதற்கு இவை தோற்றமுற்ற பின்னணி முக்கிய காரணமாகும்.

1910–1940வரை இலங்கையில் ஒரு தேசிய பல்கலைக்கழகம் அமைக்கப்படல் வேண்டுமென்று பல்வேறு இனமக்களைச் சேர்ந்த அறிஞர்களும் தலைவர்களும் நடத்திய போராட்டத்தின் விளைவாக உருவாகிய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வழித்தோன்றல்கள் என்பதால் கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்கள் இன்றும் ஓரளவு தேசியத் தன்மையுடன் விளங்குகின்றன. ஆயினும் இப்பல்கலைக்கழகங்களில் பயிலும் மலையக மாணவர் தொகை மிகவும் குறைவு. மலைநாட்டிலும் அதற்கு அண்மையில் கொழும்பிலும் காணப்படும் இவ்விரு பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மொத்த மாணவர் தொகை 13500 (1992/1993) ஆகும். இவர்களில் மலையக மாணவர் தொகை 100க்கு மிகக்குறைவானதே. அதிகாரபூர்வ அறிக்கைகள் மலையக மாணவர்கள் பற்றிய விரபங்கள் எதுவும் தருவதில்லை என்பதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதி விபரம் பின்வருமாறு:

* மொத்த மாணவர் அனுமதி – 7241 (சகல பல்கலைக்கழகங்களும்)
* தமிழ் மாணவர் தொகை – 756
* கொழும்புப்பல்கலைக்கழகம் – 69
* பேராதனைப்பல்கலைக்கழகம் – 155
* யாழ். பல்கலைக்கழகம் – 339
* கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகம்– 116

இவ்விரு பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்ற 224 தமிழ்மாணவர்களில் மலையக மாணவர் தொகை மிகச் சிறியதே!

இத்தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் பின்னர் உருவாகிய பல்கலைக்கழகங்கள் இன ரீதியாகவும் பிராந்திய ரீதியாகவும் எழுந்த கோரிக்கைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டவை! 1958இல் பௌத்த உயர்கல்வியை வழங்கி வந்த இரு பிரிவேனாக்கள் வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்களாக உருவாக்கப்பட்டன. பின்னர் 1974இல் யாழ். பல்கலைக்கழகமும் அதன் பின்னர் ருகுணு பல்கலைக் கழகமும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டன. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியும், ரஜரட்டை, சப்பிரகமுவா ஆகிய இரு பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்பட்டன. தேசிய பல்கலைக்கழக அமைப்பு நாட்டின் பிராந்திய ரீதியான உயர்கல்வித் தேவைகளை நிறைவு செய்யப் போதாது என்ற நிலையில் பிராந்திய ரீதியாகப் புதிய பல்கலைக்கழகங்கள் தோன்ற வேண்டிய அவசியத்தை இப்புதிய பல்கலைக்கழகங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பேராதனை தவிர ஏனைய பல்கலைக்கழகங்கள் கொழும்பையும் அதனைச் சுற்றியும் அமைந்திருந்த நிலைமை நீங்கி, உயர்கல்வி வாய்ப்புகளும் அமைப்புகளும் வடக்கு, கிழக்கு, தெற்கு தென்கிழக்கு எனத் தூரப்பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அதிகாரபூர்வமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும் தேசிய உயர்கல்வி அமைப்புக்களே! ஆயினும் மாணவர் அனுமதி, விரிவுரையாளர் தெரிவு, பாட ஏற்பாடு, உயர்மட்ட முகாமைத்துவம் என்பவற்றில் பிராந்தியச் சாயல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

சென்ற அரசாங்க காலத்தில், மாகாணங்கள் தோறும் அமைக்கப்பட்ட இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிகளும் உயர் கல்விக்கான பிராந்தியரீதியான தேவைகளையும் கோரிக்கைகளையுமே எடுத்துக் காட்டுகின்றன. வட, கிழக்கு மாகாணங்களிலும் முஸ்லீம்கள் வாழுகின்ற பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் கல்லூரிகளும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களும் இத்தேவைகளையே எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினர்களைப் பொறுத்தவரையில் பிராந்திய ரீதியான இவ்வுயர் கல்வி நிறுவனங்கள், அவர்கள் பிறரின் தலையீடின்றி தமது கல்வி வளர்ச்சியைப் பேணிக் கொள்ள உதவுகின்றன. அவர்கள் சார்ந்த வரலாறு, கலாசாரம், இலக்கியம், சமூகவியல், சமயம், புவியியல், பொருளாதார, அரசியல் பரிமாணங்கள் என்பவை பற்றிய ஆராய்ச்சி மற்றும் எதிர்கால செயற்றிட்டங்களுக்கு இவ்வுயர்கல்வி அமைப்புகள் உதவும் வாய்ப்பு உண்டு.

சிறுபான்மையினர் பற்றிய இச் செயற்றிட்டங்களில் தேசிய பல்கலைக்கழகங்கள் ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்ட இயலாத நிலையில், பிராந்தியப் பல்கலைக்கழகங்கள் சிறுபான்மையினருக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கும் அதேவேளையில் அவை அவர்களுடைய சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்கான உந்து சக்தியாகவும் விளங்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆம் நூற்றாண்டில் மலையகப் பல்கலைக்கழகம்?

இலங்கையில் 1942ஆம் ஆண்டில் முழு அந்தஸ்துடைய முதலாவது இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப் பட்டு 55 ஆண்டுகள் ஓடிவிட்டன. இக்காலப் பகுதியில் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பல்கலைக்கழகக் கல்வி பல புதிய பரிமாணங்களையும் புத்தாக்கங்களையும் கண்டுள்ளது. இலங்கையில், சகல பிராந்தியங்களையும் சேர்ந்தவர்கள் பயிலக்கூடிய தேசிய பல்கலைக் கழகம் என்ற அமைப்பைக் கடந்து பிராந்திய ரீதியான கோரிக்கைகளின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு (யாழ். கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகங்கள்) தென்கிழக்கு (தென் கிழக்குப் பல்கலைக்கழகம்) தெற்கு (ருகுணு பல்கலைக்கழகம்) தென்கிழக்கு (தென் கிழக்குப்பல்கலைக்கழகம்) ஆகிய பிராந்தியங்களில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன, இதனைத் தொடர்ந்து வட மத்திய, சப்பிரகமுவ மாகாணங்களில் இரு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஊவாவிலும் ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்கும் திட்டம் உண்டு. இவற்றை விட பொறியியல் தொழில் நுட்பத்துக்கென்று விசேடமாக மொறட்டுவை பல்கலைக்கழகம் உருவாகியுள்ளது. க.பொ.த. உ/நி மாணவர் தொகுதிக்கு அப்பால், பாடசாலைக் கல்வி, உயர்கல்வி என்பவற்றை இடையில் கைவிட்டவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்க திறந்த பல்கலைக்கழகம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாரிய இலங்கைப்பல்கலைக்கழக அமைப்பில் சேர்ந்து பயின்று நன்மை பெறுவோர் விபரம் பின்வருமாறு: ;

மொத்த பல்கலைக்கழக மாணவர்கள் 32,000 பேர்(1993-94); இவர்களில் கலைப்பிரிவில் 10,000 பேரும் வர்த்தகவியல். முகாமைத்துவத் துறையில் 6000 பேரும் விஞ்ஞானப் பிரிவில் 5500 பேரும் மருத்துவத்துறையில் 4400 பேரும் விவசாயத் துறையில் 2700 பேரும் சேர்ந்து பயிலுகின்றனர். 1994 இன் பின்னர் மூன்று பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளமையினால் மொத்த தொகை 32,000 இலிருந்து 40,000 வரை அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு, தற்போது 9000-10000 ஆகவுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டனுமதி 15,000 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இப்பட்டதாரி மாணவர் தொகையுடன் கலை, முகாமைத்துவம், கல்வியியல், விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல் ஆகிய துறை சார்ந்த உயர்பட்ட நெறிகளைப் ( Post graduate) பயிலும் 3100 மாணவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதனைவிட சுதேசமருத்துவம், அழகியல், கணனி விஞ்ஞானம், தொழிலாளர் கல்வி ஆகிய துறை சார்ந்த விசேட நிறுவனங்களில் 2200 (1995) பேர் பயிலுகின்றனர்.

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆங்கிலம், முகாமைத்துவம், கல்வியியல், விஞ்ஞானம், சட்டம், முதலிய பயிற்சி நெறிகளில் 20,000 பேர் (1994/1995) வரை சேர்ந்து பயிலுகின்றனர்.

மேலும், கொழும்பு, பேராதனை, களனி போன்ற பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப்பட்டப் பிரிவில் 1993– 1975 காலப்பகுதியில் எல்லாமாக 76000 பேர் வரை பதிவு செய்துள்ளனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மட்டும் பதிவு செய்துள்ளோர் தொகை 54,700 ஆகும்.

இத்தகைய புள்ளிவிபரங்கள் விரிவான பல்கலைக்கழக அமைப்பொன்றைப் பிரதிபலித்தாலும் உண்மையில் உயர் கல்வி வயதெல்லை மாணவரில் (18–23 வயது) 2 சதவீதத்துக்குக் குறைவானவர்களே உள்வாரி மாணவர்களாகப் பல்கலைக்கழகங்களில் பயிலுகின்றனர். இவ்வகையில் தென்னாசிய நாடுகளின் வீதம் 5 ஆகவும் (இந்தியா, பாகிஸ்தான்) கிழக்காசிய நாடுகளில் 8 ஆகவும் மேற்கைரோப்பாவில் 25 ஆகவும் ஐக்கிய அமெரிக்காவில் 60 ஆகவும் உள்ளது. இவ்வகையில் இலங்கையின் சாதனை மிகக் குறைவு.

1994/95 இல் இலங்கையில் பல்கலைக்கழக அனுமதி பெறத்தகுதி பெற்ற 55,000 பேரில் 14.5 வீதமானவர்கள் (8015 பேர்) மட்டுமே இறுதியில் அனுமதி பெற்றனர். 1990/91இல் அனுமதித்தகுதி பெற்றோரில் 20.9 வீதமானவர்களும் 1992/93 இல் 15/5 வீதமானவர்கள் மட்டுமே இவ்வாறு இறுதி அனுமதி பெற்றனர். இத்தகைய அனுமதிக் கட்டுப்பாடுகளுக்கிடையே மேற்கண்ட முறையில் இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சி கண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளகளாவிய ரீதியில் நீண்ட கால மரபுவழிப்பல்கலைக்கழக முறைக்கு அப்பால் இந்தியாவில் கிராமியப் பல்கலைக்கழகங்கள், சர்வதேசரீதியில் ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம், பெண்கள் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தமிழ் நாட்டில் தமிழ் பல்கலைக்கழகம், இலங்கையில் பௌத்த பாளி பல்கலைக்கழகம் என்ற முறையில் பல்கலைக்கழக கல்வி புதிய வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது. பாரம்பரியமான பல்கலைக்கழகத் தொழிற்பாடுகளான கற்பித்தல், ஆராய்ச்சி (Teaching & Research) என்பவற்றுடன் தொழில்சார் கல்வி, மேற்தொடர்கல்வி (Continuing Educatiion), விஸ்தரிப்புப் பயிற்சி (Extension Course) என்ற புதிய அம்சங்களையும் பல்கலைக்கழகங்கள் இணைத்துக் கொண்டன, பொருளாதார முறையின் ஆராய்ச்சிப்பணியில் கைத்தொழில் நிறுவனங்களுடன் பல்கலைக்கழகங்கள் ஒத்துழைத்து வருவதும் ஒரு புதிய அம்சமாகும்.

கைத்தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான அடிப்படை ஆராய்ச்சி, பிரயோக ஆராய்ச்சி, தொழில் நுட்ப ஆராய்ச்சி என்பவற்றைச் செய்வதற்கான ஆய்வாளர்களை மேலை நாட்டுப் பல்கலைக்கழகங்கள் பயிற்றி வருகின்றன. பல்கலைக்கழகம்- கைத்தொழில் துறை ஒத்துழைப்புக்கு இன்று முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

சர்வதேசியரீதியிலும் இலங்கையிலும் பல்கலைக்கழகக் கல்வி இத்தகைய புதிய பரிமாணங்களைப் பெற்று சமுதாய, பொருளாதார மேம்பாட்டுக்கொள்கைகளுடன் இணைந்து செல்லும் வேளையில், மலையகமக்கள் இன்னும் இலங்கையின் பல்கலைக்கழக அமைப்பில் ஒரு சிறு பங்குதாரர்களாகக் கூட இல்லை.

32000 பல்கலைக்கழக மாணவர்களில் 100-200 மாணவர்களாவது மலையகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களோ என்பது சந்தேகமே.

இது பட்ட மேற்படிப்பு பயிலும் 3100 மாணவர்களுக்கும் பொருந்தும். எமது மதிப்பீட்டில் குறைந்த பட்சம் 1500 மாணவர்களாவது மலையகத்திலிருந்து அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறான வளர்ச்சியும் முன்னேற்றமும் இல்லாத நிலையில் மலையக சமூகம் தொடர்ந்து பின்தங்கியே இருக்க நேரிடும். மேலும் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகள் – உயர் கல்வி, வேலைவாய்ப்பு, புதிய தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முன்னேற்றங்கள் – மலையக சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்குமிடையில் வாழ்க்கைத் தரம் கல்வித் தேர்ச்சி என்பவற்றில் காலம்காலமாகக் காணப்படும் இடைவெளியை மேலும் விரிவடையச் செய்து விடும். இலங்கையில் முன்னேறிய சமூகங்களுக்குக் கைகட்டிச் சேவகம் புரியும் பாட்டாளிகள் சமூகம் என்ற பொறியில் மலையக சமூகம் நிரந்தரமாக மாட்டும் போக்குகளை அவதானிக்க முடிகின்றது. இன்று பிற சமூகங்களைப் பொறுத்த வரையில் ஆண்டுக்கு 5000 பட்டதாரிகளும் தகவல் தொழில் நுட்பம், சட்டம், கணக்கியல் போன்ற துறைகளில் ஆயிரக்கணக்கானோரும் தேர்ச்சி பெற்று வருகின்றனர். பிற சமூகங்களின் உயர்மட்ட வகுப்பினர் இன்றுள்ள தாராள பொருளாதாரக் கொள்கையைப் பயன் படுத்தி வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயின்று வருகின்றனர். ஆனால் மலையகத்தில் க.பொ.த. உ/த தகுதியுடையோரைக் கூட அதிக தொகையில் காணமுடியவில்லை.

கல்வித் துறையில் நீண்ட காலமாகப் பின்தங்கியிருந்த கிழக்கிழங்கை, வட மத்திய மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் போன்ற பகுதிகளில் கடந்த தசாப்தங்களில் பாடசாலைக் கல்வியில் குறிப்பாக க.பொ.த உ/நி மட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக அப்பகுதிகளில் 20 ஆம் நூற்றாண்டு முடிவடையும் முன்னரே பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டு விட்டன.

**பல்கலைக்கழக மாணவர் அனுமதி 1993/94**

| | | | |
|---|---|---|---|
| 1. மட்டக்களப்பு மாவட்டம் | | – | 168 |
| 2. அம்பாறை | ,, | – | 204 |
| 3. இரத்தினபுரி | ,, | – | 298 |
| 4. அனுராதபுரம் | ,, | – | 226 |
| 5. பொலநறுவை | ,, | – | 101 |
| 6. திருகோணமலை | ,, | – | 106 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மாணவர் அனுமதியில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டமையினால்தான், அப்பகுதிகளின் புதிய பல்கலைக்கழகங்களுக்கான கோரிக்கைகள் நிறை வேற்றப்பட்டன. மேலும் ஒரு மாகாண அல்லது பிராந்திய பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டால் ஆண்டுக்கு 300–400 பேராவது அப்பகுதியிலிருந்து அனுமதி பெறத் தகுதி பெற வேண்டும். இவ்வகையில் யாழ். பல்கலைக்கழகம், கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகம் என்பவற்றின் மாணவர் அனுமதி விபரங்களைப் பார்ப்பது பொருத்தமாகும்.

**பல்கலைக்கழக மாணவர் அனுமதி 1993/94**

| | மாணவர் அனுமதி | | |
|---|---|---|---|
| | 1991/92– | 1992/93– | 1993/94 |
| 1) யாழ் பல்கலைக்கழகம் | 858 | 340 | 472 |
| 2) கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் | 256 | 141 | 298 |

இன்றைய நிலையில் மலையகத்தில் 9 ஏபி பாடசாலைகளையும் 2000 க்கும் குறைந்த தொகையான க.பொ.த.உ/நி மாணவர்களையும் வைத்துக் கொண்டு நாம் 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் கூட மலையகப் பல்கலைக்கழகம் பற்றி சிந்திக்க முடியாது. பல்கலைக்கழக அனுமதித் தகுதிகளை ஆண்டு தோறும் 500–600 மாணவர்கள் பெறும் வகையில் மலையகத்தின் 1 ஏபி பாடசாலைகள் என்பன வலுப்படுத்தப்படல் வேண்டும்.

**க.பொ.த உ/நி பரீட்சை/ மலையக மாணவர் விபரம்- 1990-1996**

| | |
|---|---|
| 1. இலங்கையில் க.பொ.த. உ/நி பரீட்சைக்கு அமரும் மாணவர் | 150000 |
| 2. மலையக மாவட்டங்களில் க.பொ.த. உ/நி பரீட்சைக்கு அமரும் தமிழ் மாணவர் | 1992–460 பேர்<br>1996–586 பேர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | 1996 | |
|---|---|---|---|
| 3. 1996– பாடவகைப்படி உ/நி பரீட்சைக்கு அமர்ந்த மலையகத் தமிழ்மாணவர் | கலை | வர்த்தக வியல் | விஞ்ஞானம் |
| | 247 | 247 | 92 |
| 4, 1991–1996 வரை உ/நி பரீட்சைக்கு அமர்ந்த மலையக மாணவர் | கலை | வர்த்தக வியல் | விஞ்ஞானம் |
| | 1014 | 1623 | 531 |
| 5. 1991–1996 பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர் | கலை | வர்த்தக வியல் | விஞ்ஞானம் |
| | 497 | 691 | 82 |
| –சித்தியெய்திய மாணவர் வீதம் | 75.4, | 69.9, | 31.2 |

ஆதாரம்: சி. நவரட்ன, பெருந்தோட்ட தமிழ் பாடசாலைகளில் ஆரம்ப இடைநிலக்கல்வி, சமூக அபிவிருத்தி நிறுவன கருத்தரங்குக் கட்டுரை

கல்வி அமைச்சில் மலையகப்பாடசாலைகளுக்கு பொறுப்பான செயற்திட்ட பணிப்பாளர் திரு. சி.நவரட்ன அவர்களுடைய கணிப்பீட்டின் படி

- 1996 இல் 54 நுவரெலிய மாவட்டப் பாடசாலைகளிலிருந்து க.பொ.த சா/நி பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களில் 484 பேர் மட்டுமே க.பொத. உ/நி வகுப்புகளில் பயிலத் தகுதி பெற்றனர். முன்னைய ஆண்டை விட 16 பாடசாலைகளின் பெறுபேறுகளில் முன்னேற்றங் காணப்படுகின்றது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா மாவட்டத்தின் பெறுபேறுகளை விட பிற மாவட்டங்களில் (கண்டி, மாத்தளை, பண்டாரவளை) இப்பெறுபேறுகள் தொகையளவில் (484ஐ விடக்) குறைவாகவே இருக்கும்.
- 1994 இல் சகல மலையக மாவட்டங்களிலும் க.பொ.த.உ/நி வகுப்புகளில் பயின்ற மாணவர் தொகை 1375 மட்டுமே. இத்தொகை 7000–9000 வரை இருத்தல் வேண்டும். இவர்களில் 50 சதவீதமானவர்கள் (672பேர்) நுவரெலியா மாவட்ட மாணவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சிறீநவரட்னவின் ஆய்வின் படி 1996 இல் 24 மலையகத்தமிழ் பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறத் தகுதி பெற்றவர்கள் தொகை 344.

ஆனால் இவர்களில் யாவரும் இறுதியில் அனுமதி பெற்றதாகக் கொள்ள முடியாது. இதில் கூடிய பட்சம் 40 வீதமானவருக்கு இறுதி அனுமதி கிடைத்திருந்தால் 150 பேர் மட்டுமே அனுமதி பெற்றிருப்பர்.

சுருங்கக் கூறின், மலையகப் பல்கலைக்கழகக் கோரிக்கையை உறுதியுடன் முன்வைக்க உடனடியாக க.பொ.த உ/நி வகுப்புகள் வலுப்படுத்தப்படல் வேண்டும். பல்கலைக்கழகத்தின் தோற்றத்துக்கான அடியமைப்பு இவ்வகுப்புகளேயாகும். ஆசிரியர். பெற்றோர்கள், கல்வி அதிகாரிகள், மலையக அரசியல் தலைமைப் பீடங்கள் என்போர் ஒன்றிணைந்து தனித்த பல்கலைக்கழகமொன்றைக் கோருவதற்கான அடிப்படைக் கல்வித் தேர்ச்சியை மேம்படுத்த செயற்றிட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். 21 ஆம் நூற்றாண்டின் முதற் தசாப்தத்தின் முற்பகுதியிலாவது இக்கோரிக்கையை உறுதியுடன் முன் வைக்கு முகமாக எமது க.பொ.த. உ/நி வகுப்புகளின் கற்பிக்கும் ஆற்றலை வலுப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பிரச்சினைகளும் நியாயமான பாரபட்சக் கொள்கையும்

இலங்கையில் கடந்த 160 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் இந்திய வம்சாவழித் தமிழர்களான மலையக மக்கள், நாட்டின் ஏனைய சமூகத்தவரைவிட எழுத்தறிவு, ஆரம்ப, இடைநிலை, உயர் இடைநிலைக் கல்வி மட்டம், பல்கலைக்கழகக் கல்வி என்பவற்றில் பின்தங்கியுள்ளமை பற்றி மீண்டும் மீண்டும் புள்ளி விபரங்கள் தந்து விளக்க வேண்டிய அவசியமில்லை. 1943 ஆம் ஆண்டின் விசேட கல்விக் குழுவினரின் (கன்னங்கரா குழு) அறிக்கை, பின்னர் வந்த பல கல்விக்குழுக்களின் அறிக்கைகள், கல்வி வெள்ளை அறிக்கைகள், கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் (1961, 1964, 1966, 1972, 1981) மலையக மக்களின் இந்நிலைமை பற்றி மௌனம் சாதித்தன. வாக்குரிமையும் அரசியல் வலிமையும் அற்றவர்களாய் விளங்கிய அம்மக்களின் கல்வி மேம்பாடு பற்றி இவ்வறிக்கைகள் எதுவித ஆலோசனையும் கூறாது அப்போது தப்பிக் கொள்ள முடிந்தது. ஆயினும் ஜனாதிபதி பிரேமதாச காலத்தில் அமைக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு முதன் முறையாகப் பெருந்தோட்ட மக்களின் பின் தங்கிய கல்விநிலையை ஏற்றுக் கொண்டது. என்றாலும் அவர்களுடைய பாடசாலைகள் மட்டுமன்றி ஏனைய சமூகத்தவர் வாழ்ந்தகல்வியிற் பின்தங்கிய பகுதிகள் பற்றியும் இவ்வாணைக்குழுவின் அறிக்கைகளில் (1992, 1996) குறிப்பிடப்பட்டிருந்தது. கல்வியில் பின்தங்கி நிற்கும் தனித்துவமான ஒரு பிரிவினர் மலையக மக்கள் என்ற அங்கீகாரம் அவர்களுக்கு இன்னும் கிட்டவில்லை.

மலையக மக்களின் கல்வி வளர்ச்சிபற்றிய கோரிக்கை, அவர்கள் நாட்டில் வாழும் ஏனைய சமூகத்தவரின் கல்வி மட்டங்களை அடைய வேண்டும் என்பதேயன்றி வேறில்லை. ஏனைய சமூகத்தவர்கள் இன்று கல்வி கேள்விகளிலும் கலாச்சார நிலைமைகளிலும் அடைந்து வரும் தேர்ச்சி, வளர்ச்சி, அதற்கான ஏற்பாடுகள், (உதாரணம்:– 12 தேசிய பல்கலைக்கழகங்கள், 500 க்கும் மேற்பட்ட விஞ்ஞான க.பொ.த.உ/நி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புகளை கொண்ட 1 ஏபி பாடசாலைகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவனம் போன்றன...) என்பவற்றைக் கருத்திற் கொண்டு நோக்கும் போது சில முக்கிய முடிவுகளுக்கு வரமுடியும்.

- ❖ மலையக மக்களுக்கான தற்போதைய கல்வி ஏற்பாடுகள் மாற்றமின்றி அப்படியே நீடித்தால், அவர்களுடைய கல்வி மட்டங்களும் அப்படியே தொடர்ந்திருக்கும்.
- ❖ கல்வி மட்டத்தில் அவர்களுக்கும் ஏனைய சமூகத்தவருக்குமுள்ள இடைவெளி வேகமாக விரிவடைந்து செல்லும்.
- ❖ மலையக மக்களின் கல்வி முன்னேற்றம் மந்தகதியில் ஏற்பட, ஏனையோரின் முன்னேற்றம் துரித கதியில் ஏற்படுவதால் இவ்விடைவெளி பாரதூரமானதாக அமையும்.
- ❖ நாட்டில் உருவாகவிருக்கும் நவீன துறைகள் சார்ந்த புதிய வேலைவாய்ப்புகள் (உதாரணம்: தகவல் தொழில் நுட்பத் துறை) மலையக இளைஞர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு மட்டுமே கிட்டும். மலையக இளைஞர்கள் கல்வித் தேர்ச்சி தேவைப்படாத பயிற்சியற்ற உடல் உழைப்புத் தொழில்களில் (Unskilled & Manual) மட்டுமே சேர்க்கப்படுவர். தற்போது இந்நிலையே காணப்படுகின்றது.
- ❖ 21 ஆம் நூற்றாண்டு அறிவு-மைய அல்லது தகவல்-மைய நூற்றாண்டாகவிருக்கும் எனத் தெரிகிறது. அதில் இசைந்து வாழும் ஆற்றலற்ற சமூகம் என்ற பெயரை மலையக சமூகம் பெற நேரிடும்.
- ❖ பாடசாலை, மற்றும் பல்கலைக்கழக வாய்ப்புகள், நவீன துறை சார்ந்த கண்ணியமான வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையில் வட பகுதியில் தீவிரவாத அரசியல் வலுப் பெற்றமையை சகல ஆய்வறிஞர்களும் இன்று ஏற்றுக் கொள்கின்றனர்.

எனவே மலையக மக்களின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் மிகவிசேடமான கொள்கைகள் வகுக்கப்படல் வேண்டும். அவற்றில் ஒன்று நியாயமான முறையில்* பாகுபடுத்தும் கொள்கையாகும் (Policy of positive discrimination).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கால அரசாங்கங்கள் இரு முக்கிய முரண்பட்ட அரசியல் கோட்பாடுகளில் இணக்கம் காணவேண்டியுள்ளது.

1. சமயம், இனம், சாதி, பால்வகுப்பு என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது சட்டத்தின் முன் யாவரும் சமம் என்னும் கோட்பாடு. இதனடிப்படையில் பின்தங்கிய பிரிவினருக்கு விசேட சலுகைகளை வழங்க முடியாது.

2. சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கோட்பாட்டை அதிகம் கருத்திற் கொள்ளாது பின்தங்கியவர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கி சமூக நீதியை நிலை நாட்டும் கோட்பாடு. இதனடிப்படையில் மலையக மக்கள் போன்ற பின்தங்கிய பிரிவினருக்கு விசேட சலுகைகள் வழங்க முடியும்.

பல உலக நாடுகளில் இரண்டாவது கோட்பாட்டின் அடிப்படையில் பொருளாதாரத்திலும் கல்வியிலும் பின்தங்கிய சிறுபான்மைப் பிரிவினர்களுக்கு நியாயமான பாரபட்சக் கொள்கையினடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கம் அடையாளம் காணும் பின்தங்கிய பிரிவினர்களுக்கு அரசாங்கம் முன்னுரிமைகளையும் சலுகைகளையும் வழங்குவதே இக் கொள்கையின் உட்கருத்தாகும். இக்கொள்கை இன்று சர்வதேசரீதியாகப் பின்பற்றப்படுவதொன்று. 1960 களில் ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பு இனத்தவரின் மேம்பாட்டுக்காக இக்கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது. ஆயினும் தென்னாசியாவில் குறிப்பாக இந்தியாவில் அதற்கு முன்னதாகவே இக் கொள்கை நடை முறைப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் சாதி அடிப்படையில் பல நூற்றாண்டுகளாகப் பாரபட்சங்களை அனுபவித்த பின்தங்கிய, சலுகையற்ற பிரிவினர்களின் மேம்பாட்டுக்கான இக் கொள்கைக்குச் சார்பான ஏற்பாடுகள் அரசியல் யாப்பிலும் சேர்க்கப்பட்டன. சட்டத்தின் முன் யாவரும் சமம் எனப் பிரகடனம் செய்த இந்தியயாப்பு, அரசாங்கம் பின்தங்கிய பிரிவினர்களின் மேம்பாட்டுக்காக வழங்கும் விசேட சலுகைகளை அரசியல் யாப்பின் எப்பிரிவும் தடை செய்ய முடியாது என வலியுறுத்துகின்றது. அரசாங்க வேலை வாய்ப்பு உயர்கல்வி நிலையங்களிலும் சட்ட மன்றங்களிலும் இடங்கள், அரசாங்க உதவி, கடன்கள், அபிவிருத்தி உதவி என்னும் விடயங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் விசேட இட ஒதுக்கீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ளது. 1991 இல் இவ்வகுப்பினர் இந்திய மக்கள் தொகையில் 24 வீதத்தினராக இருந்தனர்.

1970 முதல் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள் ஆரம்பத்தில் சிங்கள பெரும்பான்மையினருக்குக் கூடிய வாய்ப்புகளை வழங்கும் 'நியாயமான பாரபட்சக் கொள்கையாக' விபரிக்கப்பட்டது. மருத்துவம், பொறியியல் மற்றும் விஞ்ஞானத்துறைகளில் அக்காலத்தில் அனுமதி பெற்ற இலங்கைத் தமிழ் மாணவரின் தொகை அவர்களுடைய சனத்தொகை வீதத்துக்கு (12%) அதிகமாக இருந்தமையால் (35%) புதிய நடவடிக்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இவை நேரடியாக சிங்கள மாணவர்களுக்குச் சலுகைகளை வழங்கியமையால் இலங்கைத் தமிழர்களின் கடும் எதிர்ப்பைப் பெற்றன. ஆயினும் அக்காலப்பகுதியில் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புகளைப் பெறாத இந்தியத் தமிழ் மாணவர்களின் பிரச்சினை கருத்திற் கொள்ளப்படவேயில்லை.

பின்னர் அனுமதிக் கொள்கைகள் இனரீதியான முன்னுரிமையாகவன்றி பின்தங்கிய பிராந்தியங்களுக்குச் சலுகைகளை வழங்கும் முறையில் மாவட்ட ரீதியான அனுமதிமுறையை அறிமுகம் செய்தன. 1970 முதல் அறிமுகம் செய்யப்பட்ட அனுமதிக் கொள்கைகள் தரப்படுத்தல், மாவட்டரீதியான அனுமதி, பின்தங்கிய மாவட்டங்களுக்கான அனுமதி என்று பலவகைப்பட்டவை. இவை திறமை சித்தியை விடுத்து பின் தங்கிய மக்களுக்குச் சலுகை வழங்குவனவாக அமைந்த போதிலும், உயர்கல்வியில் மட்டுமன்றி எழுத்தறிவிலும் பாடசாலைக்கல்வியிலும் கூடப் பின்தங்கியிருந்த இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதுவித நன்மைகளையும் வழங்கவில்லை, அவர்களுடைய பற்றாக்குறையான கல்விவாய்ப்புகளை விரிவு செய்யும் நியாயமான பாரபட்ச கொள்கைகள் எவையும் அவர்களுக்கென விசேடமாக வகுக்கப்படவில்லை.

இன்று பெருந்தோட்டக்கட்டமைப்பு அமைச்சொன்று நிறுவப்பட்டு பெருந்தோட்டத் தமிழ் மக்களின் கல்வி, கலாசார, சுகாதார மற்றும் அடியமைப்பு வசதிகளில் அக்கறை செலுத்தும் நிலைமை உருவாகியுள்ளது. இந்நிலையில், பாடசாலைக் கல்வி, உயர்கல்வி (பல்கலைக்கழகம், ஆசிரியர் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைவாய்ப்பு என்பவை தொடர்பாக இந்திய வம்சாவழித் தமிழர்களின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்ட விசேட நியாயமான பாரபட்சக் கொள்கையொன்றை நோக்கி அவர்களுடைய தலைமைத்துவம் செயற்பட வேண்டும். தற்போதைய நிதி ஒதுக்கீடு குறிப்பாக பாடசாலைகள், பெருந்தோட்டப்பகுதியில் உள்ள அரச மருத்துவ நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடு என்பன கடந்த கால இழப்புகளை ஈடு செய்யும் வகையில் உரியதை விடக் கூடுதலாக அமைதல் வேண்டும். பல்கலைக்கழகக் கல்வி மற்றும் உயர்கல்வி நிலையங்களுக்கான அனுமதியில் குறைந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் கூடுதல் இட ஒதுக்கீடுகள் சனத்தொகை வீதப்படி (5.5%) அல்லது 10 வீதம் வரை ஒதுக்கப்படல் வேண்டும். அரசாங்க வேலை வாய்ப்புகளிலும் இவ்வாறான நடைமுறை கையாளப்படல் வேண்டும். இத்தகைய முறையில் விசேட ஏற்பாடுகள் செய்யப்படாவிடில் இந்திய வம்சாவழித் தமிழர்கள் திறந்த போட்டி முறையில் ஏற்றங்காண முடியாது. கல்வியில் பல தசாப்தங்களாகப் பிற்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்ட அவர்கள் திறந்த போட்டிகளில் ஏனையோருடன் சமமாகப் போட்டியிடுவது என்பது முடவனை சுகதேகிகளுடன் ஓட்டப் போட்டியில் சமநிலையில் வைத்துப் போட்டியிடச் செய்வதற்கு ஒப்பானதாகும். இந்நிலை தொடர்ந்து நீடித்தால் மற்றவர்கள் 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர் நோக்கும் வாய்ப்புகளையும் ஆற்றல்களையும் பெறும்போது பெருந்தோட்ட இந்தியர்கள் 19 ஆம் நூற்றாண்டை நோக்கி மீள்பயணம் செய்ய வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிறநூல்கள்

1. இலங்கை இந்தியர் வரலாறு(1989) : வைரவன் பதிப்பகம், மதுரை

2. கல்வியியல் கட்டுரைகள்(1991) : சூடாமணி பதிப்பகம், சென்னை 33

3. இலங்கையின் கல்வி வளர்ச்சி(1993): சூடாமணி பதிப்பகம் சென்னை 33

4. இலங்கையிற் கல்வி (1993) : கவிதா பதிப்பகம், மதுரை–20

5. கல்வியும் மனித மேம்பாடும் (1993) : கவிதா பதிப்பகம், மதுரை 20

6. கல்வியியல் கட்டுரைகள் (1997) : பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு

7. இலங்கையின் கல்வி வளர்ச்சி (1995): கவிதா பதிப்பகம், மதுரை 20 (இரண்டாம் பதிப்பு)

8. புதிய நூற்றாண்டுக்கான கல்வி (1995) : தர்ஷனா, பதிப்பகம், கொழும்பு–06

9. கல்வி வளர்ச்சிச் சிந்தனைகள் (1995) : கவிதா பதிப்பகம், மதுரை–20

10. கல்விச் செயற்பாட்டில் புதிய செல் நெறிகள் (1996) : கவிதா பதிப்பகம், மதுரை 20

11. EDUCATION OF DISADVANTAGED COMMUNITIES IN SOUTH ASIA (1997) : கல்வி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Bibliography

1 Balasuriya T.(1978), " Education of Estate Population of Indian Origin", Logos, 17 (7), Center for Religion and Society, Colombo.

2 Chandrasegaram, P.(1968) The Education of Plantat ion Workers Children, The Co- operator, Jaffna May 1 & 15 (1968)

3 Chelliah,S. Estate Schools in Ceylon - a national scandel, Young Socialist, Oct- Dec:1961 pages 160-164

4 Central Bank of Ceylon, Consumar Finance Survey, 1981/ 1982, (1983) Colombo.

5 Dept of Census and Statistics, Census of Population, General Report - 1981 Vol.1,(1983) (Colombo)

6 Fernando W.N, (1980) Continuity and Change in Plantation Agriculture: A Study of Sri Lanka's Land Reforms, Ph.d.Thesis, Wisconsin University.

7 Gnanamuthu G.A., (1977) Education and the Indian plantation Worker in Sri Lanka, Colombo.

8 Govindaraj, M., The law relating to education on estates in Ceylon, Journal of the NESC vol xii & xvi, 1964.

9 Jayasuriya J.E, (1969) Education in Ceylon before and after Independence ( 1939-1968) Colombo.

10 Jayasuriya J.E, (1964) Some Issues in Education,Peradeniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 Kurian Rachael ( 1981), The Position of Women Workers in the Plantation Sector in Sri Lanka, ILO, working paper, (Geneva).

12 Manikkam, P.P. (1995) Tea Plantations in Crisis, An Overview, Social Scientists Asso, Colombo.

13 Sandarasegaram S.(1985) Education of the Indian Tamil Community, Int. Centre for Ethnic studies, Colombo.

14 Sandarasegaram S.(1986) Educational needs of the plantation community: A survey, GTZ & Ministry of Education ( mimio)

15 Sessional paper ( XVII - 1962) Final report of the National Education commission.

16 Sumathipala K.(1968) History of Education in Ceylon in Colombo.

17 Wanasinghe S. The private sector in education( part 3) Young Socialist, Vol 5, No 2, pages 48-55.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினர் ஆசிரியர் கலாசாலை
நூலகம்
இல.........................
கொட்டகலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

W ® Willing
I ® Ingenious
N ® Noble
N ® Novel
E ® Energetic
R ® Resourceful
S ® Sensible

**WINNERS (Pvt)**

**30, Nihal Silva Mawatha,**
**Kirulapone,**
**Colombo-06,**
**Sri Lanka.**
**Hot line: 077-322684**

for
Graphics, Translation, Typesetting,
Printing & Publishing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந் நூலாசிரியர் பற்றி



பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரன் இன்று இலங்கையிலுள்ள கல்வியாளர்களுள் முதன்மை அணியைச் சேர்ந்தவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, பேராதனைப் பல்கலைக்கழகம், யப்பான் ஒசாக்கா அயல்மொழிப் பல்கலைக்கழகம், ஹிரோஷிமா பல்கலைக்கழகம் எனப் பன்முகவளக் கல்வியைத் தனதாக்கியவர். 30 வருடங்களாகக் கல்வியைப் போதித்து வரும் இவர் தற்போது கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் சமூக விஞ்ஞானத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்; ஐக்கிய அமெரிக்காவின் ஒபர்ன் பல்கலைக்கழகத்திலும் (Auburn University, Alabama) சில காலம் அதிதிப் பேராசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியர் சந்திரசேகரன் ஏற்கனவே பத்துக்கும் மேற்பட்ட கல்வியியல் நூல்களை வெளியிட்டு ஆசிரிய குலத்தின் அறிவுக் கண்ணுக்கு மிகப் பரந்த புதிய வழிமுறைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். இவரது ஆய்வுக் கட்டுரைகள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரசுரமாகியுள்ளன.

வெறுமனே புத்தகக் கல்வியூடாகச் சிந்திக்க மறுக்கும் அறிஞராக, அன்றாட சமூக, அரசியற் பிரச்சினைகளில் தோய்ந்தெழுந்து பல்வேறு மட்டங்களிலும் ஆலோசகராக மிளிர்பவர் இவர். சந்திரசேகரன் சிறந்த மானிடநேயன். அறிவியற் கண்ணோடு அணுகிடும் போது இவரது ஆக்கங்களில் இந்த நேயத்தின் சாயலைத் தரிசிக்கத் தவற முடியாது. எந்தவித பேதங்களுக்கும் அப்பாற்பட்ட இனிய நெஞ்சின் சொந்தக்காரரான இவர் இருக்கும் இடத்தில் கலகலப்பு கரைகட்டி நிற்கும். கருத்துக்களும் வஞ்சமின்றிப் பரிமாறப்படும்.

சார்க் நாடுகளின் கல்வியியல் ஆராய்ச்சிச் சஞ்சிகையின் ஆசிரியபீட ஆலோசகராகவும், ஆசிரியர் கல்வி அதிகார சபையின் உறுப்பினராகவும் அண்மையில் நியமனம் பெற்ற சந்திரசேகரன், இன்னும் பல நூல்களை வெளியிட்டு இளந்தலைமுறைக்கு ஏற்ற வழிகாட்டுவார் என்று நம்பலாம். இலங்கைக் கல்வியுலகு இ... பட்ட கடன் ஏராளமே.

— வி.ரி.ச...
சட்டவியல் முதுநிலை ...
கொழும்புப் ப...

ISBN: 955-96667-00-3

printed by Winners (PVT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org